R. R. No. 12[illegible]

Q23:38-21193.TR
NO7
58206

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ பஞ்சநதமான்மியம் என்னும்

# திருவையாற்றுப்புராணம்.

இஃது

தஞ்சை கரந்தையம்பதி

பிரமஸ்ரீ வெங்கடராமசாஸ்திரியாரவர்களால்

வடமொழியினின்று மொழிபெயர்த்ததை

ஷை கரந்தையம்பதி

சிவராமபிள்ளையவர்கள் குமாரர்

சிவ. சோலைமுத்துப்பிள்ளையவர்களால்

இனிய நடையில் எழுதி

தஞ்சாவூர் வக்கீல் குமாஸ்தா

கோ. பொன்னுசாமி பிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

தஞ்சை

ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

Copy Right Registered.

1907.

THE REGISTRAR OF ... REGISTERED ... 1907 MADRAS

Q23:38.2119З.TR
NO7
58706



கடவுள் துணை.

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ பஞ்சநதக்ஷேத்திரமான்மியம்

என்னும்

# திருவையாற்றுப்புராணம்.

காப்பு.

சீர்பூத்தசரன்மறையோடாறங்கமுதற்கலைகடெளிவோதிப்
பார்பூத்தபிரமனைப்பூசுரர்வாழையாற்றிற்பரமன்சேயென்
நேர்பூத்தவுலகேத்தக்குடிலையுறுபொருளளித்தெவர்க்குமெட்டாக்
கார்பூத்தகொன்றைமுடியாதிவிநாயகனிருதாடலைமேற்கொள்வாம்.

## பாயிரம்.

### கடவுள்வாழ்த்து.

### பஞ்சநதீஸ்வரப்பெருமான்.

[illegible]முதலோர்பரவியும்வேண்டேன்பிஞ்ஞகா துயரகற்றென்னத்
[illegible]முடன்பொன்னிபடித்துமுக்காலுஞ்சென்னிமேலிருகரக்குவித்தே
அரவொலியெழப்போர்க்கினியநாகத்தையளித்துயர்முத்திவீடுதவும்
பரமனும்பஞ்சநதிச்சுரனிருதாள்பணிந்துநம்வினையகற்றுதுமே.

### அறம்வளர்த்த நாயகி.

[illegible]டைகற்றிருபொருள்களையுமும்பர்போற்றியிருவரையும்
[illegible]த்துக்கன்னிபென்றுயர்வாகாண்மைநபுகன்றுநின்றேத்தப்
பலவித[illegible]வழியிற்பயின்றஜீவர்க்கருள்பதித்தே
[illegible]முத்திபேற்றினையுதவுமறம்வளர்த்தவளடிபணிவாம்.

### ஆட்கொண்டேஸ்வரர்.

மறையவர்குலத்திற்றோன்றிநால்வேதவரம்புணர்த்தவ்வழியொழுகித்
[illegible]ந்தெய்ப்பெயரோன்றனக்குறுமெய்யயமீபாக்கி
[illegible]யுமையாற்றிஇன்முகன்மாவ்பணிந்தேத்த
[illegible]ட்கொண்டேஸ்வரப்பெருமானுபயதாண்மலர்பணிந்துய்வாம்.

### ஓலவிநாயகர்.

[illegible]ன்சிறந்திருபொருளிற்கைவிஞஞ்சேர்த்தைபோக்காது
[illegible]த்தவடிபவர்புகழைப்பாடிசுராவலூரர்ப்பெருமான்
[illegible]ச்சேறிசைப்பான்கோ இலாபோவமென்றுரைக்க
[illegible]ன்றமேல்வந்தளித்தின்னைகமலர்முடிமிசையணிவாம்.

### [illegible]மணியர்.

[illegible]ருளானைநறவதிலாப்படைப்பு
[illegible]யத்தலையென்றேமலரயன்றனைச்சிறையிருத்தித்
[illegible]வாளைத்துணைத்துசாந்தியப்பொருளென்ன
[illegible]த்துச்சாயிதாப்போர்மேவியவேளடிபணிவாம்.

### நந்திதேவர்.

[illegible]தாமுனிவன்னிறைதவப்பேற்றிஇல்மகவாய்ப்
[illegible]பெருக்கியும்பிறுகன்திருமுனமுணர்ந்தீத
[illegible]ஆகுல்பணிந்திக்ன்றேத்தப்
[illegible]புரப்பணிவாம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## முகவுரை.

[illegible]

னூல் பிரசித்தியாகுங்காலம் கைகூடவே எனக்கு நீண்டகாலமாய் ஆப்த நண்பராயும், சிவபக்தி, அடியார்பக்தி முதலியவைகளில் நிறைந்த விசுவாசமுடையருமாகிய பொன்னுசாமிபிள்ளையவர்கள் ஓர் தினத்தில் இந்நூலை உலக உபகாரமாக அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் தன்னிடத்தே நீண்டகாலமாய்க் குடி கொண்டிருக்கின்றதெனவும், அதற்கோர் வழி காணப்படவில்லையே யெனவும் என்னிடத்தே தெரிவித்து எவ்விதத்தேனும் என் கோரிக் கையை முடித்து வைத்தல் வேண்டுமென்று சிவ புண்ணியத்தே நிறைந்துள்ள தன் மனதுக்கந்த எடுத்துக் கூற, அதனைக் கேட்ட வுடனே யான் பஞ்சநதேசப்பெருமான் திருவருளை வியந்து விஷயத் தைத் தெரிவிக்கப் பிள்ளையவர்கள் ஆனந்தவெள்ளத்தில் மூழ்கி அச் சிடுவித்தற்கான பொருளுதவியைச்செய்ய, என் சிற்றறிவிற்கெட்டிய வாறு முன் எழுதிவைத்துள்ளதை சீர்திருத்தி அச்சிடுவித்தேன். இந்நூல் எம்பெருமான் அடியார்க்கருள்புரிந்த திருவருள் விலாசத் தை விளக்கக்கூடியதாதலின் புலவர் பெருமான் அனைவரும் எனது சொற்களில் ஏதேனும் வழுவுள்ளதாயினும் அதனை நோக்காது செம் பொற்சோதீஸ்வரப் பெருமான் அருள்விளையாட்டினிடத்து நோக்க முடையாராய் ஆனந்தவெள்ளத்தில் மூழ்கி பெறும்பேற்றினைப் பெற் றுய்வர்.

திருச்சிற்றம்பலம்.

இங்ஙனம்

சிவ. சோலைமுத்துப்பிள்ளை.



## சப்தமாதர்கள்.

தந்தாமென்சரண்புகுதுமடியவர்கட்கினியவரந்தந்துமேவும்
விந்தைபுகழ்பிராமிமிளிர்மகேஸ்வரியழகுமிகுகௌமாரி
மஞ்செழிநாராயணிவராகியிந்திராணிமகிழ்காளியென்னும்
எஞ்சலிலாக்கருணைபொழியன்னையராமெழுவர்பதமிறைஞ்சிவாழ்வாம்.

## திருமகள்.

அருள்பொழியுந்தன்றுணைவனிரக்ஷிக்குந்தொழிலினிதாயாகிமேவக்
கருணையுடனெவர்க்கெனினுநல்வினைவந்துறுங்காலைக்காக்கிமேவும்
பொருளளித்தன்னவரொழுக்கநன்றுயினிறைவுற்றுப்போற்றிவாழத்
திருமகடன்னிருசரணந்தொழுதேத்திநம்வறுமைதீர்ப்பாமன்றே.

## திருஞானசம்மந்தமூர்த்திநாயனார்.

அய்யனின்னருளகவமுன்றினில்
உய்யபாவருமுணர்ந்தநற்றமிழ்
செய்யவோதியசிரபுரப்பிரான்
துய்யசேவடிதொழுதுவாழ்த்துவாம்.

## திருநாவுக்கரசுநாயனார்.

போதவன்மால்பணிந்திசாபுகலிடன்சரணென்
றோதநஞ்சுண்டவர்க்காத்தோனருள்கொடியர்த்தனைச்சூ
வேதத்திருமொழிகூறிடுநாவுடையமேலவன்பொற்
பாதபதுமமுடிமேற்கொண்டுநாளும்பணிகுதுமே.

## சுந்தரமூர்த்திநாயனார்.

வஞ்சிநுண்ணிடையாரிடையுறுமயக்கமாற்றினுமெவரவர்தமக்கே
எஞ்சலில்முத்திவழக்குவமென்னவிருக்கினுமேலாதியபரனை
விஞ்சுநன்னிரவிற்பரவைபான்கோபம்விலக்கிடத்தூதுவிட்டவன்றன்
செஞ்சரணென்றுகந்துணையாகுந்திவினையாவுநீக்கிடவே.

## மாணிக்கவாசகசுவாமிகள்.

ஒருவாப்பிறவிநோய்தணிந்தியாவருநம்பர்பிரான்
அருளார்ந்தசேவடிசேர்ந்திடத்திமையந்தன்றுவிட
திருவாசகமெனறவாய்மலர்ந்தோதிச்சிறந்திடுங்
குருவாம்மாணிக்கவாசகன்றுள்சிரக்கொண்டிடவே.

## அவையடக்கம்.

சித்தமாசலவரனருட்டிறத்தின்சீர்நிறைநல்வித்தியார்த்த
உத்தமவின்சொல்வழுவினைநோக்காதும்பர்நாயகன்றிருவடிக்கண்
பத்திசெய்துயர்ந்தோர்சரிதமீதென்னப்பண்பொடுக்காப்பவென்றெண்ணி
வித்தகமில்லேனுரைத்தனன்போற்றிமேம்படச்செய்தருளுகவே.

பாயிர முற்றிற்று.

---

## புராணவரலாறு.

நெடிய கடல்சூழ்ந்த இப்பெரிய உலகத்தில் திருத்தமாகிய பல தளிர்களும், மலர்களும் நெருங்கிச் செங்கதிரோன் வெப்புறாமல் நிழலைச்செய்து வானத்தை அளாவிய தருக்கள் நிறையப்பெற்றதும், முடங்கிய பிடரி மயிரினையுடைய சிங்கத்தோடு யானையும், முதிர்ந்த வலிமையுடைய புலியோடு மானும், விரிந்த சிறகினையுடைய கருடனோடு பாம்பும், பகைநீங்கி மிருந்த நட்புற்றிருக்கின்ற சிறப்பினையுடையதும், மண்ணுலகத்தவரேயன்றி, விண்ணுலகத்தவருங்களாலே புகழத்தக்கதுமான நைமிசாரண்ணியத்தில், இடையில் மாவிரதியோடு தெய்வத்தன்மையுள்ள விபூதி, ருத்திராக்ஷந்தரித்தமேனியும், மறை முதலான கலை உணர்ச்சியுடன், ஜெனனமரணாதி துக்கத்தைப்போக்கியென்றுங்கெடாத பேரின்பவீட்டைத் தரத்தக்கதுமான ஸ்ரீ பஞ்சாக்ஷரமியைந்த உள்ளத்தையும் உடையோர்களான அத்திரி, ததீசி, காத்தியாயனர், சனப்புச்சர், அகத்தியர், சுகர், மாதேவர், கண்ணுவர், சுருக்கர், பிருங்கி, சதாநந்தர், மார்க்கண்டர், பிருகு, போதாயனர், ஆபத்தம்பர், இலிகிதர், சுதீக்ஷணர், சாண்டில்யர், பாரத்துவாசர், புலகர், சந்திரசூடர், புச்சகர், புலத்தியர், ஜாபாலி, கௌதமர், சனற்குமாரர், நாரதர், ஜம்புமாலி, மாண்டவ்யர், அரபத்தர், காசிபர், விஸ்வாமித்திரர், கலைச்சிருங்கர், கார்க்கி, கூஷ்மாண்டர், குசுகு, பார்க்கவர், சனந்தர், ஆஸ்வலாயனர், தால்பியர், திருதர், சங்கரர், அருடணர், பாசர், ஜைதர், திருதர், ஜனகர், வசிட்டர், பிரசண்டர், துர்வாசர், பருப்பதர், சிலாதர், தத்தாத்திரேயர், சத்தி, தவுமியர், சுமந்து, பப்புரு, வாமதேவர், சரபங்கர், வச்சர், உபமன்னியர், மிருகண்டேயர், அசிதர், சவுனகர், தேவலர், கணர், அசிதர், விந்து, பாணினி, வியாண்டகர், காலவர், ஆங்கிரசர், சதாதபர், சுனச்சேபர், சருக்சர், இளாப்பியர், வசு, பிரணவிந்து, முற்கலர், கபிலர், அட்டவக்கி



ரர், காணர், கனகர், உரோமசர், பகவர், கவுண்டின்யர், பயிலவர், உக்கிரவிரியர், தூமபானர், இரணதூமாக்கினி, ஜமதக்கினி முதலிய மகரிஷிகள் யாவரும் ஒருங்குகூடி ஓர் யாகஞ்செய்து சம்பூரணஞ்செய்வித்து ஆனந்தமாய் சிவநாமத் தியானஞ் செய்துகொண்டிருக்கின்ற சமயத்தில், சத்துவகுணம்போர்த்தென்ன, விபூதி அணிந்த அழகிய மேனியும், செம்பவளக் காட்டையொத்துத் திரண்டு நீண்ட ஜடையையும், திரு அக்கமாலையணிந்த அங்கங்களையும், பரிசுத்தமாகிய ஐந்தெழுத்தைத் தியானிக்கின்ற சிந்தையையும் அவற்றை இடைவிடாது ஜெபிக்கின்ற திருநாவினையும் உடையவரான சூதமாமுனிவர் எழுந்தருளினர். அன்னவர் வரவைக்கண்ட மேற்கூறிய மகரிஷிகள் யாவர்களும் தாயின்வரவைக்கண்டு அதிகமகிழ்ச்சியுடன் எதிர் நோக்கிச் செல்லும் இளங்கன்றுபோல அளவிறந்த சந்தோஷத்துடன் எதிர்சென்று வந்தனைசெய்தோராய் முகமலர்ச்சியுடன் தங்களிருப்பிடத்திற்கு அழைத்துவந்து அன்புடன் அருக்கிய பாத்திய முதலான செய் கடன்களை முறைப்படி புரிந்து இனிய ஆசனத்திருத்தி பூரணச்சந்திரனைத் தாரகைக் கணஞ்சூழ்ந்தாற்போலச் சூழ இருந்துகொண்டு, எங்கள் ஐயனே! அங்ஙனெழுந்தருளுகையால் இத்தினமும், இவ்விடமும், நன்மை ஆயிற்றோடு எங்கள் ஜென்மமும் புனிதம் ஆயது, மறைமுழுதுணர்ந்த வியாத முனிவரிடத்துச் சகல கலைகளையும் மயக்கம் அறவுணர்ந்த அறிவுடையாய்! ரோமஹர்ஷணன் காதலனே! இறையவனே! யாங்களுப்பும் எண்ணம், பதினெண்புராணங்களுள் ஒன்றான பிரம்ம கைவர்த்தத்திலுள்ள ஸ்ரீ பஞ்சநத மான்மியத்தைத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அம்மொழியினைக் கேட்ட, சூதபுராணிகர், அன்னவர்களை நோக்கிப் புன்னகை நிறைந்த முகமலர்ச்சியுடன் சடைமுடி தாங்கி ரிஷிசிரேஷ்டர்காள்! நன்று வினவினீர், உள்ளம்போது கேட்டவர் மலங்களை வாட்டிக் கொடிய பிறவித்துன்பத்தைப் போக்கி முத்தி வீட்டைக் கொடுக்குந் தன்மையுடைய ஸ்ரீ பஞ்சநத மான்மியத்தை ஆதிகாலத்தில் சூரியவம்சத்திற் பிறந்த தேவவர்மனென்னும் அரசனானவன், பிராமணோத்தமரும் சிவபக்த சிரேஷ்டருமான சுமந்து மகரிஷியை நோக்கி, சுவாமின்! அறுபத்தாறு கோடி தீர்த்த மகாத்மியத்துடன் காவேரி நதியின் பெருமையையும், விருத்தாசலேஸ்வரர், மாயூரநாதர் பெருமையையும் தாங்கள் திருவாய் மலர்ந்தருளக் கேட்டுப் பேரானந்தமடைந்தேன், பின்னரும் ஸ்ரீ பஞ்சநதமான்மியத்தைக் கேட்க மிக்க விருப்புற்றிருக்கின்றேன். ஆகையால் கிருபை கூர்ந்து அவத்

ணையும் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள,
மகரிஷியானவர் அவ்வரசனுடைய வேண்டுகோளுக்கு இரங்கினவராய்
அரசனை நோக்கிப் பூபாலனே! உலகில் அரசர்களாயுள்ளவர்கள் மிரு
தியும் லௌகீக விவகாரங்களிலும், பெண்கள் மயக்கத்திலும், வஸ்தி
ராபரண அலங்காரத்திலும், அறுசுவையுடைய ஆகார விருப்பத்தி
லும், இன்னும் இவை போன்ற சுகம்போற்காணப்பட்டு மறையத்
தக்க விஷயங்களிலேயே மனதைச் செலுத்தி வாழ்வார்கள், அவை
யாவும் பூர்வ ஜென்மத்தில் செய்துள்ள மிகுந்த தபோபலத்தினால்
கிடைத்த மானிட ஜென்மத்துக்கு உரியன ஆகா. அரசனே! மனித
சரீரத்தைப் பெற்றோர் தாங்களெடுத்த ஜென்மத்தாலடையத்தக்க
தான முத்தியின்பத்திற்கு ஆகும் காரியங்களில் முயல்வதோடு மற்
றுமுள்ள ஜீவகோடிகளும் தங்களைப்போலப் பேரானந்தப் பேற்றினை
யடைதல் வேண்டுமென்று முயலுதல்வேண்டும். அதுவே மானிட
ஜென்மத்திற்கு உரியனவாகும். ஆகையால் நீ அரசனாயிருக்கும் அஞ்
ஞானமாகிய விஷய விருப்பத்தில் மனதைச் செலுத்தாது இம்மையிற்
சுகத்தையும் மறுமையிற் சிவபிரானது பாதபதுமங்களைத் தூத்தத்
சுதும் ஆன ஸ்ரீ பஞ்சநத மான்மியத்தைக் கேட்க விருப்புற்றமை
யால் உன்னைப் பார்க்கிலும் உத்தம குணமுடையார் ஒருவருமில்லை.
சொல்லுகின்றேன் கேட்கக் கடவாய். ஸ்ரீ பஞ்சநத மான்மியத்தை
நிறைந்த பக்தி விசுவாசத்துடன் வாசித்தல், கேட்டல், சிந்தித்தல்
முதலியவைகளை எவர்கள் செய்கின்றார்களோ அவர்கள் மேலான
முத்தி வீட்டையடைவார்கள். அந்தத் தலத்தின் பெருமையைப்
பூர்வ புண்ணியமில்லாதவர்கள் அறியமாட்டார்கள். குணசீலனே!
சந்திரசடாதரராகிய சிவ பரஞ்சுடர் எக்காலத்தும் பிரிவின்றி அந்
தத் தலத்தில் வசிக்கின்றாரென்றும் அன்றியும் அதன் பெருமையை
ஆதிகாலத்தில் பார்வதி தேவியார் பரமசிவனை நோக்கித் தேவ தே
வோத்தமா, மகாதேவா, பிராணநாயகா, அன்பர்கட்கெளியோனே,
ஸ்ரீபஞ்சநத மான்மியத்தைக்கேட்கவிருப்பம் உறுகின்றேன், கிருபை
யுடன்திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொ
ள்ள, எம்பெருமான் எம்மன்னையை நோக்கி மலையரையன்காதலி!
அன்புடையாய்! பூர்வத்தில் அக்காசி க்ஷேத்திரத்தில் வாசம் செய்த
வரும், பிராமணோத்தமரும், வருணாச்சிரம தருமத்தை விடாத
வரும், வேத வேதாங்கபுராண இதிகாசாதி பாரங்கதரும், திரிகால
சிவபூஜாதுரந்தரரும், திரிபுண்டரந்தரித்த திருமேனியுடையாரும்,
ருத்திராக்ஷமாலிகாபரணரும், இடைவிடாது பஞ்சாக்ஷர மந்திரத்தை



ஜெபிக்கின்ற நாவையுடையாரும் ஆன நாதசன்மாவென்ற புண்ணிய
புருஷனை அவர் மனைவியாளாகிய அனவத்தியாதேவி நமஸ்கரித்தெழு
ந்து நின்று, பிராணநாயகா! உலகத்தில் தெரிசித்த அளவில் முத்தியை
யும், ஸ்நானம் செய்த அளவில் பாபத்தையும் போக்கத்தக்க க்ஷேத்
திரத்தையும், தீர்த்தத்தையும் தங்கள் கிருபைக்கிடமாகிய அடியே
னுக்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள,
நாதசன்மாவானவர் அன்னவளை நோக்கிப் பெண்கள் நாயகமே
'காசியான் மரணான்முக்தி' :—என்ற அருமை வாக்கியத்தின்படி மரண
த்தால் முத்தியைக் கொடுக்கின்ற காசித் தலத்தோடு மேற்கடலோரத்
திலுள்ள திருக்கோகரணம்,சோமநாதம், விருபாக்ஷம், திருக்கேதா
ரம், மல்லிகார்ச்சுனம், திருக்காஞ்சி, திருக்காளத்தி, விருத்தாசலம்,
அருணாசலம், ரிஷபாசலம், சீர்காழி, திருவிரிஞ்சை, வைத்தீஸ்வரன்
கோவில், திருவெண்காடு, திருவாரூர், வேதாரண்ணியம், கௌரி
மாயூரம், திருவிடைமருதூர், கும்பகோணம், சுவாமிமலை, திருவா
னைக்கா, திரிசிராமலை, மதுரை, திருப்பரங்குன்றம், திருநெல்வேலி,
இராமேச்சுரம், நாகைக்காரோணம், முதலிய திவ்விய தலங்களைத்
தெரிசித்தலினாலும், கங்கை, யமுனை, சரஸ்வதி, துங்கபத்திரை, நர்
மதா, கன்னவேணி, தீம்பாலி, தாம்பிரபரணி முதலிய சர்வோத்
கிருஷ்ட தீர்த்தங்களில் படிந்ததினாலும் அடையத்தக்க பேற்றைப்
பார்க்கிலும், நற்குண நிறைந்தவளே! திருப்பழனம், திருச்சோற்
றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திரு
நெய்த்தானம், ஆகிய ஆறு திவ்ய க்ஷேத்திரங்களையும் தனக்கு அங்
கங்களாகக்கொண்டு விளங்கும் திருவையாறென்னும் திருநாமத்தை
யுடைய ஸ்ரீ பஞ்சநத க்ஷேத்திரத்தைக் காவிரிநதியிற் படிந்து தெரி
சிப்பார்களேயானால் ஒப்புவமையில்லாத முத்திப் பேற்றினை அடை
ந்து உய்வார்கள். அந்தத் தலத்தின் பெருமையை உனக்குச் சொல்லு
கின்றேன் கேட்கக் கடவாயென்று நாதசன்மாவானவர் அனவத்தி
யா தேவிக்குக் கூறியவாறு உனக்குக் கூறுகின்றேன், பார்வதி! கே
ட்கக் கடவாயென்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வண்ணமே
உனக்குச் சொல்லுகின்றேன் கேட்கக் கடவாயென்று சுமந்து ரிஷி
யானவர் தேவவர்ம ராஜனுக்கு உரைத்தருளினார். அதனை மும்மல
த்தைவென்ற மகரிஷிகாள்! இப்பொழுது உங்களுக்குச் சொல்லு
கின்றேன் சிரத்தா பக்தியுடன் கேட்கக் கடவீர்களென்று சூதபுரா
ணிகர் ஆசிரியர் பாதங்களைத் தியானித்துக்கொண்டு கூறுவாராயினர்.

புராண வரலாறு முற்றிற்று.

## க—துஷ்ப்பிரவர்த்தி-

## முத்தியடைந்த அத்தியாயம்.

மக்கட்கு இன்றியமையாச் சிறப்பினைத் தருதற்கது வேதாகமங்கள் கூறும் வருணாச்சிரம தருமமேயாம். அது கொண்டே நமி[illegible] ஒழுக்கம் விழுப்பந்தரலால், ஒழுக்க முயிரினுமோம்பப்படும்.' என்று கூறிற்று. அங்ஙனமாக, பிரமகுலத்திற் பிறந்து அக்குலத்திற்குரிய ஒழுக்கத்தை விட்டவனும் எவர்க்குங் கெடுதியே விளைவிக்குந்துர்க்குணத்தை நிரம்ப உடையவனுமாகிய துஷ்ப்பிரவர்த்தி என்னும் ஓர் பிராமணனிருந்தான். அன்னவன் ஓர் நாள், அதிரூபலாவண்யமுள்ள தன் தாயைத் தன் பிதா இல்லாத சமயம் அறிந்து அதிமோகத்தால் புணர்ந்தவனாய்க்காமவெள்ளத்தில் ஆழ்ந்திருக்கிட்டக வெளியே சென்றிருந்த பிதாவானவர் வந்து தன் புத்திரனும் பத்தினியும் தங்களை மறந்து அற்ப இன்பத்தில் மயக்கமுற்றிருப்பதை நோக்கி, உண்மை நெறிகண்டோராதலின் அவர்களிருக்கும் தன்மைக்குக் கோபம் அடையாது மகாபாபிகளாய் எரிவாய்நரகத்துக்காளாய்விட்டார்களேயென்ற துக்கமுடையவராய் மௌனம் சாதித்திருக்க, துஷ்ப்பிரவர்த்தியானவன், தன் தந்தைவந்ததும் தங்கள் கெட்டசெய்கையை அறிந்ததுமாகியவிஷயத்தை உணர்ந்து அன்னவரைக் கொன்றுவிட்டு உபத்திரவமின்றி நிர்ப்பயமாய் இன்பமனுபவிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டவனாய்க் கோடரியால் வெட்டி அவருயிரைப் போக்கி நிற்கவே, உபநயன சமஸ்காரம் செய்துவைத்ததால் குருவும், அன்னதானம், அபயதானம், வித்தியாதானம், ஜெனனம் முதலியவைகட்குக் காரணமாயிருந்ததலால், பிதாவும், தவசீலம், ஒழுக்கம் அக்கினிபூஜை, சிவபூஜை, க்ஷேத்திரதரிசனம், தீர்த்தாடனம் வேதமோதல் முதலிய உத்தமத் தன்மையால் பிராமணோத்தமருமான பிதாவைக் கொன்றமையால் பிரம்மகத்தியும், தாயின் கற்பையழித்துப் புணர்ந்தமையால் மகா பாபமும் அவனைப்பிடித்துக்கொண்டது. ரிஷி சிரேஷ்டர்காள்! 'இன்பமோ சிறிதாகும், இதில் வருந்துன்பமோ கரையில்லாத் தோடு கடல்' என்றபடி அற்ப இன்பத்தில் மனதை வியாபிக்கச் செய்து அதனால் செய்யத்தகாத காரியங்களைச் செய்யவே. பாமசண்டாளனாகிய துஷ்ப்பிரவர்த்தியைப் பிரமகத்தியும் மகா பாபமும் பற்றிக்கொள்ள, சித்தசுவாதீனமற்றவனாய்த் தன் தேசம், கிரகம், இவைகளைவிட்டு பரதமித்திரர்,



நகரவாசிகளால் அடித்துத் துரத்த நீங்கி, மலை, காடு, முதலானதுகளில் திரிந்தும், உடுக்க உடையும் உண்ண உணவும் இன்றியும் பசி, தாகம் குளிர் முதலியவற்றால் மிக வருந்தியும், துன்பமனைத்துக்கும் ஓர் இருப்பிடமாய்க் கருதிறம் அடைந்து, "காழுமே நரகபூமி காணியாக் கொடுப்பதாகும்" என்றபடி இச்சரீரம் இப்பொழுது செய்த பாபத்துக்குத்தக்கபடி மறுமையில் அனுபவிக்கும் நரகவேதனையிலும் பதின்மடங்கானகஷ்டங்களை அனுபவித்து அனேககாலஞ்சென்றபின் ஸ்ரீபஞ்சநதக்ஷேத்திரத்திற்கு சமீபமான ஓர் ஆரண்யத்தில் வந்து தங்கி வழிச்செல்வோரை அடித்துப் பரித்துப் பாபம் இன்னும் பெருகும்படியான துஷ்கிருத்தியங்களைச் செய்துகொண்டிருந்தனன். முத்தியுடையீர்! அவ்வாறு அன்னவன் வசிக்கும் காலத்தில் ஓர் நாள் அளவிறந்த ஜனங்கள் கூட்டமாக அன்று மாமகமாகிய புண்ணியதினமாகையால் காவிரி நதியில் ஸ்நானம் செய்வதற்காகச்செல்ல, இவனும் அவர்களைத் துரத்திக்கொண்டு பின் தொடர்ந்து சென்று காவிரி நதியை அணுகவே, அங்கு ஸ்நானம் செய்துகொண்டிருந்த ஓர் பிராமணோத்தமர் ஜீவகாருண்ணியமுடையோராதலின் இவன் நிலைமையை நோக்கி இவனைப் பிடித்து வருத்துகின்ற, பிரம்மகத்தி நீங்கும் வண்ணம், "ஸ்பரிசம்பாபநாசனம்" என்றபடி சரீரத்திற்பட்ட அளவிற்பாபத்தைப் போக்கத்தக்க காவிரி நதியின் தீர்த்தத்தை மந்திர பூர்வமாகத் திருக்கரத்தால் அள்ளி இவன் சரீரத்திற்படும் வண்ணம் வீச அவ்வுத்தம தீர்த்தஞ்செய்யொணாப் பாபத்தைச் செய்தானாகிய துஷ்ப்பிரவர்த்தியின் சரீரத்திற்படவே அவனைப் பிடித்துக்கொண்டிருந்த பிரமகத்திபோனது நீங்கப்பெற்று உடனே திவ்விய சரீரத்தையும் கலக்கமில்லாத அறிவையுமுடையவனாகி இங்கு நாம் வரவேண்டிய காரணம் யாது, நமக்கு நல்லறிவுண்டாவதற்குக் காரணம் யாது, முன்னான சரீரம் நீங்கப்பெற்று திவ்விய சரீரம் வந்ததற்குக் காரணம் யாது, என்று ஆலோசனை செய்துகொண்டிருந்தனன். அவ்வாறு செய்துகொண்டிருக்கின்ற சமயத்தில், ஆகாயவாணி அவன் அறியும் வண்ணம், ஏ துஷ்ப்பிரவர்த்தி! நீ மகா பாபியாயிருந்தும் பூர்வஞ்செய்த புண்ணியவிசேடத்தால் இப்போது காவிரி தீர்த்தை அணுகவும், அவ்வுத்தம தீர்த்தம், உத்தமோத்தமத்தன்மையையுடைய பிராமண சிரேஷ்டன் கையால் பிரோக்ஷிக்க, அது உன்மேற்படவும், அங்ஙனம் பட்ட இத்தின விசேடத்தாலும் உன்னைப்பற்றியிருந்த பிரமகத்தி நீங்கி உனக்கு நல்லறிவுண்டாயது. ஏ கொடிய பாவி! பின்னும் உன்னால் செய்துள்ள மாதுர்கமனத்தால் ஏற்பட்ட பாபத்திற்கு குடிசி

பாகமுதலிய அசங்கிய நரகங்களில் அனேக கற்பகாலங்கிடந்து வருந்தவேண்டியதாகையால் அதனை அடையாதிருக்க இன்றுமுதல் உன் மரணபரியந்தம் இப்பஞ்சநத க்ஷேத்திரத்தில் வசித்து காவிரி தீர்த்தத்தில் திரிகால ஸ்நானஞ்செய்தும், வருணாச்சிரம தருமத்திற்கு உரிய கிரிகைகளை வழுவாதியற்றியும், சற்குருவின் உபதேசத்தால் பஞ்சாக்ஷரஜெபம் தினம் ஒன்றுக்குப் பதினாயிரம் ஜெபித்தும், ஏகாதசருத்திரஜெபம், ஏகவாரபோஜனம் ஈஸ்வர தரிசனம் நூறு பிரதக்ஷணம் முதலிய சத்கிரிகைகளில் கொஞ்சமும் தவறுதலடையாமல் மிக்க உறுதியோடு செய்துகொண்டுவருவாயேல் அக்கொடிய பாபத்தினின்றும் நீங்கப்பெறுவாயென்று கூறிற்று. ஏ மகரிஷிகாள்! காவிரி தீர்த்தத்தின் மகிமை எம்மால் கூறும் திறத்தினையுடையதன்று. மகா பாபியாகி துஷ்ப்பிரவர்த்தியைப் பிடித்திருந்த பிரம்மகத்தி ஸ்பரிசமாத்திரத்தால் நீங்கிப் புனிததேகத்தையும் தெளிந்த அறிவினையும் அளித்த இச்சரித்திரத்தாலேயே நீங்கள் நன்கு உணர்வீர்கள்.'' அங்ஙனமாக அவ்வசரீரியைக்கேட்ட அன்னவன், தன் ஜீவகாலபரியந்தம்பஞ்சநத க்ஷேத்திரத்தில் வசித்து மேற்கூறியுள்ள செய்கைகளை விடாது செய்தவனாய் மரணமடைந்து சுவர்க்கலோக பதவியைப் பெற்று ஆங்குள்ள போகங்களைச்சிறிதுகாலம் அனுபவித்து, "போகபூமியினிற் போகத்துனுவினுற்பொருந்தலாகா, தேகமாமின் பசித்தியம்புறிற் கருமபூமி, யாகமானது கொண்டன்றியாதலால் ஞாலத்தெய்தி, யோகமாநெறியினின்றொருண்மை சாதித்துக்கொள்வர்." என்றதனால் இவ்வுலகிற் செய்த புண்ணியத்திற்குத் தக்கவாறு கிடைத்த போக சரீரத்தால் சுவர்க்கலோக போகத்தை அனுபவிக்கலாமேயன்றி அச்சரீரத்தால் முத்தியானந்தப் பேரின்ப வீட்டையடைதற்கு கூடாதாதலின், அப்புண்ணிய சரீரத்தையும் விடுத்து பின்னர் பூவுலகில் நூறுஜெனனம் பிராமணனாகப்பிறந்தும் ஒருக்கால் காவிரிதீர்த்தம் சரீரத்தில்பட்ட விசேடத்தால்ஜென்மங்கள்தோறும் வருணாச்சிரமதருமம்வழுவாது நடந்துகடைசியில் சந்நியாசி ஆச்சிரமத்தையடைந்து இந்திரிய நிக்கிரகஞ்செய்து "உரைசெயிற் பரமஞானமொன்றுமே முத்திக்கேது" என்றபடி பரமஞானத்தை அடைந்தவனாய்ப் பஞ்சநதீஸ்வரப்பெருமானது திவ்விய சரணாரவிந்த நீழலையடைந்து வாழ்ந்தனன். ஒழுக்கமுடையீர்! இத்துஷ்ப்பிரவர்த்தி மாதுர்கமனமாகிய கொடியினும் கொடிய மகா பாபத்தைச் செய்தமையால் நூறு ஜெனனமெடுத்து முத்தி அடையவேண்டியதாயிற்று. புண்ணிய புருஷர்களாகில் ஒரே ஜென்மத்தில் முத்திப்பேற்றினை அடைந்து உய்வர். இதுசத்தியமாகுமென்று கூறி



வியாச மாணுக்கரானவர் துஷ்ப்பிரவர்த்தியின் சரித்திரத்தைப் பூர்த்தி செய்து சிவப்பிரியர் சாரூபமடைந்த சரித்திரத்தை திருவாய் மலர்ந்தருள ஆரம்பித்தனர்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

## உ. சிவப்பிரியர் சாரூபம் அடைந்த அத்தியாயம்.

மகரிஷிகாள்! கேட்கக்கடவீர்கள்: காவிரி நதி தீரத்தில் மறையவர்குலத்திற்றோன்றி நான்மறை, ஆறங்கம், வாதுளமுதற் காமிகம் ஈறாயுள்ள இருபத்தெட்டு ஆகமங்கள். மீமாம்சம், பதினெண்புராணம் முதலிய சகல கலைகளையும் ஐயம் திரிபு அறியாமையென்னும் முக்குற்றங்களும் அகல உணர்ந்து, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியமென்ற அறுவகைக் குற்றங்களையு நீக்கிய சிவப்பிரியர், சுதர்மாவென்ற இரண்டு பிராமணோத்தமர்களிருந்தார்கள். அவர்களில் சிவப்பிரியர், அக்காவிரியில் இடையே விடாது ஐந்து வருஷம் ஸ்நானம் செய்து வந்து ஐந்தாவதாண்டின் மாசி மாதத்தின் முதல் தினமாகிய சூரியோதயகாலத்தில் விசேட ஸ்நானமும் செய்து தானம், ஜெபம் ஹோமம், தர்ப்பணம் முதலியவைகளை இயற்றி ஸ்நான பூர்த்தி செய்தவராய்த் தவ ஒழுக்கத்தைக் கைக்கொண்டு கங்கையும் இளம்பிறையும், விளங்குகின்ற சடாமகுடமும், பிரம்ம விஷ்ணுவாதி தேவர்களைக் காத்தற்பொருட்டு உண்டருளிய விஷந்தங்கி விளங்கும் திருநீலகண்டமும், சகல உலகங்களையும் பெறாது பெற்று வளர்ப்பாளாகிய உமையம்மை கலந்த வாமபாகத்தையும் உடையரான சிவபெருமானது திவ்விய சரணாரவிந்த சேவை அர்ச்சனை, ஆலயத் திருப்பணி, ஏகாதச ருத்திர ஜெபத்துடன் நூறு பிரதக்ஷணம், தாரகமந்திரமாகிய பிரணவத்துடன் முப்பதினாயிரம் பஞ்சாக்ஷர ஜெபம் முதலியவைகளைத் தினந்தோறும் விடாது பக்த சம்ரக்ஷணக்கிருபாலுவாகிய பஞ்சநதீஸ்வரார்ப்பணமாகச் செய்துகொண்டு வந்தனர். ஞானவிருப்பமுடையீர்! சிவப்பிரியரானவர் இவ்வாறொழுகிக்கொண்டுவர, சுதர்மாவானவர் வேதத்தில் கூறிய விதிப்படி சோமபானம் முதலிய யாகங்களையும் அந்த யாகங்களின் முடிவில் பிராமணர்களுக்கு சொர்ணதானம், அன்னதானம் முதலியவைகளையும் செய்து வந்து பின்னும் யாகங்களைச் செய்வதிலும், தானங்கள் செய்வதிலுமே அதிவிருப்பமுடையவராயிருந்து கொண்டிருந்தனர். இங்ஙனமாக இவ்விருவர்களும் நெடுங்காலம் நடத்திக்கொண்டுவந்து ஏக

காலத்தில் மரணமடையவே அதை உணர்ந்த தேவேந்திரனானவன் தன் தூதர்களை நோக்கித் தூதர்காள்! பூவுலகில் அளவிறந்த புண்ணியங்களைச் செய்து மரணமடைந்த சிவப்பிரியர், சுதர்மாவென்ற இரண்டு பிராமணோத்தமர்களையும் அன்னவர்கள் மண்ணுலகில் செய்த புண்ணியத்துக்குத் தக்க போகங்களை நம் பொன்னுலகில் அநுபவிக்க நீங்கள் சென்று அழைத்துவாருங்களென்று ஆக்ஞாபித்தனன். அவ்வாக்ஞையைப் பெற்ற தூதர்களனைவர்களும் உடனே நவரத்தின கசிதமாகிய விமானம், ரம்பை ஊர்வசி, மேனகை முதலிய அப்சரஸ்திரீகள், தோற்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி முதலிய வாத்தியங்களின் முழக்கம் முதலிய விமரிசைகளுடன் வந்து மேற்கூறிய இருவர்களையும் விமானத்தின் மீது ஆரோகணிக்கச் செய்து அழைத்துக்கொண்டு சென்றனர். தேவ தூதர்கள் அவ்வாறு சென்றுகொண்டிருக்க அது தருணத்தில் கைலாசபதியாகிய சிவபெருமான் நந்தி எம்பெருமானை நோக்கி நந்திகேஸ்வரா! நீ இப்பொழுதே சிவகணங்களுடன் சென்று இந்திரன் உலகத்திற்குச் செல்கின்ற சிவப்பிரியர், சுதர்மா என்ற இருவரில் சிவப்பிரியரை மாத்திரம் நம்முலகிற்கு அழைத்துவரக் கடவாயென்று கட்டளையிட்டருளவும் அவ்வாக்ஞையை சிரோதாரணஞ்செய்த நந்திபிரானானவர் சந்திரசடாதாராகிய சிவபரஞ்சுடரினது உபய சரணங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தெழுந்தவராய் உத்திரவு பெற்றுக்கொண்டு அளவிறந்த பூதகணங்களுடன் சுவர்க்கலோகம் செல்கின்ற அவ்விருவர் முன்றோன்றி சிவப்பிரியரை மாத்திரம் அழைத்துக்கொண்டு சென்று பஞ்சநத க்ஷேத்திரத்தில் திருக்கோலங்கொண்டு எழுந்தருளிய செம்பொற்சோதீஸ்வரப்பெருமான் திருச்சந்நிதானத்தின் முன்பு விட்டுப் பணிந்து நின்றுகொண்டிருந்தனர். அங்ஙனம் நிற்க சிவப்பிரியரானவர் ஈஸ்வரன் பாதபத்மங்களில் நமஸ்கரித்தெழுந்து அஞ்சலியஸ்தராய் சரீரத்தியந்தம் மயிர்க்கூச்செறிய இருகண்களினும் ஆனந்த வெள்ளம் பெருக்கெடுத்தோட கருணாகரப்பெருமானை நோக்கி பரமபக்தானுகூலச் சச்சிதானந்தப் பிரபுவே! அடியேனை ஓர் பொருட்டாக்கி அடிமை கொண்டருள நின் திருவுள்ளம் இருந்தவாறு என்னேயென பலவாறுந் தோத்திரம் செய்து ஞானப்பித்துடையோராய் உடல் பொருளாவி மூன்றையும் சிவார்ப்பணஞ்செய்து நிற்கவே சிவபெருமான் அன்னவரது பக்தியின் வலிமையை நோக்கி ஏ சிவப்பிரியா! அன்புடையாய்! உனக்கு இப்போது நம்முடைய சாருப பதவியைத் தந்தருளினோம் அதனைப்பெற்று நம்முலகில் நித்திய



ானந்தத்துடன் சிறிது நாள் வசித்துப்பின்னர் முறையே சாமீப சாயுஜ்ஜிய பதவிகளைப் பெற்று வாழக்கடவாயெனத் திருவாய் மலர்ந்தருள சிவப்பிரியரானவர் சிவாக்ஞையின்படிக்கி அங்ஙனமே பெற்று வாழ்ந்துகொண்டிருந்தனர். இங்கு இவ்வாறாகத் தேவ தூதர்கள் சுதர்மா ஒருவரை மாத்திரம் அழைத்துக்கொண்டு சென்று தேவேந்திரன் முன்பு விடுத்தவர்களாய், இந்திரனை நோக்கி எங்கள் அரசே! தங்கள் உத்திரவின்படி சென்று நாங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு வருங்காலத்தில் நந்திகேஸ்வரர் சிவகணங்களுடன் வந்து சிவப்பிரியரைமாத்திரம் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டனர் என்று விண்ணப்பித்து நிற்க அதனைக் கேட்ட சசிமணாளனானவன் உடனே ஐராவதத்தின்மீதாரோகணித்து வச்சிராயுததரனாய் திருவையாற்றை அடைந்து சிவகணங்களின் மத்தியில் வேத்திரபாணியாய் எழுந்தருளியிருக்கும் நந்திகேஸ்வரரைப் பணிந்தெழுந்து பயபக்தி விசுவாசத்துடன் நின்றுகொண்டிருந்தனன். அங்ஙனம் நின்ற மகபதியை நந்திபிரானானவர் நோக்கி அருளி ஏ சுரர்குலாதிபா! மங்களகரமாய் வாழ்ந்து உன்னரசைச் சரிவர நடத்திக்கொண்டு வருகின்றனையா வென்று க்ஷேமம் வினவிப் பின்னர் இப்பொழுது நீ இங்கு வந்த காரணம் என்ன அதனைத் தெரிவிக்கக்கடவாயென்று ஆக்ஞாபிக்கத், தேவேந்திரன் அவ்வாக்ஞையை சிரமேற்கொண்டு பின்னரும் வணங்கி அஞ்சலிபந்தனாய் விண்ணப்பம் செய்வானாயினன். சுவாமின்! பரமபக்தானுகூலனாகிய உமாநாயகனது திருவருட் பெருக்கத்தால் சகல நன்மையுமுடையனாய் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன், இப்போது அடியேன் இங்கு வந்த காரணம் திருவுள்ளம் அறிந்ததாயினும் சொல்லிக்கொள்ள வேண்டுவது முறைமையாதலின் தெரிவிக்கின்றேன் கேட்டருளக்கடவீர்கள். அஃது என்னை எனின் சுவர்க்கலோகாதிபத்தியத்தை நம் பெருமானது ஆக்ஞையின்படி ஆண்டுகொண்டு வருகின்ற யான் பூவுலகில் புண்ணியஞ்செய்த ஜீவர்களை அவர்கள்மரணம் அடைந்தவுடன் அழைத்துவந்து எனதுலக போகங்களைச் செய்த புண்ணியத்துக்குத் தக்கவாறு அநுபவிக்கச் செய்ய வேண்டிய கடமையுடையன் ஆகலின் அதன்படிக்கிச்செய்விக்க யான் சிவப்பிரியர், சுதர்மா என்ற இருவரையும் என் தூதர்களால் அழைத்து வரும்படி செய்யவே அவர்கள் அழைத்துக்கொண்டு வருங்காலத்தில் அவ்விருவரில் சிவப்பிரியரை மாத்திரம் தாங்கள் சிவகணங்கள் சமேதமாய் எழுந்தருளி அழைத்துக்கொண்டு வந்துவிட்டதாய் தூதர்கள் தெரிவிக்க அதனைக் கேட்ட யான் சந்தேகமுடையனாய்

சந்நிதானத்தில் வினவி அச்சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளற்பொருட்டே இங்கு வந்தேன். ஆகையால், எம்பெருமானே! அதனை நிவர்த்தித்தருளல் வேண்டுமென்று குறையிரந்து நின்றனன். யோகசிலர்காள்! கவனிக்கக் கடவீர்கள். அங்ஙனம் நின்ற சசிமணாளனை நந்திகேஸ்வரர் நோக்கி ஏ தேவேந்திரா! நன்று வினவினை, அப்பிராமணோத்தமர்களிருவரில் சுதர்மா என்பவர் யாகங்களையும் அவைகளின் முடிவில் தானங்களையும் செய்து வந்தனர். அவைகள் ஜீவப்பிரீதியும் தேவப்பிரீதியும் ஆகும் தன்மையுடையதாதலின் பசு புண்ணியமாகி அதன் பிரயோஜனத்தை அநுபவிக்க உன்னுலகங்கிடைத்தற்கதாயிற்று. சிவப்பிரியர் அவைகளையன்றி அதனினும் மேலாம் சிவப்பிரீதியாகிய ஆலயத்திருத்தொண்டு, திருப்பணி, ஈஸ்வர தெரிசனம், ருத்திரஜபம், பிரணவசம்பந்தமான பஞ்சாக்ஷரஜெபம், பிரதக்ஷணம், முதலியவைகளைச்செய்துவந்தமையால் அவைகள் பதி புண்ணியமாகி ஒரு காலத்தில் கெடுந்தன்மையையுடைய உன்னுலக போகம், சத்தியலோகபதவி, வைகுண்டபதவி முதலியவைகளைக் கடந்து என்றும் அழிவுறாசிவலோகபதவியைத்தரத்தக்கதாக ஆய்விட்டது, அதுபற்றித்தான் அன்னவரை மாத்திரம் நாம் அழைத்துவந்துவிட்டோம். ஆகையால் இனிமேல் இந்த பாகுபாடுகளை உணர்ந்து அரசு புரியக்கடவாய் உன்னிருப்பிடஞ்செல்லென்று ஆக்ஞாபிக்க, அவ்வாக்ஞையைப்பெற்றவனாய் வணங்கி விடைபெற்றுக்கொண்டு தன்னுலகம் சேர்ந்து சுதர்மாவென்னும் பிராமணோத்தமருடன் ஆதனத்தில் வீற்றிருந்து அரசு புரிவானாயினன். தவ சிரேஷ்டர்காள்! பூவுலகில் பிறந்த மக்கள் யாவரும் பசு புண்ணியமாகிய பிராமண போஜனம் முதலிய தானங்களையும் யாகாதிகளையுமே மிகுதியாய்ச் செய்து போக உலகத்தையும் கர்ம உலகத்தையும் அடைந்து சுகதுக்காதிகளை அநுபவித்துக்கொண்டு பிறந்து இறந்து உழலுவர். அவர்களுள் (உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே) என்றபடி நல்லறிவுடையோர் என்றும் அழியாநிரதிசயானந்தப்பேற்றினைத் தரத்தக்க பஞ்சநதீஸ்வரப்பெருமான் திருவருட்கிடமாய மேற்கூறிய பதி புண்ணியங்களைச் செய்து பெருமான் திருவடி நீழலைப்பெற்று உய்வர். இது சத்தியமாகுமென்று கூறி சூதபுராணிகரானவர் சிவப்பிரியர் சுதர்மாவென்ற இருவர் சரித்திரத்தை பூர்த்தி செய்தவராய், சுரதமகாராஜன் புத்திரனைப்பெற்று உய்ந்த சரித்திரத்தைத் திருவாய் மலர்ந்தருள் ஆரம்பித்தனர்.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.



## ௩. சுரதமகாராஜன் புத்திரன் அடைந்த அத்தியாயம்.

பலவளங்களும் நிறைந்த அஸ்திருபுரியை சந்திர வம்மிசத்தில் பிறந்து அரசுரிமைக்கு உரிய இலக்கணங்கள் அமையப்பெற்றவனும் நான்கு வருணாச்சிரம தருமத்தை ரக்ஷிக்குந்தன்மையுடையவனும், சத்தியம், சாந்தம், ஒழுக்கம், தருமசிந்தை முதலிய நற்குணங்களும் நிறைந்துள்ளவனுமாகிய சுரதமகாராஜன் மனு முறை கோடாது அரசாட்சி செய்துகொண்டு வருங்காலத்தில், தான் நீண்டகாலமாய் அரசுபுரிந்து வருவதில் மிக்க மகிழ்ச்சியை உடையவனாயினும் தனக்குப் பின் அரசுரிமையை வகிக்கப் புத்திரனில்லாததினால் மிகுந்த துக்கமுடையவனாய் புத்திரப் பேற்றினை அடையவேண்டி அஸ்வமேதம், புத்திரகாமேஷ்டி முதலிய யாகங்களைச் செய்தும், புத்திரன் உண்டாகாத குறையை நினைந்து நினைந்து மிக வருந்திப் பின் வருமாறு சிந்திப்பானாயினன். "மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் மூர்க்குப் புகப்பெறார் மானிடராய்ப்பிறந்து" "கல்லாமழலைக்கனியூறல் கலந்து கொஞ்சுஞ் சொல்லாலுருக்கி அழுதோடித் தொடர்ந்துபற்றி, மல்லார்புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்தர், இல்லாதவர்க்குப் பெருவாழ்வினினிமையென்னும்." மக்களாய்ப்பிறந்து புத்திரப்பேற்றினை அடையாதார் இவ்வுலக இன்பத்தை இழத்தலோடு மறுமை இன்பத்தையும் இழக்கவேண்டியவர்களாகின்றார்கள் என மறை முதலியவைகள் முறையிடுகின்றமையால் நாம் அத்தன்மையுடைய மகா பாவியாக ஆய்விட்டோமே இதற்கு என் செய்வது என்று பன்முறை வருந்தி முடிவில் நமக்கிருக்கும் குறையை மகரிஷிகள் பாலடைந்து தீர்த்துக்கொள்ளல்வேண்டுமென்று தீர்மானித்தவனாய் கங்காதீரத்தையடைந்து ஆங்கு காயக்கிலேசஞ்செய்து மனோலயத்தோடு தபசு செய்துகொண்டிருக்கும் நாரதர் முதலிய மகரிஷிகளைக் கண்டு சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்து எழுந்து சுவாமிகாள்! அடியேன் அஸ்திருபுரத்தை ஆளும் சுரதமகாராஜன் என்னும் நாமத்தை உடைய அரசன். எனக்கு புத்திரப்பேறு இன்மையால் அதனை நிவர்த்தித்துப் புத்திரனை அடையவேண்டும் என்ற எண்ணத்துடன் தங்கள் திருச்சந்நிதானத்தில் தெரிவித்துக்கொள்ளவேண்டி இங்கு வந்தனன். ஆகையால் தாங்கள் கிருபை பாலித்து புத்திரப்பேற்றினை யான் அடையுமாறு திருவருள் செய்தல்வேண்டுமென விண்ணப்பித்து நின்றனன். அவ்விண்ணப்பத்தைக்கேட்ட மகரிஷிகள் யாவரும் இவனே அரசன், சற்குணசம்பன்னனாகவும் காணப்படுகின்றான்

அநேக யாக எக்ஞாதிசத்கருமங்களையும் செய்திருக்கின்றான், அந்நாள் வரையிலும் புத்திரன் இல்லாததற்கு காரணம் யாதோ எனக் கிருபா திருஷ்டியால் ஆராய்ந்து பார்த்து காரணம் தெரிந்துகொண்டவர்களாய் அரசன் முகத்தை நோக்கிக் கூறுவாராயினர். ஏ ராஜன்! நீ பூர்வ ஜென்மத்தில் இளங்கன்றையும் அதனை ஈன்ற பசுவையும் பிரித்துவிட்ட மகா பாபத்தால் இச்சென்மத்தில் புத்திரன் இல்லாதவனாக ஆய்விட்டாய். ஆகையால் அப்பாபம் நீங்கும்வண்ணம் இப்பொழுது கைலாய தரிசனம் செய்வாயாகில் அத்தோஷத்தினின்று நிவர்த்தியாய் நல்ல புத்திரப்பேற்றினை அடைவாய் என்று திருவாய்மலர்ந்தருளினார்கள். அதனைக் கேட்ட அரசன் அப்பொழுதே புத்திரனை அடைந்தவன்போன்ற மகிழ்ச்சியை அடைந்து மகரிஷிகள்பால் விடை பெற்றுக்கொண்டவனாய் தன் நகரம் வந்துசேர்ந்து உடனே மந்திரிகளிடத்தில் ராச்சியத்தை ஒப்புவித்துவிட்டு, அஸ்வாரூடனாய் கைலாய தெரிசனம் செய்யச் சென்றனன். அப்படிச் செல்லவே சத்துருக்களாகிய அரசர்கள் இவனது நகரைக் கைக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தால் அதற்கு அரசன் இல்லாத இது தருணமே தக்கது என்று சதுரங்க சைன்யத்துடன் வந்து வளைத்துக்கொள்ள அந்த மந்திரிகளால் அனுப்பப்பட்ட தூதர்கள் வந்து தெரிவித்துக்கொள்ள உணர்ந்து பின்னரும் நகரத்தை நோக்கிச்சென்று சத்துருக்களை யுத்தத்தால் புறமுதுகாட்டி ஓடும்படி செய்ததுடன் இனிமேலும் தன் நகரத்தை நோக்கி அவர்கள் வராதிருக்கும்படியான ஏதுக்களையும் செய்துவிட்டு புத்திரனில்லாத குறையை நிவர்த்தித்துக்கொள்ள வழியிலேயே மிகுந்த ஊக்கமுடையனாதலால் திக்குவிஜயம் செய்யப் போகின்றவன்போல் புறப்பட்டு அநேக தீர்த்த க்ஷேத்திராதிகளைக் கண்டு தெரிசித்தவனாய் கடைசியாக ஜீவன்முக்தி க்ஷேத்திரமாகிய திருவையாற்றை அடைந்தனன். நைமிசாரண்யவாசிகாள்! கவனிக்கக்கடவீர்கள். அங்ஙனம் அடைந்த அரசனானவன், அங்கு காவிரியில் ஸ்நானம் செய்து செல்கின்றவர்கள் "திருவெண்ணீற்றை அள்ளி யிட்டார் புள்ளியிட்ட கணக்கு மாற்றி, அமருலகிற் கணக்கெழுதத் தழிக்கலாமே." என்று சர்வஜ்ஞரான்னிய மூர்த்தியாகிய சிவபெருமான் திருவருளாகிய விபூதியினை பக்திசாக்ஷாத்தியானத்துடன் எடுத்தணிவதில் எமன் வினைக்குத்தக்கவாறு எழுதிய எழுத்தையும் அழித்துவிடலாம் எனக் கூறுமறைமொழியின்படி விபூதி ருத்திராக்ஷம் அணிந்தோராய் ஸ்ரீ பஞ்சநதப்பெருமான் திருநாமத்தைக் கரகோஷத்துடன் தோத்திரம் செய்துகொண்டு செல்கின்ற காக்ஷியையும், பிரம



ஞோத்தமர்கள் வேதாத்தியயனம் செய்துகொண்டு செல்கின்ற அற்புதத்தையும், அகப்பற்றுப் புறப்பற்றாகிய இரண்டினையும் ஒழித்து எம்பெருமானது திருவடி நிழலையே அடையவேண்டும் என்ற விருப்பமுடைய சந்நியாசிகள் எவ்விடத்தும் தேவார திருவாசாதிகளையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் தங்களையடுத்த சிஷ்யர்களுக்கு அவரவர்களுடைய பக்குவத்துக்குத் தக்கவாறு ஐயம், திரிபு, அறியாமையென்னும் முக்குற்றமுமகலப் போதித்து விளங்குகின்ற மேன்மையையும், கண்டு மிக்க பேரானந்தம் அடைந்து, அங்கு சிறிது காலம் வசிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் காவிரியில் சங்கற்ப பூர்வமாக ஸ்நானம் செய்து தானம், தருமம், க்ஷேத்திர சிரார்த்தம் முதலியவைகளையும் செய்து முடித்துக்கொண்டு ஆலயத்தினுட் சென்று அங்கு பரமப்பிரகாச ரூபமாய் விளங்கும் பஞ்சநதீஸ்வரப் பெருமானையும் அறம் வளர்த்த நாயகியாரையும் தெரிசனை செய்து கொண்டு பிரதக்ஷணமாய் வெளியே வரும் சமயத்தில் ஜடாபஸ்ம ருத்திராக்ஷதாரியாய் எழுந்தருளியிருக்கும் துர்வாச மகரிஷியைக் கண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்தெழுந்து நின்றனன். அங்ஙனம் நின்ற அரசனை மகரிஷியானவர் நோக்கி ஏ பூபாலா! நீயும் உன் நகரத்தவர்களும் க்ஷேமமா இப்பொழுது யாது காரணம் பொருட்டு இங்கு வந்தாய் என்று குசலப்பிரச்னம் செய்யவே அரசனானவன் பின்னரும் வணங்கி சுவாமின்! தங்களது ஆசிர்வாத பலத்தால் யாவும் க்ஷேமமே, அடியேன் இப்போது இங்கு வந்த காரணம் திருவுள்ளம் அறிந்ததாகும், ஆதலால் என் கோரிக்கை பூர்த்தியாகும் வண்ணம் ஆசிர்வதித்தருளல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ள மகரிஷியானவர் விஷயத்தை அறிந்துகொண்டவராய் ஏ சுதர்மராஜனே! நீ நினைத்த காரியம் முடிந்துவிட்டதாக மகிழ்ச்சியடையக்கடவாய். நாரதர் முதலிய மகரிஷிகளின் ஆக்ஞைப்படி கைலாய தெரிசனத்தால் உன் பூர்வ கர்மம் நிவர்த்தியாதற்பொருட்டு அதனை இந்த பஞ்சநத க்ஷேத்திரத்தில் வரவழைத்துத் தருகின்றேன் அதுவரையில் சித்தசமாதானத்தோடு இத்தலத்தைவிட்டு நீங்காது வசிக்கக்கடவாய் என ஆக்ஞாபித்துத்தான் பரமபதியாகிய சிவபெருமானை நினைந்து தினம் ஒன்றுக்கு முப்பதினாயிரம் விதமாக ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நாற்பது நாள் ஜெபித்துக்கொண்டுவந்து முடிவில் உமைபாகனே, ருத்திரனே, பிரம விஷ்ணுவாதி தேவர்களால் பூஜிக்கப்பட்டவனே, அடியார்கள் அண்டையும் பாதபங்கஜனே, பரம ஞானிகள் அடையும் ஆத்ம சொரூபனே, சுவாநுபூதிப் பிரசித்தனே, அகண்ட

பரிபூரண சச்சிதானந்தப் பிரம சொரூபனே, பஞ்சநதீஸ்வரனே எனப் பலவாறாக ஸ்தவுத்தியம் செய்து நிற்க சிவபரஞ்சுடர் அத்தோத்திரத்திற்கு மகிழ்ந்தவராய், பார்வதிதேவியார், விநாயகப்பெருமான் குமாரக்கடவுள் சமேதமாக ரிஷபாரூடராய் நந்தியாதி சிவகணநாதர்கள் புடைசூழக் காக்ஷி தந்தருளி ஏ துர்வாசா! நம்மை ஸ்மரித்த காரணத்தை விண்ணப்பித்துக்கொள்ளக்கடவாய் எனத் திருவாய் மலர்ந்தருள மகரிஷியானவர் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து எழுந்து கண்களில் ஆனந்தவெள்ளம் பெருக்கெடுத்து ஓடவும் சரீரத்தில் ரோமாஞ்சமாகவும் மயிர்க்கூச்சலிடவும், இரு கரங்களையும் சிரத்தின்மேல் குவித்து ஈசுவரஸ்தோத்திரம் செய்தவராய் நின்றுகொண்டு எம் பெருமானே! மகா ஞான யோகியருள்ளத்தமர்ந்த நித்தியமங்கள மூர்த்தியே! தேவரீருடைய திருக்கோலக் காக்ஷியால் கிருதார்த்தன் ஆயினேன். அடியேனுடைய எண்ணம் இன்னதென்பது திருவுள்ளம் அறிந்ததாயினும், அடியார்கள் தங்கள் எண்ணத்தை திருச்சந்நிதானத்தில் முறையிட்டுக் குறையிரந்து நிற்றல்வேண்டுமென்ற முறைமையினாலும், உன் எண்ணத்தைத் தெரிவிக்கக்கடவாய் என ஆக்ஞாபித்தபடியாலும் விண்ணப்பித்துக்கொள்ளுகின்றேன், அதனைத் திருச்செவி சாத்தியருளி அடியேனுடைய கோரிக்கை பூர்த்தியடையக் கிருபைபாலித்தருளல்வேண்டுமென்று பின்னரும் நமஸ்கரித்து எழுந்தவராய்த் தெரிவித்துக்கொள்வாராயினர். கருணாநிதே! அவந்திபுரத்தை ஆளும் சுரதமகாராஜனென்பவன் புத்திரப் பேறின்மையால் நாரதர் முதலிய மகரிஷிகளை அடைந்து தன் குறையைத் தெரிவித்துக்கொள்ள அன்னவர்கள் அவனுடைய பூர்வஜென்ம கர்மத்தையும் கைலாய தெரிசனத்தால் அது நிவிர்த்தியாய்ப் புத்திரன் உண்டாகும் திறத்தையும் கூறி விடுக்க அவன் இங்கு வந்து அடியேனைச் சரணடைந்து சங்கதியைத் தெரிவித்துக்கொள்ளவே யான் அவனுக்கு கைலாய தெரிசனம் இந்த க்ஷேத்திரத்தில் உனக்குக் கிடைக்கும்படி செய்விக்கின்றேன் என ஆறுதி கூறி இங்கு வசிக்கும்படி செய்திருக்கின்றபடியால் என்னை அடிமைகொண்டு ஆளும் தயாநிதியே! கைலாய பர்வதத்தை இங்கு வரவழைத்து அவனுக்குத் தெரிசனந் தந்தருளி கர்ம நிவிர்த்தி செய்வதோடு உத்தமகுண மேருவாகிய புத்திரனையும் அடைந்துய்யுமாறு கிருபை செய்தருளல் வேண்டுமென பிரார்த்தித்து நின்றனர். இவ்வாறு நிற்கவே, அவர் பிரார்த்தனை அனைத்தையும் திருச்செவி சாத்தியருளிய சிவபெருமான் மகரிஷியை நோக்கி ஏ ரிஷிபுங்கவ! உன் எண்ணத்தை இப்



பொழுதே பூர்த்தி செய்விக்கின்றோம் எனத் திருவாய்மலர்ந்தருளி நந்திகேஸ்வரரைப் பார்த்து ஏ பக்தோத்தமனாகிய நந்தி! நீ இப்பொழுதே நம் உலகம் சென்று அங்கு இருக்கும் கைலயங்கிரியை அதிசீக்கிரத்தில், இங்கு கொண்டுவரக்கடவாய் என ஆக்ஞாபித்தருள நந்திபிரான் அவ்வாக்ஞையை சிரமேல் வகித்தவராய்ப் பணிந்தெழுந்து விடைபெற்றுக்கொண்டு சென்று கைலாய பர்வதத்தை எடுத்துவந்து ஆலயத்துக்கு இருமருங்கினும் நிறுவிப் பரமசிவனுக்கு விண்ணப்பித்து நிற்க, உடனே பரமபதியானவர் மகரிஷியை நோக்கி துர்வாச! நம்முடைய ஆலயத்தின் இருமருங்கினும் கைலாயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றமையால் அவைகளில் நாம் சிவலிங்க சொரூபமாக எழுந்தருளி இருக்கின்றோம், புத்திரன் இல்லாதவர்கள் பக்தி சிரத்தையோடு நம்மை அவ்விரண்டு இடத்திலும் தெரிசிப்பார்களேயானால், சகலகுண சம்பன்னனான புத்திரனை அடைந்து வாழ்வது நிச்சயமாகும். அஃதன்றியும் இன்றுமுதல் இந்த க்ஷேத்திரமானது கைலாயமாகவும் இதில் வசிக்கும் சிவகோடிகள் யாவும் கைலாய வாசிகளாகவும் விளங்கக்கடவது. உன் எண்ணம் பூர்த்தியாகும்படி சுரதமகாராஜனுக்குத் தெரிசனம் செய்துவைக்கக்கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளி மகாலிங்கத்திலுள் மறைந்தருளினர். உடனே துர்வாச மகரிஷியானவர் சுரதமகாராஜனை அழைத்து தெரிசனம் செய்துவைக்க அன்னவன் அளவிறந்த மகிழ்ச்சியை அடைந்தவனாய் தென் கைலாயம், வட கைலாயம் என்ற இரண்டு இடத்திலும் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானைப் பன்முறை பணிந்தெழுந்து அஞ்சலியஸ்தனாய் நின்றுகொண்டு சர்வ ஜீவதயாபர மூர்த்தியே! விஷ்ணுவின் திருக்கண்ணிலங்கிய பாதபங்கஜனே! பிரமன் சிரமிலங்கிய திருக்கையனே, சிவ சொரூபனே, ஆலகாலவிஷபோஜனனே, வேதவேதாந்த ஆகமாதிகளால் அறியப்படாதவனே, உள்ளன்போடு பூஜிக்கும் அடியவர்கட்கு எளிதில் அகப்படத்தக்கவனே, நிர்க்குண நிராமய நிரஞ்சன நித்தியானந்த சச்சிதானந்த சொரூபனே, ஜபேசனே, பஞ்சநதீசனே, எனப் பலவாறாக ஸ்தோத்திரம் செய்து நிற்க எம்பெருமான் அத்தோத்திரத்திற்கு மனமுருகிச் சிவலிங்கத்தினின்றும் சோமாஸ்கந்த மூர்த்தமாய் எழுந்தருளிச் சுரதமகாராஜனை நோக்கி ஏ ராஜசிரேஷ்டா! உனது ஸ்தோத்திரத்தால் பேரானந்தமடைந்தோம், நமது அனுக்கிரகத்தால் நிறைந்த ஆயுளுடையானும் சிவபக்தியிற் பிரியனும், வேதவேதாங்கபாரங்கதனும், நவமன்மத ரூபியாகிய புத்திரனை

உடையவனுமான ஓர் புத்திரனை அடைந்து உலக இன்பத்தை அநுபவித்துப் பின்னர் அப்பத நீழலை அடையக்கடவாய் எனத் திருவாய் மலர்ந்தருளிப் பின்னும் சிவலிங்கத்தின் உள்ளே மறைந்தருளினார். அங்ஙனமாகச் சிவபெருமானது திருமொழியைக் கேட்ட சுதமகாராஜனானவன் தன்னுள் அடங்கா ஆனந்தத்தோடு சிவலிங்கப் பெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டவனாய் துர்வாச மகரிஷியை வணங்கி என் ஐயனே! தேவரீருடைய அநுக்கிரகத்தால் கைலாய தெரிசனத்தோடு புத்திரப்பேற்றினை அடைந்ததுமன்றி சிவபெருமானது திருக்கோல காக்ஷியைக் கண்டு தெரிசித்ததால் ஆகும் பெரும் பாக்கியத்தினையும் பெற்று ஜென்ம சாபல்யம் உடையவனாயினேன். இனி என்னகரம் செல்ல விடை கொடுத்தருளல் வேண்டுமென் றுத்திரவு பெற்றுக்கொண்டவனாய் அந்திருபுரியை அடைந்து அரசாட்சி செய்துகொண்டிருந்தனன். அங்ஙனம் நிகழும் காலத்தில் அவ்வரசன் மனைவியானவள் கர்ப்பவதியாக இருந்த மகிமை மேற்கொண்டு புஞ்சவனம், சீமந்தம் முதலிய சடங்குகளை முறைப்படி செய்துகொண்டு வர பத்தாவது மாதம் நிறைந்தவுடன் இலக்கின பலன், சந்திர பலன், முதலிய கிரகாதிகள் நன்மையோடு விளங்கும் சுப தினத்தில் இள ஞாயிறு போன்ற குழந்தையைப் பெற்றெடுத்தனள். அங்ஙனமாகக் குழந்தை பிறந்த சுப வார்த்தையை அரசன் தோழிமார்களால் அறிந்து உடனே விரைதான முதலிய தானதருமாதிகளைச் செய்து, சிவப்பிரசாதத்தால் கிடைத்த புத்திரன் ஆதலின் குழந்தைக்கு சிவதத்தன் என்ற பெயரிட்டு ஜாதகர்மம் அன்னப்பிராசனம், கர்ணவேதை, ஆண்டுநிறைவு, சௌளம், உபநயனம் முதலிய கிரியைகளைக் குறைவர நடத்தியும் நல்ல ஆசிரியரிடத்தில் கற்றுணரத்தக்க வேதாதி முதலிய அறுபத்திநான்கு கலைகளிலும் மிக்க வல்லவன் இவன் எனக் கற்றுணரச் செய்தும் அரசாளுதற்குரிய தனுர்வேத முதலியவைகளில் வல்லவனாக்கியும் "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" தந்தையானவன் புத்திரனுக்குச் செய்யும் கடமை சபையினிடத்து எவர்களாலும் மேலா[illegible] அறிவுடையான் இவனென மதிக்குமாறு செய்வித்தல் ஒன்றே எனக் கூறு மறைமொழியின்படி செய்வித்து அத்யந்த சந்தோஷத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கக் குழந்தையானவன், "மகன் றந்தைக் காற்று முதவி இவன்றந்தை என்னோற்றான் கொல்லெனும் சொல்" புத்திரனானவன் தன் தந்தைக்குச் செய்யும் உதவியாவது கண்டோர் யாவரும் இவனைப் பெறுதற்கு இவன் தகப்பன் என்ன தவம் செய்



தாரே எனப் புகழ்ந்து கொண்டாடுதல் ஒன்றே எனக் கூறும் திருவாக்கியத்துக் கிணங்க சகல குண சம்பன்னனாய் இள அரசாகும் தகுதியைப் பெற்று விளங்க அரசனானவன் அன்னவனுக்கு யுவராசபட்டாபிஷேகம் செய்து வைத்து மிக மகிழ்ச்சியுடன் ராச்சியாதிகாரம் செய்துகொண்டு வந்தனன். அங்ஙனம் சிலநாள் செல்லவே ராஜனானவன் புத்திரன் செய்கை அனைத்தையும் நன்குணர்ந்தறிந்து இனி அரசைத் தாங்குவானென மதித்து ராச்சியத்தை அவ்விடத்தில் ஒப்புவித்தவனாய் சில சைன்னியங்களுடன் திருவையாற்றை அடைந்து காவிரியில் ஸ்நானம் செய்து பஞ்சநதீசப் பெருமானையும் அறம் வளர்த்த நாயகியாரையும், தென் கைலாயம், வடகைலாயம் என்ற இரண்டிடத்திலும் வரதாயக மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கின்ற சிவலிங்கப்பெருமானையும் தெரிசனை செய்துகொண்டு அளவிறந்த திரவியத்தையும் நூறு கிராமங்களையும் சிலர் சாசன பூர்வமாக சிவார்ப்பணம் செய்துகொடுத்து வைகாசிமாதப் பூர்வபக்ஷத்தில் அஜாரோகணம் செய்து ரதோத்சவம் முதலிய உத்சவாதிகளைப் பத்து தினம் வரையில் குறைவர நடத்தி தன்னகரம் சென்று சில காலம் வாழ்ந்திருந்து பரம கருணாநிதியாகிய பஞ்சநதீசப்பெருமான் திருவடி நீழலை அடைந்தனன். அதன் பின்னர் சிவதத்த மகாராஜன் ராச்சியத்தைப் பரிபாலித்து வந்தவனாய் தன் குல குருவாகிய தௌம்ய மகரிஷியால் பஞ்சநதீஸ்வரப் பெருமான் திருவருளால் தான் பிறந்த வர்த்தமானத்தை அறிந்துகொண்டு திருவையாற்றை அடைந்து பஞ்சநதீசப்பெருமானை வணங்கி பங்குனிமாதம் சுக்கிலபக்ஷத்தில் அஜாரோகணம் செய்து உத்சவம் கொண்டாடி சிவார்ப்பணமாக சில கிராமங்களை விடுத்துத் தன் நகரம் சேர்ந்தவனாய் தன் குமாரனாகிய சங்கர மகாராஜனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து சிவலோகத்தை அடைந்தனன். அதன் பின் சங்கர மகாராஜன் ராச்சியாதிகாரம் செய்துவந்து தன் மூதாதைகள் கொண்டாடிய பஞ்சநத க்ஷேத்திரத்தை அடைந்து சித்திரை மாதத்தில் உத்சவ ஆரம்பம் செய்து நடத்தி அளவிறந்த கிராமங்களை சிவார்ப்பணமாக பஞ்சநதீசப்பெருமானுக்கு[illegible] விடுத்து தன்னகரம் சார்ந்து புத்திர மித்திர களத்திராதிகளுடன் நித்திய மங்களகரமாய் வாழ்ந்துகொண்டிருந்தனன். ரிஷிபுங்கவர்காள்! பஞ்சநத க்ஷேத்திரத்தில் தென் கைலாயம் வட கைலாயம் என்ற இரண்டிடத்திலும் சுதமகாராஜனுக்கு புத்திரப் பேற்றினை கொடுத்து எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானை காவிரியில் ஸ்நானம் செய்து உள்ளன்

போடு பூஜிக்கப்பட்டவர்கள் குணமேருவாகிய புத்திரர்களை அடை வதோடு இஷ்டகாம்யார்த்த சித்திகளையும் பெற்று சிவபெருமானது திருவருட்குப் பாத்திரர்களாக வாழ்வார்கள். இது சத்தியமாகும் நன்குணரக் கடவீர்கள் எனத் திருவாய் மலர்ந்தருளி சூதபுராணிக ரானவர் சுரதமஹாராஜன் சரித்திரத்தை பூர்த்தி செய்து சுசரிதன் எமபயம் நீங்கி முத்திப் பேற்றினைப் பெற்றுய்ந்த சரித்திரத்தைக் கூறுவான் தொடங்கினர்.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

## ௪ சுசரிதன் எமபயம் நீங்கி முத்தி அடைந்த அத்தியாயம்.

கௌதமீ தீரதேசத்தில் சுதவசி என்னும் கிருாமத்தையு டைய ஓர் பிராமணோத்தமர், இருந்தனர். அன்னவர், கற்பிற்சிறந்த சுசீலை என்னும் தன்னில்லாளோடு ஒழுக்கம் ஆசாரம் முதலியவைக ளில் குறைபாடின்றி இல்லற தருமத்தை நடாத்திக்கொண்டு வரும் காலத்தில் அவர் செய்த நற்றவப்பேறே ஒரு திருவுருவெடுத்தாற்போ ன்று மனைவியாளானவள் ஓர் ஆண் மகவைப் பெற்றனள். அக்குழந் தைக்கு மறையவர் குலத்துக்குரிய கிரிகைகளை வழுவின்றி நடத்தி சுசரிதனென்ற நாமமிட்டு மிக்க அருமை பெருமையோடு வளர்த்துக் கொண்டு வரும் காலத்தில் அத்தேசத்தில் மிகுந்த பஞ்சம் நேரிடப் பிராமணோத்தமர் பழமைவதிகரானதால் அப்பஞ்ச காலத்தைக்கழி க்க தனக்கு வரும் ஊதியம் போராததினால் மிக்க வருத்தமடை ந்து வேறு தேசம் சென்றுவது பிழைப்போமென்ற எண்ணங்கொ ண்டவராய் அவ்வூரை விட்டு மனையாளோடும் புத்திரனோடும் வழிக் கொண்டு அநேக தேசங்களை எல்லாம் கடந்து வரும்போது மார்க் கமத்தியில் மரணத்தை அடைய அவர் மனைவியாகிய சுசீலை எனபவ ளும் நாயகனோடு அநுமரணத்தை அடைந்துவிட்டனள். அவ்வாறு இருவரும் ஏககாலத்தில் மரணமடையவே சுசரிதனாகிய குழந்தை யானவன் அநாதரவாய் மிக்க துக்கத்தை அடைந்து சகிக்கமுடியாது வருந்தி கடைசியாய் "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மா ண்டார் வருவரோ மாநிலத்தில்" அநேக வருஷகாலம் கண்ணீர் விட்டு புவியில் புரண்டு புரண்டு அழுதாலும் இறந்தவர் ஒருபோதும் வா ரார் என்ற நீதி வாக்கியத்தை உணர்ந்து ஒருவாறு தேறினவனாய் தாய் தந்தையர் இருவருக்கும் செய்யவேண்டிய கிரிகைகளை முடித்து





விட்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டு சிவாலயங்களால் அலங்கரி க்கப்பட்ட இரு கரையையுமுடைய காவிரிநதியை அடைந்து ஸ்நா னம் செய்து ஆங்காங்குள்ள சிவாலயங்களை எல்லாம் தெரிசித்துக் கொண்டு கடைசியாய் திருப்பழனம் வந்து சேர்ந்து ஸ்னானம் முத லிய நித்திய கருமங்களை முடித்து அங்குள்ள பிராமணரில்லங்களோ றும் பிச்சை ஏற்றுண்டு வழிநடைச் சிரமத்தினாலும் தாய் தந்தை யர்களை இழந்து இவ்வாறு அநாதியாய் விட்டோமே என்ற துக்கம் மிகுதியினாலும் ஓர் விருக்ஷத்தின் அடியில் படுத்து நித்திரை செய்த னன். அங்ஙனம் நித்திரை செய்துகொண்டிருக்கின்ற சமயத்தில் கருத்தமேனியும், சிவந்த குஞ்சியும், வக்கிர தந்தங்களுமாகிய கோர ரூபத்துடன் ஓர் புருஷன் கனவினிடமாகத் தோன்றி எ பிராமணா! நீ இதற்கு ஐந்தாநாள் மரணத்தை அடைவாயெனத் தெரிவிக்க அதைக் கேட்டவுடன் மிகுந்த பயமுடையவனாய் நித்திரைவிட்டு எழுந்து நம் தாய் தந்தையர்க்கு வந்த மரணம் நமக்கும் வந்து விட்டதுபோலும் "ஹரேணாபி ஹரிணாபி பிரம்மணாபி சுராபி லலா டலிகிதாரேகா பரிமாஷ்டும் நசக்யதே" பிரமன், விஷ்ணு, சிவபிரான் முதலிய மற்றத் தேவர்களாலும் எழுதிய எழுத்தை அழிக்கமுடியா தெனக் கூறும் நீதிவாக்கியத்தின்படி நடக்கும். அதற்கு நாம் என்ன செய்வது என்று ஒருவாறு தேறிப் பிறகு மரண பயத்தைப் போக்கக்கூடியது பஞ்சநத க்ஷேத்திரம் எனவும் "வினையை வெல்ப வன் அங்கெய்தி வதிவதே வேண்டுமோதோ" தீய வினையைப் போக்கும் கருத்துடையவன் அங்கு சென்று வசிக்கவேண்டும் எனவும் அந்த க்ஷேத்திரத்தில் மரணம் அடைவோர் பஞ்சநதீசப்பெருமான் திரு வடி நீழலைச் சேர்வர் எனவும், வேதாகமங்கள் கூறுகின்றபடியால் அங்ஙனமாவது செய்வோமென்று ஆலோசனை செய்தவனாய் அவ்வி டம்விட்டுப் புறப்பட்டு திருவையாற்றை அடைந்து காவிரியில் ஸ்நா னம் செய்து நித்திய கருமானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு சிவதெரிசனார்த்தம் ஆலயத்தினுட் போகும்பொழுது ஆங்கு தெ ற்குவாயலில் சிவானுக்கிரக சிரேஷ்டராய் எழுந்தருளியிருக்கும் வசிஷ்ட மகரிஷியைக் கண்டு பணிந்தெழுந்து மனதில் மரண பயமாகிய கிலேசத்தை உடையவனாதலின் ஓ என வாய்விட்டுக் கதறி சுவாமின்! அடியேனை ரக்ஷித்தருளவேண்டும் எனக் குவிந்து பிரார்த்து நின்றனன். அங்ஙனம் நிற்க மகரிஷியானவர் அவனை நோ க்கி எ பிராமணா! நீ யாவன், எதனால் பயமடைந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டனை, விஷயத்தைத் தெரிவிக்க

கடவாய் என்று ஆக்ஞாபிக்க; சுசரிதன் பின்னும் வணங்கி நின்று தன் வரலாறு யாவற்றையும் தெரிவித்தவனாய் தனக்கு ஏற்படும் மரண பயத்தையும் தெரிவித்துக்கொள்ள அதைக் கேட்ட மகரிஷியானவர் அவனைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம் கொண்டவராய் ஞானதிருஷ்டியால் அவன் கருமத்தை அறிந்து கொண்டு ஏ சுசரிதா! நீ பூர்வ ஜென்மத்தில் ஆசாரியன் முன்னிலையாகத் தெரிந்துகொள்ளவேண்டிய மறை ஆகமம் உபநிஷத் முதலிய தெய்வீக நூல்களைக் கற்ற கல்வியின் திறங்கொண்டு தெரிந்து கொண்ட தோஷத்தினால் ரௌரவம் கும்பிபாகமுதலிய கொடிய நரகங்களில் நூறு வருஷங்கள் கிடந்து வருந்திப் பின் கழுதையாகப் பத்து ஜென்மமும், நாயாகப் பத்து ஜென்மமும், கழுகு, காகம், நீசன், சங்கராஜாதி, சூத்திரன், வைசியன், க்ஷத்திரியன் இவைகளில் ஒவ்வொரு ஜென்மமும் எடுத்துக்கடைசியாய் பிராமணனாகப் பிறந்து இதனோடு பனிரெண்டு பிறவியாக அற்பாயுளைப்பெற்றே வந்தனை, இன்னும் அங்ஙனமாகவே அற்பாயுளையே பெறுவாயானாலும் அத்தோஷத்துக்குத் தக்கவாறு மேற்கூறியுள்ள ஜென்மங்கள் முறையே வந்தும் உண்மை ஞானத்தை அளிக்கத்தக்க கல்வியைக் கற்றிருந்த சுபபலத்தால் ஜென்மங்கள் ஒன்றுக்கொன்று உயர்வாகி வந்ததோடு ஜென்மங்கள்தோறும் நன்மார்க்கத்திலேயே சென்று கொண்டிருந்த விசேஷத்தால் அத்தோஷம் சிறிது சிறிதாகத் தேய்ந்துவந்து முற்றும் நீங்கவேண்டிய காலம் வந்துவிட்டவே "பொன்னியாற்றிடைப்படிபவர் புன்கணேயுறுமே" காவிரி நதியில் ஸ்நானம் செய்வோர் துன்பத்தினின்றும் நீங்குவர் என்ற திருமொழிப்படி காவிரி நதியிற்படிந்து நம்மைச் சரணாக வந்து அடைந்தனை அங்ஙனமாக இப்போது நாம் உபதேசிக்கப்போகின்ற எம பயம் போக்கி சிவசரணாரவிந்தத்தைத் தரும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைப் பெற்றுக் கொண்டு உதயத்தில் காவிரி ஸ்நானம் செய்து விபூதி ருத்திராக்ஷம் அணிந்தவனாய் பஞ்சநதீசப்பெருமான் அறம் வளர்த்த நாயகியாரோடு அடியவர்கள் உய்யும் எண்ணம் திருக்கோயில் கொண்டருளிய சிவாலயத்தை மௌனமாக நூறு பிரதக்ஷணமும், அஸ்தமான முதல் உதய பரியந்தம் பஞ்சாக்ஷர ஜெபமும் ருத்திரஜமக பாராயணமும் சிவதரிசனமும் செய்துகொண்டு வருவாயேல் காலன் உன் ...டத்தில் வரமாட்டான் ஆதலால் அங்ஙனம் செய்யக்கடவாய் என்பதாகத் தெரிவித்து பஞ்சாக்ஷரத்தை பிரண பீஜாக்ஷரத்தோடு உபதேசம் செய்தருளினர். செய்யவே சுசரிதன் அதனை வணக்கத்



தோடு பெற்றுக்கொண்டு சென்று ஆசிரியர் ஆக்ஞையில் கொஞ்சமும் வழுவாதவனாய் சொல்லியவாறு நடத்தி வந்து ஐந்தாம் நாள் ஸ்நானம் செய்து ஆலயத்துக்கு வர உத்தேசித்து புறப்படும் சமயத்தில் காவேரியின் தென்கரையில் எமன் மகிஷாரூடனாய் கிங்கரர்களோடு கோர ரூபத்துடன் நின்றுகொண்டிருப்பதை நோக்கி மிகப் பயந்து நடுங்கி வசிஷ்ட மகரிஷியானவர் எழுந்தருளியிருக்கும் ஆச்சிரமத்தை நோக்கிக் கதறிக்கொண்டு ஓட மகரிஷியானவர் சப்தத்தைக் கேட்டவுடன் எமன் வந்துவிட்டான்போலும் அதனால்தான் சுசரிதன் கதறிக்கொண்டு வருகின்றானென்று நிர்மானித்து எதிராக வந்து அலறிக்கொண்டு வருகின்ற அன்னவனைத் தனது திருக்கரத்தால் தட்டிக் கொடுத்து சுசரிதா! பயப்படாதே வா என்பதாக அழைத்துக்கொண்டு ஆலயத்தின் தெற்கு வாயலில் வந்து பஞ்சாக்ஷரத்தியானம் செய்யச் சொல்லிவிட்டுத் தாமும் சிவத்தியானத்துடன் பஞ்சாக்ஷர ஜெபம் செய்துகொண்டிருந்தனர். இங்கு இவ்வாறாக எமதருமனானவன் சுசரிதனைப்பிடிக்கும்பொருட்டு அங்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்து காலத்தை நோக்கிக்கொண்டு நிற்க அதைக் கண்ட வசிஷ்ட ரிஷியானவர் தண்டதரன் நிலைமையை நோக்கி இவன் நம்மை லக்ஷியம் செய்யாது சுசரிதனைப் பிடித்துக்கொண்டு போய்விடுவான் ஆதலால் அதனைத் தடுக்கும் பொருட்டு ஈஸ்வரனை அழைத்துக்கொள்ளல் வேண்டுமென்று நிர்மானித்தவராய் பஞ்சாபகேசப்பெருமானைத் தியானித்து ஸ்தோத்திரம் செய்ய அடியார்க்கு எளியனாகிய பரஞ்சுடர் அதனைத் திருவுளம்கொண்டு நந்திகேஸ்வரரை நோக்கி ஏ நந்தி! எமது அன்பனாகிய வசிஷ்ட ரிஷியால் பாதுகாக்கப்படுகின்ற சுசரிதனுக்கு எமதருமனால் ஓர் இடையூறும் நேராவண்ணம் ரக்ஷித்துவரக் கடவாய் என்று ஆக்ஞாபித்தருள அங்ஙனமே நந்திபிரானானவர் சிரோதாரணம் செய்து பெருமானது சரண பங்கயங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து விடை பெற்றுக்கொண்டவராய் திரிசூலத்துடன் சுசரிதனும் வசிஷ்ட மகரிஷியும் காணும்படி அவ்விடம் வந்து சூலாயுதத்தை நிலத்திலூன்றி அதன்மேல் திருக்கரத்தை வைத்துக்கொண்டு நின்றனர். அங்ஙனம் நிற்க எமதருமனானவன் வசிஷ்ட மகரிஷியையேயன்றி நந்திபிரானையும் லக்ஷியம் செய்யாதவனாய் சுசரிதனை பாசத்தால் வீசித்தண்டாயுதத்தால் புடைத்திழுத்து தன் உலகம் கொண்டுபோவதற்கான எத்தனத்துடன் ஆரவாரம் செய்யவே அதைக் கண்ட நந்திகேஸ்வரரானவர் தென்திசைத் தலைவனை நோக்கி ஏ யமதரும!

நாம் சிவாக்ஞையின்படிக்கு இச்சுசரிதனைக் காக்கும் பொருட்டு ஸ்ந்
நிருப்பதை யோசிக்காமலும் நம்மை லெக்ஷியம் செய்யாமலும் துஷ்
பிரத்தியம் செய்ய ஆரம்பித்துச் சுசரிதனைக் கொண்டுபோக பலாத்
காரம் செய்கின்றனை. அது தகுதியல்ல ஆதலால் அவனை விட்டுவிட்டு
உன் உலகம் செல்லக்கடவாயென்று ஆக்ஞாபிக்கவே அவ்வாக்
கியத்தை எமதருமனானவன் கொஞ்சம் லெக்ஷியம் செய்யாது பின்
னும் பலாத்காரம் செய்யவே நந்திபிரானானவர் அதை நோக்கி ஊழி
த்தீயையொத்த கோபாவேசராய் சூலாயுதத்தால் அவன் மார்பில
குத்திப் பூமியில் விழும்படி சாய்த்தனர். அவ்வாறு செய்ய எம
னானவன் "பெரியவரிடைப் பகைத்தோர் பிரங்கல் கெல்லிய கோ
லொப்பார்" பெரியோர்களிடத்தே பகையைக் கொண்டவர்கள் மலை
யைக் கெல்லிய குச்சிக்கிச்சமானமாய்க் கெடுவர் என்ற மொழிக்கு
இலக்கணமாகப் பூமியில் விழுந்து மரணத்தை அடைந்தனன். அப்
பனமாகச் சுசரிதன் மரண பயத்தினின்று நீங்கி உய்ந்தவனாய் வசி
ஷ்ட மகரிஷியை வணங்கி என் ஐயனே! "இழிந்த மாந்தரும் இக
பரத்தாசை நீத்துயர்ந்தோர், மொழிந்த நன்னெறிகைக்கொளில் முத்தி
வீடடைவர்" தியவினையின் பந்தத்தால் தாழ்மையுடைய மக்களான
வர்கள் அழியத் தக்க இம்மை மறுமையின் ஆசையை நீக்கி மேம்
பட்ட மகாத்மாக்கள் கூறியுள்ள நல்வழிச் செல்வராயின் முத்தி
இன்பத்தைப் பெற்றுய்வர் என்ற திருவாசகப்படி தங்கள் திரு
வாக்கின் வழிச் சென்றபடியால் நாயினும் கடையனாகிய யான் எம
பயத்தினின்றும் நீங்கப் பிழைத்தனன் கடத்தேற்பினேன், அடியேன்
இனிச் செய்யத்தக்கது என்னென வினவி வணங்கி நிற்க வசிஷ்ட
மகரிஷியானவர் அவன் கூறிய மொழிகளைக் கேட்டு அத்யந்த சந்
தோஷம் உடையவராய் அவனை நோக்கி பக்தியுடையாய்! குரு பக்
தியுடைய மேன்மையாளரில் நீ ஒருவனாவை, ஆதலால் இதன்மேல்
சிவகிருபையைப் பெற்று மோக்ஷ ஆனந்தத்தை அடையுமாறு எம்
பெருமானைக் குறித்துத் துதி செய்யக் கடவாய் என்று திருவாய்
மலர்ந்தருள அவ்வாக்ஞையைக் கைக்கொண்டவனாய் பஞ்சநதீசப்
பெருமானை மனதிலே நினைத்து ஸ்தோத்திரம் செய்துகொண்டு நின்
றனன். அவ்வாறு நிற்க சிவபெருமான் அவன் ஸ்துதிக்கு மகிழ்ந்
தவராய் ஆலயத்தின் தெற்கு வாயிலின் மேற்குப்பாகத்தில் எழுந்
தருளிச் சுசரிதனைப்பார்த்து எ அன்புடையாய்! உன்னுடைய ஸ்தோ
த்திரத்திற்கு மிக மகிழ்ந்து காக்ஷி தந்தருளினோம். நீ இன்று
முதல் உனக்குப் பிராணதானம் செய்த வசிஷ்ட மகரிஷியைப்



பிதாவாகவும், ஞானாசாரியனாகவும் எப்போதும் இடைவிடாது
தியானிக்கக் கடவை. ஒருவன் நம்மால் கோபிக்கப்படில் அதனை
ஆசாரியன் நிவர்த்திக்கக்கூடும், ஆசாரியனால் கோபிக்கப்படில்
அதனை நம்மாலும் தீர்க்கலரிது. இதை நன்குணர்ந்து நடந்துகொள்
கொண்டு நல்ல குலத்திற்பிறந்த கன்னிகையை மணம்புரிந்து கிர
காச்சிரமத்தை கைக்கொண்டவனாய் உத்தம குணமுள்ள புத்திர
னைப் பெற்று "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்தானென்றாங்
கைம்புலத்தாறோம்பல் தலை" பிதிர், தேவர், விருந்தினர், பந்துக்
கள் தான் என்ற ஐவருக்கும் பிரீதியான காரியங்களை வழுவாது நட
த்தி வந்து பின்னர் மோக்ஷத்தில் மனதைச் செலுத்தி எதார்த்த
மான நமது சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியாதி பதவிகளை முறை
யே பெற்று வாழ்ந்திருக்கக் கடவாயெனத் திருவாய் மலர்ந்தருளி
வசிஷ்ட மகரிஷியைப் பார்த்து எ ரிஷிபுங்கவ! இச்சுசரிதனை உமது
புத்திரனாகப் பாவித்து சகல காரியங்களையும் நடத்திவைக்கக் கட
வாயென ஆக்ஞாபித்து மரணமடைந்து கிடக்கும் எமன் மீது திரு
பாவிசாதனியம் செய்தருளினவராய் அவனைச் சீவிக்கும்படி செய்து
நிக்க உடனே எமதருமனானவன் நித்திரையினின்றும் எழுபவன்
போல் எழுந்து பலவாறாய்த் தோத்திரஞ் செய்து எம்பெருமானே!
அடியேன் செய்த பிழையினைப் பொறுத்து ரக்ஷித்தருளவேண்டு
மென்று விண்ணப்பித்தவனாய் சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்
தெழுந்து நிற்க அவ்வெமனை நோக்கி எ அந்தகா! நீ செய்த பிழை
யினைப் பொறுத்தருளினோம். இன்று முதல் இப்பஞ்சநத க்ஷேத்
திரத்தில் வசிக்கப்பட்டவர்களை கைலாசவாசிகளாகவும் நமது திரு
வருட்குப்பாத்திரர்களாகவும் எண்ணி அவர்களிடத்து அணுகாதிருக்
கக்கடவாய். அஃதன்றியும் இத்தலத்தில் மார்கழிமாதம் திருவா
திரை நக்ஷத்திரத்திலும், மகரசங்கராந்தியிலும் மாசிமக நக்ஷத்திரத்
திலும், பங்குனி உத்திரத்திலும், சித்திரை சித்திரநக்ஷத்திரத்திலும்,
வைகாசி விசாக நக்ஷத்திரத்திலும், சூரிய கிரஹணம், சந்திர கிரஹ
ணம், அமாவாசை, பௌர்ணமி, விதிபாதம், அர்த்தோதயம் மகோ
தயம், மாதப்பிறப்பு, ஏகாதசி முதலிய மற்றுமுள்ள புண்ணிய தின
ங்களிலும் காவிரியில் ஸ்நானஞ் செய்து தானதருமங்களை இயற்றி
யெவ்வித ரூபமாயுள்ள நம்மைத் தெரிசிப்பவர்கள் எவர்களோ அ
வர்கட்கு நீ விரோதம்பண்ணலாகாது. இங்கு மேற்கூறிய சத் கரு
மங்களைச் செய்பவர்களுக்குப் புண்ணியம் எப்படி விருத்தியாகின்
றதோ அதுபோலவே எமது ஆலயத்தின் அருகிலும், காவிரியிலும்

மல, ஜல விசர்ச்சனஞ் செய்பவர்கட்கு பாபம் விருத்தியாகும். ஓ எமதருமா! இன்னுங்கேட்கக்கடவாய் ரதோத்ஸவத்தில் நம்மைத் தெரிசிப்பவர்களும், அமாவாசை திதிப முப்பது தினத்திலும் சூரியோதயத்துக்கு முன் காவேரி ஸ்நானஞ் செய்பவர்களும் பௌர்ணமியிலும் கார்த்திகை மாதத்திலும் தீபதானஞ் செய்பவர்களும் மாதாபிதாக்களின் சிராத்தஞ் செய்பவர்களும், நரகவாதனையையும் உன்னுலகத்தையும் அடையமாட்டார்கள் ஆதலால் இவைகளைக் கவனித்து நடந்துகொள்ளக்கடவாய். உன்னுலகஞ் செல்லென ஆக்ஞாபித்தருளி சிவலிங்கத்தினுள்ளே மறைந்தருளினர். அங்ஙனமாய் எமதருமனானவன் உடனே தன்னுலகஞ் சேர்ந்து சிவாக்ஞையின்படி நடந்துகொண்டு வந்தனன். வசிஷ்ட மகரிஷியானவர் சுசரிதனை அழைத்துக்கொண்டு தன்னாச்சிரமஞ் சேர்ந்து சில காலஞ் சென்றபின் சங்கர ஆக்ஞைப்படி நற்குலத்திற் பிறந்த பெண்ணைச்சுசரிதனுக்கு விவாகஞ் செய்துவைக்க, அன்னவன் விவாகஞ் செய்துகொண்டு பத்தினியோடு மகரிஷியை வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டவனாய்த் தனது கௌதமீதீர தேசஞ்சேர்ந்து இல்லறம் வழுவாது நடாத்தி ஓர் புத்திரனைப்பெற்று அவனுக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து வைத்துவிட்டுத் திருவையாற்றை அடைந்து சிலகாலம் வசித்துப் பின் விதேக முத்தியையடைந்து உய்ந்தனன். நைமிசாரண்ணியவாசிகாள்! எமபயத்தையும் போக்கத் தக்க பஞ்சநத க்ஷேத்திரத்தின் மகிமை இரண்டாயிரம் நாவினையுடைய ஆதிசேஷனாலுங்கூற முடியாதென்றால் என் ஒரு நாவினாற்கூறத்திறத்தோ நன்கு உணரக்கடவீர்களெனத் திருவாய்மலர்ந்தருளிச் சுசரிதன் சரித்திரத்தை பூர்த்தி செய்தோராய் இலக்குமிதேவி வரலாறுரைத்த சரித்திரத்தைக் கூறுவான் ஆரம்பித்தனர்.

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

## ரு. இலக்குமி தேவிவரலாறுரைத்த அத்தியாயம்.

மகரிஷிகாள்! கேட்கக் கடவீர்கள் அனவத்தியா தேவியானவள் தன் நாயகனாகிய நாதசன்மாவைப் பணிந்தெழுந்து பிராண நாயகா! பஞ்சநத க்ஷேத்திர சிவாலயத்தில் பரம்பொருள் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு வடபாரிசத்தில் லக்ஷ்மிதேவியினது சந்நி



தானம் இருக்கின்றதே அது அங்ஙனம் இருப்பதற்கு காரணம் யாது அதைத் தெரிவித்தருளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள நாதசன்மாவானவர் அன்னவளை நோக்கி பெண்கள் நாயகமே! கேட்கக் கடவாய். முன் ஒரு காலத்தில் அளவிறந்த ரிஷிகளும், சந்நியாசிகளும், கிரகஸ்தர்களும் பிரமச்சாரிகளும், முத்தியை விரும்பி பஞ்சநத க்ஷேத்திரத்தை அடைந்து வசித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு இருக்குங்காலத்தில் பஞ்சமுண்டாகிச் சனங்கள் அன்னபானாதி முதலியவைகட்கு மிக்கதாரித்திரத்தையடைய அதை அறிந்த கௌதம ரிஷியானவர் பஞ்சம் நிவிர்த்தியாய் உலகம் செழிப்படைந்து வாழ்வதற்கான காரியத்தைச் செய்யவேண்டுமென்ற எண்ணங் கொண்டவராய் சித்தியமங்கள மூர்த்தியாகிய சிவபெருமானை மனதில் தியானித்துக்கொண்டு நாமஸ்தோத்திரஞ் செய்து நிற்க பஞ்சநதீசப்பெருமான் மகரிஷியின் தோத்திரத்திற்கு மிக மகிழ்ந்தவராய் இலக்குமி தேவியை நோக்கி இலக்குமி நீ நாம் இருக்கும் இடத்திற்கு உத்திர பாகத்தில் அமர்ந்து இந்த க்ஷேத்திரத்தில் வசிப்பவர்கட்கு அன்னபானாதி வஸ்துக்களைக் குறைவின்றிக் கொடுத்து ரக்ஷிக்கக்கடவாயென ஆக்ஞாபித்தருளி கௌதமரிஷி முன் பிரத்தியக்ஷமாய் ரிஷிசிரேஷ்டா! உனதுடைய வேண்டுகோளுக்கு இரங்கி நமது ஆலயத்திற்கு உத்திரபாகத்தில் இலக்குமியை ஸ்தாபனஞ் செய்து நம் அடியவர் யாவர்க்கும் வறுமை நீங்கப் பொருள் அளிக்கக்கடவாயென ஆக்ஞாபித்திருக்கின்றோம் ஆகையால் நீயும் மற்ற ரிஷிகளும் அன்னவளை ஆராதனை செய்து உலக வறுமையை நிவர்த்தித்து ரக்ஷிக்கக் கடவீர்கள் எனத் திருவாய்மலர்ந்தருளி மகாலிங்கத்தின் உள்ளே பிரவேசித்தருளினர். அவ்வாக்கியத்தைக் கேட்ட கௌதம ரிஷியானவர் மற்ற ரிஷிகளுடன் இலக்குமிதேவியின் ஆலயம் சேர்ந்து வஸ்திராபரண கந்தபுஷ்ப தூபதீப நைவேத்தியத்துடன் தினந்தோறும் வரதாயகியாய் எழுந்தருளியிருக்கும் கமலாசனியைத் துதித்து அஷ்ட ஐசுவரியங்களையும் பெற்றவராய் உலகிலுள்ள ஜீவகோடிகளது வறுமை நீங்கக் கொடுத்து ரக்ஷித்துக் கொண்டு வந்தனர். இவை நிற்க ஏ அனவத்தியாதேவி! இன்னும் அந்த இலக்குமிதேவியைப் பூசித்து தேவேந்திரன் தன் இஷ்டசித்திபெற்ற சரித்திரத்தையும் கூறுகின்றேன் கேட்கக் கடவாய். முன் ஒரு காலத்தில் அமராவதிக்கு இறைவனாகிய தேவேந்திரன் அசுரர்களுடைய உபத்திரவத்தை சகிக்கமுடியாது தன் குல குருவாகிய வியாழ பகவானை வணங்கி சுவாமின்! கொடிய பாவிகளாகி

யும் தானத்கு வழி வழிச் சத்துருக்களாகவும் இருக்கின்ற அசுரர்க
ளுடைய உபத்திரவம் நீங்கி அடியேன் சௌக்கியமாய் இருப்பதற்
கான ஓர் உபாயத்தைத் தெரிவித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்
செய்துகொள்ள அதைக் கேட்ட குருபகவானானவர் தேவேந்திர!
சொல்லுகின்றேன் கேட்கக் கடவாய் நீ பஞ்சநத க்ஷேத்திரத்தை
அடைந்து காவிரி ஸ்நானம் செய்து செம்பொற் சோதிஸ்வரரையும்,
அறம் வளர்த்த நாயகியாரையும் தெரிசித்துப் பின்னர் அங்கு எழுந்
தருளியிருக்கும் இலக்ஷுமிதேவியைப் பக்தி சிரத்தையுடன் பூசிப்
பாய் ஆனால் அசுரர்களுடைய உபத்திரவம் நீங்கி சௌக்கியத்தை
அடைவாய் இது சத்தியமாகுமென்று தெரிவித்தனர். அதைக்
கேட்ட தேவேந்திரனானவன் உடனே தன் உலகத்தைவிட்டுப் புறப்
பட்டு திருவையாற்றை அடைந்தவனாய் காவிரிநதியில் ஸ்நானம்
செய்து பஞ்சநதீசப்பெருமானையும் தருமசம்வர்த்தனியையும் வணங்கிப்
பலவாறு தோத்திரம் செய்து தன் குறையைத் தெரிவித்து அஞ்சலி
அஸ்தனாய் நின்றுகொண்டிருக்க உடனே சிவபெருமானும் அன்னவன்
முன் பிரத்தியக்ஷமாகி ஏ மகபதி! நமது அநுக்கிரகத்தால் உன்
பகைவர்களாகிய அசுரர்கள் நாசம் அடைவார்கள். அன்றியும்
இந்த ஆலயத்திற்கு உத்தரபாகத்தில் மகத் சக்தி சொரூபமாய்
எழுந்தருளியிருக்கும் இலக்ஷுமியை பூசிப்பாயானால் ஜெயப்பிராப்
தியையும், ஐசுவரியப் பெருக்கத்தையும் அடைவாய், உலகத்தில்
பராக்கிரமத்தை விரும்பினவர்கள் விஷ்ணுவையும், ஞான
த்தை விரும்பினவர்கள் உமையையும், திட சரீரத்தை விரும்பினவர்
கள் சூரியனையும், அழகை விரும்பினவர்கள் மன்மதனையும், பொ
ருளை விரும்பினவர்கள் இலக்ஷுமியையும் பூசிக்கவேண்டியது அவ
சியம் ஆகையால் நீ செல்வத்தினிடத்தில் விருப்பமுடையவன் ஆத
லின் இலக்ஷுமியை பூசித்து ஐசுவரியத்தை அடைவதுடன், இங்கு
சப்தமாதர்களையும் பிரதிட்டை செய்து பூசிப்பாயானால் சகல
சித்திகளையும் பெற்று நீ மங்களகரமாய் வாழ்வதுடன், மற்றவர்க
ளும் பூசித்து வியாதியாலும், தரித்திரத்தாலும், சத்துருக்களாலும்,
பிசாசங்களாலும், அரசர்களாலும், திருடர்களாலும், உபத்திர
வமடையாது எல்லாநன்மையும் பெற்று வாழ்ந்துகொண்டிருப்பார்
கள். இவ்வாறு நிச்சயமாகும் என்று திருவாய்மலர்ந்தருளி கௌரீசன
த்திருவுளமே மறைந்தருளினார். மறைந்தருளவே தேவேந்திரன்
உடனே அவ்விடத்தினின்றும் புறப்பட்டு இலக்ஷுமிதேவி ஆலயத்
தை அடைந்து தேவியின் அபிஷேகத்துக்காக விஸ்வகர்மாவினால் ஓர்



தடாகம் நிர்மிக்கச்செய்து அந்த ஜலத்தில் தேவாமிர்தத்தைக் கல
ந்து அபிஷேகஞ் செய்தும் ஆடை ஆபரணம், குங்குமம், சந்தனம்,
இவைகளால் அலங்கரித்தும், மதுரமுள்ள அன்னம், இனியகனிவர்
க்கங்கள், முதலிய நைவேத்தியங்களால் நிவேதித்தும், தாம்பூல முத
லிய முகவாசனைத்திரவியங்கள் ஈந்தும் தூபதீப முதலிய சோடசஉப
சாரங்களையுஞ் செய்தவனாய் சாஷ்டாங்கமாக விழுந்துபணிந்து சகல
லோகஜனனி, க்ஷீரசாகரி, விஷ்ணுமார்பை இடமாகக்கொண்ட நளி
னாக்ஷி, சமஸ்த தனவித்திய சொரூபிணி, என்று பலவாறுந் துதி
செய்து என் அம்மணி நீ என்றும் நீங்காது அடியேனுடைய பொ
க்கிஷத்தில் வீற்றிருந்து கிருபைசெய்தருளவேண்டுமென வேண்டிக்
கொண்டு நின்றனன். அங்ஙனம் நிற்க இலக்ஷுமி தேவியானவள்
தன்னைத்துதி செய்து நிற்கும் தேவேந்திரன் முன் பிரத்தியக்ஷமாகி
ஏ சுரர்குலாதிபா! உன் வேண்டுகோளின்படி சகல சம்பத்தும் உன்
பொக்கிஷத்தில் நிறைந்து விளங்குமாறு அநுக்கிரகஞ் செய்தோம்
நாம் ஒருவிடத்தில் என்றும் நிரந்தரம் வாழ்வதற்கு பரமேஸ்வர
னிடத்தில் அவர்கள் வைத்திருக்கும் பக்தியே காரணமாகையால் நீ
அதனை எக்காலத்தும் விடாது செய்துகொண்டு ஐஸ்வரிய
சம்பன்னனாய் வாழ்ந்துகொண்டிருக்கக்கடவாய் எனத் திருவாய்
மலர்ந்தருளினாள். அவ்வரத்தைப் பெற்றுக்கொண்டு அவ்விடத்தி
னின்றும் நீங்கி ஆலயத்திற்கு நிருதிமூலையில் அபிராமி, மகேஸ்வரி,
கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, காளி, என்னும் சப்த
மாதர்களை விஸ்வகர்மாவினால் பிரதிட்டையும் குருபகவானால் சுப
முகூர்த்தத்தில் ஆவாகனாதி காரியங்களையும் செய்வித்து அபிஷேக
அலங்கார தூபதீப நைவேத்தியங்களால் பூசித்தவனாய் சாஷ்டாங்க
மாக விழுந்து பணிந்து குறையிரந்து நின்றுகொண்டிருக்க, அன்னோ
ர் எழுவரும் பிரசன்னமாகி ஏ அமராவதிக்கிறைவா! நீ உன் பகை
ஞர்களாகிய அசுரர்களை ஜெயித்து வெற்றிப்பிரதாபத்தையடைவது
டன் எல்லாஞ் சிவன் செயல் என்றபடி சகல நன்மைக்கும் காரணன
னும் சப்தவாச்சியனாகிய பரமேஸ்வரனது திருவருளே காரணமென
நினைந்து அரசுபுரிந்து வரக்கடவாயென ஆக்ஞாபித்து மறைந்தரு
ளினர். தேவேந்திரன் அன்னவர்களது அருள் வாக்கியத்தையும்
பெற்றுக்கொண்டவனாய் உடனே தேவலோகம் போய்ச் சேர்ந்து
தன் சத்துருக்களாகிய அசுரர்களை யுத்தத்தில் ஜெயித்து அளவிறந்த
சந்தோஷத்துடன் ராஜ்யபரிபாலனஞ்செய்து வாழ்ந்துகொண்டிருந்
தான். ஏ அனவத்தியா தேவி! லெக்ஷுமீதேவி எழுந்தருளி இருப்

பதின் காரணம் இதுவாகும். பெண்கள் பெருமாட்டி உலகத்தில் எவர்கள் தேவேந்திரன் விஸ்வகர்மாவினால் நிர்மித்துத் தேவாமிர்தங் கலந்து விளங்கச் செய்துள்ள தடாகத்தில் ஸ்நானஞ் செய்து ஆங்கு எழுந்தருளியிருக்கும் கமலாசனியைப் பூஜிக்கின்றார்களோ அவர்கள் இம்மையில் நிறைந்த பொருளுடையவர்களாய் நல்ல புத்திரர்களையும் பெற்று வாழ்வார்கள் சப்தமாதர்களைப் பூஜித்தவர்கள் சத்துருபயமின்றி கீர்த்தியோடு விளங்குவர். இது உண்மையாகுமென நாதசன்மாவானவர் அனவத்தியாதேவிக்கு கூறியனாறு எ தவசிலர்காள்! உங்கட்கு கூறினேன் எவையும் அவனன்றியோரணுவு மசையாது. ஆதிமத்யாந்தரகிதனாகிய பஞ்சநதீசப்பெருமானது திருவருள் இன்றி ஒன்றும் நடவா; என்ற திருமொழிப்படி எந்தத் தேவர்களது வரத்தைப்பெற விரும்பினாலும் அவைகளுக்கு பரம சிவப்பிரசாதமே முக்கியமாகும் ஆதலால் அதனை திடச்சித்தத்தோடு உறுதியாய் நம்பக்கடவீர்கள். இது உண்மை ஆகுமெனக் கூறி சூதபுராணிகரானவர் இலக்குமிதேவி வரலாறுரைத்த சரித்திரத்தை பூர்த்தி செய்து கௌதமர் வரமடைந்த சரித்திரத்தைச் சொல்லுவான் ஆரம்பித்தனர்.

இலக்குமிதேவி வரலாறுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

---

## ௫. கௌதமர் வரம் அடைந்த அத்தியாயம்.

---

முன் ஒரு காலத்தில் கௌதம ரிஷியானவர் பஞ்சநதக்ஷேத்திரம் வந்து சேர்ந்து காவிரியில் திரிகால ஸ்நானம் செய்து நித்திய கருமானுஷ்டானங்களை விதிவழாது செய்து வந்ததோடு இன்றோரும் பதினாயிரம் பஞ்சாக்ஷரஜெபம், ருத்திரஜெபம், வேதபாராயணம் சிவார்ச்சனை, சிவாலயப்பிரதக்ஷணம், சோமவாரவிரதம், ஆகாரமின்றி வாய்வுபக்ஷணமும் பண்ணிக்கொண்டு ஜிதேந்திரியராய் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து ஒரு வருஷகாலம் வரையில் பஞ்சநதீசப் பெருமானை மனதில் உன்னித் தவம் செய்துகொண்டு வந்தனர், அங்ஙனம் செய்துகொண்டு வரவே சிவபரஞ்சுடர் அவர் தவத்திற்கு மகிழ்ந்தவராய் விநாயகப்பெருமான், கந்தவேள், உமையம்மையார் சமேதமாய் வெள்ளியங்கிரியை ஒத்த தருமவிடையின் மீது ஆரோகணித்து நந்தி பிருங்கி முதலிய கணநாதர் புடைசூழ்ந்து ஸ்தோத்திரஞ் செய்ய எழுந்தருளி அன்னவர்க்குத் திருக்கோலக்காக்ஷி



தந்து எ தவசிலனாகிய கௌதமரிஷி! உன்தவத்திற்கு உவந்து பிரத்தியக்ஷமாயினோம் வேண்டும் வரங்களைக் கேட்டுக்கொள்ளக் கடவாயெனத் திருவாய்மலர்ந்தருள கௌதமரானவர் எம்பெருமானது சரணாரவிந்தத்தில் வீழ்ந்து பணிந்து எழுந்து அஞ்சலி அஸ்தராய் கருணையங்கடலே! உனது திருக்கோலக்காக்ஷி ஆகிய பெரும் பேற்றினையடைந்த அடியேற்கு "புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா நின்னடி யென்மனத்தே வழுவாதிருக்கவரந்தால் வேண்டும்". மிக இழிந்த பிறவியாகிய புழுவின் ஜென்மம் வரினும் புண்ணிய சொரூபியாகிய உனது பாதமலர்கள் எனது உள்ளத்தைவிட்டு நீங்காது இருக்கும்படியான வரத்தைத் தந்தருள வேண்டுமெனக் கூறும் அருள்வாக்கியத்தின்படி, உனது திவ்ய சேவடியில் ஒருபோதும் நீங்காதிருக்கும் பத்தியையும், சமஸ்த விஷயங்களிலும் பற்றுதல் வைத்து அதனால் சஞ்சலம் அடையாது "வைராக்கியமே வாடயம்" வைராக்கியம் ஒன்றே நிர்ப்பயமானதெனக்கூறும் உண்மைமொழியின்படி சலியாத திடச்சித்தத்தையும், என் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் அதிதி பூஜை எக்காலத்திலும் குறைவும், வருத்தமும் இன்றி இனிது நடைபெறுமாறும், வயலில் விளையும் நெல் எல்லாம் அரிசியாகவே விளையவும், இப்பஞ்சநத க்ஷேத்திரத்தில் உள்ள நுண்மணல் முதலிய எல்லாவும் சிவலிங்கரூபமாய் விளங்குகின்றபடியால் மல, ஜல, விசர்ச்சனம் செய்யில் பாபம் ஆகும் என எண்ணும் அடியேன் திருச்சோற்றுத்துறை வசித்து நாள்தோறும் இங்குவந்து தெரிசித்துப் போகும்படியாகவும் வரம் தந்து ஆட்கொண்டருளல் வேண்டுமென வேண்டிக்கொண்டனர். சிவபெருமான் அதனைக் கேட்டு ஆனந்தம் உடையராய் மகரிஷியை நோக்கி எ ரிஷிபுங்கவ "மன யேவமனுஷியாணாம் காரணம் பந்தமோக்ஷயோ:"; மக்கட்பிறப்பினைப் பெற்றோர் யாவர்க்கும் அவரவர்கள் மனமே நன்மை தீமை இரண்டையும் தருதற்குக் காரணம் என்றபடி நல்ல வழியிற் செல்வோர் நன்மையையும் தீயவழியிற் செல்வோர் தீமையையும் அடைவார். ஆதலின் நல்ல வழியிலேயே சென்றுகொண்டிருக்கின்ற உனக்குயாவும் அங்ஙனமே கைகூடுமாறு அனுக்கிரகம் செய்தருளினோம், பெற்று உய்யக்கடவாய் என வரம் தந்தருளி மகாலிங்கத்தின் உள்ளே மறைந்தருள கௌதமரானவர் வரத்தைப்பெற்றுக்கொண்டு அவ்விடத்தினின்றும் நீங்கித் திருச்சோற்றுத்துறைக்கு வந்து சேர்ந்து சிவாக்ஞையின்படி ஆங்கு வயலில் விளையும் அரிசியைக்கொண்டு நான்கு வருணத்தவர் முதலியவர்களுக்கும் உயர்வு

தாழ்வு யென்ற ஆசார பேதம் இன்றி அன்னதானஞ் செய்து வந்துடன் அவர் அவர் சுபா சுபங்கட்குவேண்டும் சொர்ணதானமு[ம்] கொடுத்து பஞ்சநதீசப்பெருமானைத் தினந்தோறு சென்று நமஸ்[க]ரித்து வந்து ஆனந்தமாய் வசித்துக்கொண்டிருந்தனர். அவ்வாறு இருக்க சில நாட்சென்றபின் அன்னவுருல் ஆதரிக்கப்பட்டு வந்த பிராமணோத்தமர்களிற் சிலர் அவர் ஈஸ்வரப்பிரசாதத்தால் அடைந்துள்ள வரவிசேஷத்திற்கு பொறுமையுடையாராய் கௌதமர் பசுவைக்கொன்று கோகத்தி தோஷத்திற்கு ஆளாயினர் எனப் பொய்யான நிந்தைவசனங் கூறித் தங்கள் தங்கள் ஊருக்குச்செல்ல ஆரம்பிக்கவே அதை அறிந்த கௌதமர் மிகுந்த கோபம் கொண்டு அன்னவர்களை நோக்கி நீங்கள் பொய்யான நிந்தைகூறி நம்மைத் தூஷித்தபடியால் "சர்வசண்டாள தூஷக:"; பிறரைத் தூஷிப்பவன் நீசனாவனென்றபடி, குலம் வேதாத்தியானம் முதலிய நன்மைகளை இழந்து சூத்திரசம்பிரதாயத்துடன் மகாபாபிகளாகக்கடவீர்கள் எனச் சபித்து புறத்தேபோகவிட்டு மற்றுமுள்ள சாதுக்களோடு வசித்துக்கொண்டிருந்தனர். நைமிசாரண்யவாசிகாள்! பிராமணர்களாய்ப் பிறந்தும் கௌதம ரிஷிபால் செய்த நன்மையை மறந்து தூஷித்தபடியால் அவர்கள்யாவரும் "எந்நன்றி கொன்றார்க்கு முய் உண்டாமுய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு" எவ்வித நன்மையை மறந்தார்க்கு நீக்கிக்கொள்வதற்கு ஓர் வழியுண்டு ஒருவர் செய்த நன்றியை மறத்தில் அவர்கள் கடைத்தேருதற்கு ஓர்வழியும் இல்லையெனக் கூறும் மறைமொழியின்படி குலம் ஒழுக்கம் முதலியவைகளை இழந்து தாழ்மையையடைந்தனர். இது பற்றித்தான் "நன்றி மறப்பது நன்றன்று" ஒருவர் செய்த நன்மையை மறப்பது நன்று அல்ல எனக் கூறியதும். நன்கு கவனிக்கக்கடவீர்கள் எனத் திருவாய் மலர்ந்து சூத புராணிகரானவர் கௌதமர் வரம் அடைந்த சரித்திரத்தை பூர்த்தி செய்து சதாநந்தர் தவசித்தி அடைந்த சரித்திரத்தைக் கூற ஆரம்பித்தனர்.

ஆறுவது அத்தியாயம் முற்றிற்று.

## எ. சதாநந்தர் தபசித்தி அடைந்த அத்தியாயம்.

கௌதமரிஷியின் புத்திரராகிய சதாநந்த மகரிஷியானவர் ஓர் சமயத்தில் தன் தந்தையை வணங்கித் தந்தையீர்! உலகின் கண் சிவக்ஷேத்திரங்கள் அநேகம் இருக்கின்றதே அவைகளுள் காந்த



க்ஷேத்திரம் காலதாமதம் இன்றி புண்ணிய மிகுதியைத் தருவதோடு பஞ்சாக்ஷர ஜெப சித்தியையும் தரத்தக்கது அதனை அடியேன் தெரிந்துகொள்ளத் திருவாய்மலர்ந்து அருளல்வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டனர். அவ்விண்ணப்பத்தைக் கேட்ட கௌதமரானவர் சதாநந்தரை நோக்கி குழந்தாய்! அருமைக்காதலனே!! சொல்லுகின்றேன் கேட்கக்கடவாய். க்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளும் பஞ்சநதீசப் பெருமான் ஜீவர்களது மரணகாலத்தில் எழுந்தருளி வந்து தாரகமந்திரமாகிய பிரணவத்துடன் பஞ்சாக்ஷர மந்திர உபதேசஞ் செய்து முத்திப் பேற்றினைத் தந்து அருளும் பஞ்சநத க்ஷேத்திரமே மிக்க மேன்மையை உடையது ஆகும். அந்த க்ஷேத்திரத்தில் "சாற்று பொன்னியை மனத்திடை நினைக்கினுந், தனிப்போற்றி நின்றுதிப்பராயினுங் காணினும் பொருந்தும், ஏற்றமாயவன்னீரிடை மூழ்கினும் இம்மையும், பேற்றையார் குணிப்பாரவர் முத்தியே பெறுவர்" வேதங்களால் புகழ்ந்து கூறும் காவிரிநதியை மனதினால் நினைத்தாலும், ஒப்பற்ற அதன் திருநாமத்தை நாவாரத் தோத்திரம் செய்தாலும், கண்ணாரக் கண்டு தெரிசித்தாலும், மிக மேலாய அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தாலும், அங்ஙனம் செய்யப் பெறுபவர் முத்தி இன்பத்தையே பெற்று வாழ்வர் எனக்கூறும் காவிரி நதியில் ஸ்நானம் செய்து ஈஸ்வர தெரிசனம் செய்துகொண்டு ஜெபம் தபம் முதலியவைகளைச் செய்யில் அவைகள் ஒன்று அனந்தமாய்ப் பெருகி ஓங்கும். ஆதலால் நீ அவ்விடம் சென்று உன் இஷ்ட பூர்த்தி செய்துகொள்ளக் கடவாயெனத் திருவாய் மலர்ந்தருளினர். அதனைப் பக்தி சிரத்தையோடு கேட்ட சதாநந்தரானவர் உடனே தந்தையை வணங்கி விடை பெற்றுக்கொண்டவராய் திருவையாற்றை அடைந்து காவிரிஸ்நானம், அநுஷ்டானம், சிவதெரிசனம் முதலியவைகள் செய்யும் காலம் தவிர மற்றக் காலமெல்லாம், காவிரி நதியின் வடகரையில் ஓர் பன்னசாலை ஏற்படுத்தி அதிலிருந்து இடது காலைக் கீழே ஊன்றி நாவினால் பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜெபித்துக்கொண்டு தபசு செய்து வந்தனர். அங்ஙனம் சிறிது காலம் செய்துவரவே பஞ்சநதீசப்பெருமான் அவர் தபசுக்கு மகிழ்ந்து சிந்தித்து அவர் மனோதிடத்தை ஆராயவேண்டுமென்ற எண்ணம் கொண்டவராய்த் தேவேந்திரனை வெள்ளை யானைமீது ஆரோகணித்து எழுந்தருளிவந்து காக்ஷி தந்து ஏ கௌதமநந்தனரே! நீர் இச்சித்தவரங்களைக் கேட்கக் கடவீர் என ஆக்ஞாபிக்க, சதாநந்தர் அவ்வசனத்தைக் கேட்டு அடங்காப் புன்னகை கொண்டு வ

மருபதி! யான் தேவதேவோத்தமனை பஞ்சநதப்பெருமானுடைய திருவருட்பேற்றினைக் கருதி இத்தவம் செய்கின்றேனேயன்றி அநித்தியமாகி மறையத்தக்க உன்பதவிமுதல் பிரம, விஷ்ணுவாதி பதவிகளை விரும்பி இத்தவம் செய்தேன் இல்லை. நீ எதற்காக வந்தாய் உன் இருப்பிடம் செல்லக் கடவாய் எனக் கூறிப் பின்னரும் தபத்தில் மனதை வியாபிக்கச் செய்துகொண்டு நின்றுவிட்டனர். அங்ஙனமாக, தேவேந்திரன் ஆகி வந்த பரஞ்சுடர் சுதாசந்தரது உள்ளக் கருத்தை அறிந்து மிக ஆனந்தம் கொண்டவராய் வெளிக்குக் கோபம் உடையவர்போன்று பின்னரும் அன்னவரை நோக்கி ஏ மகரிஷி! சகலபோக போக்கியாதி இன்பத்தையும், அமிர்தபானத்தையும் தரத்தக்க என் உலகத்தையும் அதற்கு மேலாய் பலத்தைத் தரத்தக்க பிரம, விஷ்ணுவினுடைய உலகங்களையும் இழிவெனக் கொண்டு, பூதப்பிரேத பைசாசாதிகள் புடை சூழ மயானத்தில் வசிப்பவனும், பித்தனுமாகிய சிவபெருமான் அளிக்கும் பதவியாகிய உலகமே மேலெனக் கொண்ட அறிவில்லாதவர்கள் உன்னைப் போல இவ்வுலகத்தில் ஒருவரும் இருக்கமாட்டார்களென இன்னும் சில கொடும் சொற்களைத் திருவாய்மலர்ந்தருளினர். அவ்வசனங்களைக் கேட்ட உடனே மகரிஷியானவர் அளவில்லாத கோபத்தை அடைந்து தேவர்களில் அதமனாகிய ஏ இந்திரா! சிவநிந்தை செய்த உன் நாவு என்படும், நினைத்த மனம் என்படும், அறிவில்லாதவனே! வண்டுழுநந் தண்டுழாய் மாயோனிருமாப்பும், புண்டரிகப் போதுறையும் புத்தேளிருமாப்பும், அண்டர்தொழ வாழுன்னிருமாப்பு மாலாலம், உண்டவனை பூஜித்த பேறென்றுணர்ந்திலையால்; பிரமாக்கள் சப்திக்கின்றதும் குளிர்ச்சியை உடையதுமான துழாய்மாலை அணிந்த விஷ்ணுமூர்த்தி வைகுண்ட பதவியைப்பெற்று செருக்குற்றிருப்பதும், தாமரையை ஆசனமாக வீற்றிருக்கும் பிரமன் சத்யலோக பதவியைப் பெற்று செருக்குற்றிருப்பதும், தேவர் யாவரும் வணங்கி வாழும் உன்னுடைய செருக்கும் ஆலாகால விஷத்தை உண்டவனைப் பூஜித்ததால் ஆகிய பேறு எனக்கூறும் அருமை மொழியின்படி பாற்கடலில் பிறந்த ஆலகால விஷத்தால் மரணபயம் அடைந்து எங்களைக் காத்து ரக்ஷித்து அருளவேண்டும் என்று நீங்கள் முறையிட்டலற அது சமயம் எம்பெருமான் கிருபை கூர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை அவ்விஷத்தின் பராக்கிரமத்தை அடக்கிக்கொண்டு வரும்படி ஆக்ஞை இட்டு அன்னவரால் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட விஷத்தை உண்டருளாவிடில் அகப்பாவம் படைத்தோய்!



பிரமன், விஷ்ணு, இந்திரன் என்ற நீங்கள் இறந்த இடப்புல் மூளைத்துத் தோன்றுமே, ஏ பாவி! நூறுகோடி பிரமர்கள் நுங்கினர், ஆறுகோடி நாராயணரங்ஙனே, ஏறு கங்கை மணலெண்ணி இந்திரர், ஈறிலாதவனீசனொருவனே நூறுகோடி பிரமாக்கள், ஆறுகோடி விஷ்ணுக்கள் மேன்மையுடைய கங்காநதியிலுள்ள மணல்போல அளவில்லாத இந்திரர்கள் அழிந்துபோயினர், முடிவில்லாதவன் அநாதி மலமுத்தனாகிய சிவபெருமான் ஒருவனே எனக்கூறும், மறைமொழியின்படி தோன்றி அழியும் உங்கள் பதவியின் இழிவை நீ உணர்ந்திலாய்போலும், ஏ புத்தியில்லாதவனே! செல்வச்செருக்குடையார்க்கு நல்ல அறிவு இராதென்பது உன்னிடத்திற் கண்டாம். ஏதுரோகி சிவநிந்தை செய்த உன் முகத்தை நோக்க நோக்க உன்மீது எனக்கு உண்டாகும் கோபமும் அதனைக் கேட்ட பாபியாகிய என் உடல் நீங்காதிருப்பதினால் உண்டாகும் துக்கமும் சொல்லும் தரத்தது அல்ல, ஏ மதியீனா! இனி நீ என்முன்னிற்பையாகில் எம்பெருமான் உடைய அருட் பிரசாதத்தால் உன்னைச் சபித்து நீறாக்குவதோடு சிவநிந்தை கேட்ட என்னுயிரையுந் துறப்பேன். மூர்க்கனே! இங்கு நில்லாது அகலுதி எனக்கூறிக் கண்ணை மூடிக்கொண்டு தவத்தில் நின்றுவிட்டனர். அங்ஙனம் நிற்க தேவேந்திரன் ஆகி வந்த பரம்பொருள் சுதாசந்தருடைய திடச்சித்தத்தையும், சிவநிந்தையைக் கேட்கப் பொறாத மனவலியையும், பிரமவிஷ்ணு தேவேந்திராதி பதவிகளைத் துச்சம் எனக் கொண்டிருக்கும் உறுதியையும், தனது சரணத்தில் வைத்திருக்கும் பக்தியின் ஊக்கத்தையும் கண்டு அன்னவர்மீது நிரம்பிய கிருபை உடையவராய் உடனே மகபதியாகிய உருவத்தை நீக்கிக் காளகண்டம், திரிநேத்திரம், சடாமகுடம், சதுர்ப்புஜம், நாகாபரணம் மான், மழு, முதலிய தன் திருக்கோலத்தோடு உமையம்மை வாமபாகத்தில் வீற்றிருக்க ரிஷபாரூடராய்ப் பிரத்தியக்ஷமாகி ஏ ரிஷி சிரேஷ்டா! பக்தியின் வலிமை உடையாய்! உன் தவத்திற்கு மிக மகிழ்ந்தோம் வேண்டும் வரங்களைக் கேட்டுக் கொள்ளக் கடவாயெனத் திருவாய் மலர்ந்தருள அம்மொழியினைக் கேட்டவுடனே சுதாசந்தர் கண்ணைவிழித்து நித்தியமங்கள மூர்த்தியின் திருக்கோலத்தை நோக்கித் தன்னை மறந்தவராய் இரண்டு கைகளையும் சிரசின்மேற் வைத்துக்கொண்டு என்னப்பனே! கைலாசபதே! அஞ்ஞானிகளால் அறியப்படாதவனே! ஞானியருள்ளத்தமர்ந்தவனே! வேத வேதாங்க ஆகமாதிகளால் முறையிடப்பட்டவனே! உன்னன்போடு பூஜிப்பவர் அவித்தையை நாசஞ் செய்யப்பட்டவனே,

ஜலசப்தத்தின் பொருளாயுள்ளவனே எனப் பலவாராய்த் தோத்திரஞ் செய்து, கருணாநிதே! ஸம்சாரமாகிய பெருங்கடலினின்றும் அடியேனைக் கரையேற்றி ஜென்ம மரணாதி துக்கத்தை யான் இனி அடையாவண்ணம் கிருபை பாலித்தருளல் வேண்டுமென்று அடியற்ற மரம்போல் பூமியில் விழுந்துத் தியானஞ் செய்துகொண்டிருந்தனர். அவ்வாறு இருக்க சிவபெருமான் அத்யந்த சந்தோஷமுடையராய் தமது இரண்டு திருக்கரங்களாலும் தூக்கி எடுத்து கண்மணி! சுதாகந்தா! இன்னும்வேண்டுவதையும் கேட்டுக்கொள்ளக்கடவாய் எனத்திருவாய் மலர்ந்தருள சுதாகந்தர் பின்னும் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து சுவாமின்! எப்பொழுதும் உனது சரணகமலங்களில் நீங்காத பக்தியும், தேவரீரது சொரூபதியானத்தன்றி வேறொன்றிற் செல்லாத மனதையும், சிவநாம சங்கீர்த்தனத்தில் விசுவாசமும், உன் திருவுருவத்தை இடைவிடாது கண்டு தெரிசிக்கும் பெரும்பேற்றையும் துர்ச்சனருடைய சகவாசமின்மையும், இந்திரிய நிக்கிரகவைராக்யமும் நல்லொழுக்கமும், நல்லவர்களுடைய உறவும் நான் செய்யும் ஜெபதபாதி சித்தியுங் கைகூடுமாறு கிருபை பாலித்து ஆண்டருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர் பஞ்சநதீசப் பெருமான் அவர் வேண்டுகோளின்படி அனைத்தையு மீந்தருளி ஏ சுதாகந்தா! நீ இப்பஞ்சநத க்ஷேத்திரத்தை விட்டு நீங்காது வசிக்கக்கடவாய். கொடிய பிரமஹத்தியாதி பாபங்களைப் போக்கத்தக்க இவ்விடத்தில் வசிக்கும் ஜீவர்களது யோகக்ஷேமங்களை நாம் வகித்து நடத்துகின்றோம். புண்ணிய காலங்களில் காவேரிஸ்நானஞ் செய்து எம்மை தெரிசிப்பவர்கட்கு சிவலோகங்கிடைப்பது சத்தியமாகும், இங்கு வசிக்கும் எவையும் நமது சொரூபமேயாம். அவைவிற்க சிவராத்திரியாகிய புண்ணியதினத்தில் எவராயினும் காவேரி ஸ்நானஞ்செய்து தங்கள் தங்கட்கு உரிய நித்திய கருமங்களை முடித்து அன்று முழுவதும் ஆகாரநித்திரையின்றி புராணசிரவணம், நம்முடையதெரிசனம், நமது ஆலயப்பிரதக்ஷணம், பஞ்சாக்ஷரஜெபம், ருத்திரஜெபம், முதலியவைகளைச் செய்து மறுநாள் உதயத்தில் ஸ்நானஞ்செய்து தான தருமாதிகளைச் செய்து பாரணம் செய்வார்களாகில் அவர்கள் ஜெனன மரண துக்கத்தினின்றும் நீங்கி நம்முலகில் வாழ்வர். அன்றியும் நமது ஆராதனைக்குவேண்டிய சாமக்கிரிகைகளை சேகரித்துக் கொடுப்போர் நம் சாரூபத்தைப் பெற்று உய்வர். எனத்திருவாய் மலர்ந்து கௌதமநந்தனே! இதற்கு சாக்ஷியாக ஓர் கதை சொல்லு



கின்றோம் கேட்கக்கடவாயென கூறுவான் புகுந்தனர். முன் ஒரு காலத்தில் காந்திமா நகரத்தில் பிரமகுலத்தில் பிறந்த துற்போதனென்னும் ஓர் பிராமணன் இருந்தான் அன்னவன் தனக்குள்ள பொருளை யாவற்றையும் வேசிகளுக்கு அளித்ததோடு ஆங்குள்ளவர் மீது பொய் வழக்கிட்டும், பொய்சாக்ஷிகளைக் கற்பித்தும் அதனால் கிடைத்த பொருளையும் (நட்டுடையார் போன்று அகப்பட்டவரையில் பறித்துக்கொண்டு அறுதியாய் விடும்) அவ்வேசையர்கட்கே கொடுத்து அயோக்கியர்களுக்கு ஆச்சாரியனாய் சஞ்சரித்துக்கொண்டிருந்தனன். அவன் அவ்வாறிருக்க அதை அறிந்த அரசனானவன் இத்துஷ்டனை இங்குவைப்போமாகில் நம் அரசிமைக்கே கேடுவிளைவிப்பன். ஆதலால் நகரத்தை விட்டு அகற்றுவதே தகுதியென விரட்டிவிட துற்போதன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டவனாய் அனேக தேசசஞ்சாரம் செய்து ஆங்காங்கு திருடியும், அதைக்கண்டவர்களால் உதை பட்டும் அன்னபானாதிகளுக்கு வழியின்றி மிகக்கஷ்டமடைந்து கடைசியாய் பஞ்சநத க்ஷேத்திரம்வந்து சேர்ந்து பகல் முழுவதும் ஆகாரமின்றி இரவு ஆகார விருப்பத்தால் சிவாலயத்தை சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தனன். அங்ஙனம் அவன் சுற்றிக்கொண்டிருக்க அன்றுதினம் சிவராத்திரி ஆதலாலும் ஆகாரமின்றி சிவாலயத்தைச் சுற்றிக்கொண்டிருந்த புண்ணிய விசேடத்தாலும் தூர்வாசமகரிஷியானவர் அவனைக் கண்டு ஞானதிருஷ்டியால், பாபிஷ்டன் என்பதாக அறிந்துகொண்டு அவனை நோக்கி ஏ பிராமணா! நீ அனேக பாதகங்களைச் செய்து மகா பாபியாய் இருக்கின்றபடியால் இப்போது உன்னைப் பிடித்துக்கொண்டு போக எமபடாள் வந்து உன் அருகில் நிற்கின்றார்கள் அவர்களைப்பாருளென்று அவன் கண்ணுக்கு அவர்கள் புலப்படுமாறு அனுக்கிரகம் செய்தனர். அவ்வனுக்கிரகத்தைப் பெற்று துர்ப்போதன் திரும்பிப் பார்க்க எமபடாள் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு மிகப் பயந்தவனாய் மகரிஷியின் பாதத்தில் விழுந்து சுவாமின்! அடியேன் இவர்கள் கையில் அகப்படாவண்ணம் காப்பாற்றி அருளவேண்டுமென பிரார்த்தித்து நின்றனன். அங்ஙனம் நிற்கவே தூர்வாச மகரிஷியானவர் அன்னவனை பயப்படாதே என தைரியம் உண்டாகும்படி ஆதரித்து காவிரியில் ஸ்நானம் செய்யச்சொல்லி சகல பாபத்தையும் நாசஞ்செய்யும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்துத் தன் அருகிலிருந்து ஜெபிக்கும்படி ஆக்ஞாபிக்க அன்னவனும் அவ்வாக்ஞையின்படி அவர் பக்கத்தில் இருந்து ஜெபம் செய்து

கொண்டிருந்தனன். அவ்வாறிருக்க இரவும் நீங்கியது, எமபடர்களும் மறைந்துபோயினர். அவர்கள் போகவே துற்போதன் மகரிஷியை என் ஐயனே! தங்களுடைய அனுக்கிரகத்தால் எமபாதையினின்று நீங்கினேன் என் கர்ம வரலாற்றைத் தெரிவித்துக் காப்பாற்றி யருளவேண்டுமெனக் குறையிரந்து நிற்க மகரிஷியானவர் ஏ துர்ப்போதா! உனக்கு இந்தஜென்மத்தின் வயது நூறு எனக் கற்பிதமாயிருந்தும் அது நீ செய்த பாபகிருதியால் நசித்துப்போனது அரனெழுத்தைக் குருமுகமாயறிந்தோர்க்கில், அமருலகில் கணக்கனெழுத்தழிக்கலாமே. அரத்தவாச்சியனாகிய சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை உள்ளன்போடு உச்சரித்தால் பிரம்மதேவனால் எழுதப்பட்ட தலையெழுத்தையும் அழித்துவிடலாமெனக் கூறும் உண்மை மொழியின்படி இப்போது நாம் உபதேசித்த பஞ்சாக்ஷர ஜெப மகிமையினாலும், காவேரி ஸ்நானம் செய்த புண்ணியத்தாலும் எம்மைத் தெரிசித்த மேன்மையினாலும், சிவராத்திரியாகிய இத்தின விசேஷத்தாலும் அதுநீங்கி பூரண ஆயுள் உண்டாகவே அபமிருத்துரூபமாய் வந்த எமபடாள் மறைந்துபோயினர்.. இனியும் நாம் சொல்லுகிறபடி நடந்துகொள்வாயாகில் மேலான பதவியையும் அடைவாய் என்னுடன் வரக்கடவாயென அழைத்துக்கொண்டு சென்று காவிரி ஸ்நானமும் சிவதரிசனமும் செய்துவைத்து தனது உச்சிஷ்டத்தைக் கொடுத்து போஜனம் செய்துகொள்ளச்சொல்லிப் பின்னர் இந்த க்ஷேத்திரத்திலே வசித்துக்கொண்டு இருக்கக்கடவாயென ஆக்ஞாபித்தருளினர். துர்ப்போதனும் அவ்வாக்ஞையின்படி பஞ்சநதக்ஷேத்திரத்தை விட்டு நீங்காது வசித்து மரணம் அடைந்தனன். மரணம் அடையவே அவனை நந்திகேஸ்வரரால் சிவலோகத்துக்கு வரவழைத்து தமது சாரூபத்தை அளித்ததோடு சிவகணங்களுக்கு அதிபதியாக்கி பிருங்கிரிஷிகணநாதன் என்னும் பெயரையுந் தந்தனம். ஆகையால் சுதாரந்தா! நீ இங்குதானே வசித்து சகல சித்தியையும் பெற்று உய்யக்கடவாய் எனத் திருவாய்மலர்ந்து மகாலிங்கத்தின் உள்ளே மறைந்தருளினர். மகரிஷிகாள்! உண்மைஞானம்பெற்று உய்வதற்கும் மகத்துக்களின் தெரிசனமே முக்கிய காரணமாதலால் அவ்வழியில் நிற்போர் சிவசாயுச்சியத்தைப்பெற்று வாழ்வர் இது உண்மையாகும் தெரிந்துகொள்ளக்கடவீர்களென சுதாரந்தர் ஜெபசித்தி அடைந்த சரித்திரத்தைப் பூர்த்திசெய்து சூதபுராணிகரானவர் ஜப்பியேச்சுரமெனப் பெயர் வந்த சரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருள ஆரம்பித்தனர்.



## ௮. ஜெப்பியேச்சுரப்பெயர் வந்த காரணம் உரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகாள்! கேட்கக்கடவீர்கள். அனவத்தியாதேவியானவள் நாதசன்மாவாகிய தன் உயிர்க்காதலனை நமஸ்கரித்து பிராணநாயகா! பஞ்சநதக்ஷேத்திரத்திற்கு ஜெப்பியேச்சுரம் என்ற நாமம் ஒன்று கூறப்படுகின்றதே அப்பெயர் வந்ததற்குக் காரணம் அடியேன் தெரிந்துகொள்ளும்படி தெரிவித்து அருளல் வேண்டும் என்று விண்ணப்பம் செய்துகொள்ள அதனைக் கேட்ட பிராமணோத்தமரானவர் அன்னவளை நோக்கி என் ஆசைக்கு உரியாய்! சொல்லுகின்றேன் கேட்கக்கடவாய். முன் ஒரு காலத்தில் இமய மலைச்சாரலில் தவம் செய்துகொண்டிருந்த கோரதபசியானவர் நாள் தோறும் சிவதரிசனம் செய்வதுடன் பஞ்சாக்ஷரஜெபம் பதினாயிரமும் ஜெபித்துக்கொண்டு வந்தனர். அங்ஙனமாக நீண்டகாலம் ஜெபித்துக்கொண்டு வந்தும் தனக்கு அச்செபம் சித்தியாகாது போக அவ்விடத்தினின்றும் நீங்கி ஒவ்வொரு சிவ க்ஷேத்திரத்தையும் அடைந்து ஆங்காங்கு ஆறு ஆறு வருஷம் இருந்து ஜெபம் செய்து வந்தனர். அங்ஙனமாகவும் சித்தியாகாது போக மிகுந்த துக்கம் உடையவராய்க் கடைசியாய் மந்தர பருவதத்தை அடைந்து அவ்விடத்திலும் ஆறு வருஷம் இருந்து ஜெபம் செய்ய ஆங்கும் சித்தியாகாதாகவே கோர தபசியானவர் அளவுகடந்த சோகமுடையவராய் சிவபெருமானைத் தோத்திரம் செய்து எம்பெருமானே! என் மனோரதம்பூர்த்தியாகும் வண்ணம் கிருபை பாலித்து அருளல் வேண்டுமென்று குறையிரந்து நின்றுகொண்டிருந்தனர். அங்ஙனம் நிற்கவே, அன்னவர் செவிக்கு புலப்படுமாறு அசரீரியானது ஏ தபசிரேஷ்டா! கிலேசத்தை ஒழிக்கக் கடவாய். நீ இப்பொழுதே காவிரிநதிக்கு வடபாகத்தில் விளங்கும் திருவையாறு என்னும் பஞ்சநதக்ஷேத்திரத்தை அடைந்து காவிரி ஸ்நானம் செய்து சிவாலயத்தின் உள்ளே மூலஸ்தானத்துக்கு மேல் பாகத்தில் ஆதி விநாயகமூர்த்தி, சப்தமாதர்கள் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலுக்கு மத்தியிலிருந்து ஜெபம் செய்வாயாகில் அது சித்தியாகி உனக்கு நல்ல பலனை அளிக்கும். ஆகையால் ஆங்கு செல்லக்கடவாய் என்று கூறிற்று. அவ்வசனத்தைக் கேட்ட உடனே கோரதபசியானவர் அப்பொழுதே ஜெபசித்தி அடைந்தவர் போன்ற மகிழ்வுடன் திருவை

யாற்றை அடைந்து காவிரி ஸ்நானம் செய்து ஆலயத்தின் உட்சென்று சிவதெரிசனம் செய்துகொண்டு அசரீரிகூறிய ஸ்தானத்தை நோக்கிச் செல்லும்பொழுது மார்க்கத்தில் எழுந்தருளியிருக்கும் கௌதமர் முதலிய மகரிஷிகளைத் தெரிசித்த பின்னர் தூர்வாச மகரிஷியைக் கண்டு வணங்கி பக்தி விசுவாசத்துடன் சுவாமின்! திரிகால வர்த்தமானம் அனைத்தையும் நன்கு உணர வல்ல தாங்கள் என்னுடைய நிலைமையையும் அறிவீர்கள். ஆகையால் அடியேன் பிறவியைப் போக்கத்தக்க சிவப்பிரசாதத்தை அடையும் வழியினை அநுக்கிரகம் செய்து அருளல்வேண்டுமென்று விண்ணப்பித்து நிற்க, மகரிஷியானவர் அங்ஙனம் வினவிய கோர தபசியைப் பார்த்து ஏ தபசிரேஷ்டா! நீ கற்பொடிகளை ஆகாரமாகக்கொண்டு அசரீரி கூறியவண்ணம் அவ்விடத்தில் இருந்து தபம் புரிவையாகில் அதிசீக்கிரத்தில் மந்திர சித்தியை அடைவாய் இது நமது பூரண ஆசீர்வாதம் செல்லக் கடவாய் என்று ஆக்ஞாபிக்க, உடனே தபசியானவர் மேற்கூறி இடத்தைச் சார்ந்து கற்பொடிகளை ஆகாரமாகக் கொண்டு ஆறுமாத காலம் தபம் செய்துகொண்டிருந்தனர். அவ்வாறு இருக்க பஞ்சநதீஸ்வரப்பெருமான் அவர் தபசுக்கு இரங்கினவராய் பிரத்தியக்ஷமாகி ஏ கோரதபசி! உனது அரியதபத்திற்கு மகிழ்ந்து காக்ஷி தந்து அருளினேம் வேண்டும் வரங்களைக் கேட்கக்கடவாயெனத் திருவாய்மலர்ந்தருளத் தபசியானவர் அம்மொழியினைக் கேட்டு ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்திப் பரவசமாய் கருணைக் கடலின் சரண கமலங்களில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்து எழுந்து இரண்டு கரங்களும் சிரசின் மேற்குவிய கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக சரீரத்யந்தம் மயிர்க் கூச்சலுறத் தன்னை மறந்தவராய் எம்பெருமானே! நினது திருவடியில் என்றும் நீங்காத பக்தி ஒன்றே வேண்டுமாதலால் அதனைத் தந்தருளல் வேண்டுமெனப் பின்னரும் வணங்கி நிற்க பஞ்சநதீசப்பெருமான் பக்தசிரேஷ்டா! அங்ஙனமே தந்தருளினேம் எப்போதும் நமது அம்சமாகிய தூர்வாச முனிவனிடத்தில் என்றும் நீங்காத குருபக்தியை வைத்து வாழக்கடவாய் எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். கோரதபசியும் ஜெபசித்தி அடைந்து மகிழ்ந்தனர். ஏ அனவத்தியா! இது காரணம்பற்றித்தான் திருவையாற்றுக்கு ஜெப்பியேச்சரமென்ற பெயர் வந்தது அறிந்துகொள்ளக்கடவாயெனக் கூறினர். ரிஷி சிரேஷ்டர்காள்! நன்கு உணரக்கடவீர். இன்னும் சூத புராணிகர் ஜெப்பியேச்சரமென்ற பெயர் வந்த சரித



திரத்தை பூர்த்தி செய்து பஞ்சநதமென்ற பெயர் வந்த காரணம் கூறுவான் புகுந்தனர்.

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

## ௯-வது பஞ்சனதப் பெயர் வந்த காரணமுரைத்த அத்தியாயம்.

ரிஷி சிரேஷ்டர்காள்! அனவத்தியா தேவி பின்னரும் நாதசன்மாவை வணங்கி சுவாமின்! திருவையாற்றுக்குப் பஞ்சநதமெனப் பெயர் வந்தகாரணத்தைக் கூறியருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள நாதசன்மாவானவர் அதனைக்கேட்டு பெண்மணி! நன்குவினவினை. சொல்லுகின்றேன் கேட்கக்கடவாயென்றுகூற ஆரம்பித்தனர். கோரதபசியானவர் சிவாக்ஞையின்படி தூர்வாச மகரிஷி எழுந்தருளி இருக்கும் இடஞ்சேர்ந்து சிவபெருமானால் தான் அடைந்த அநுக்கிரக விசேஷத்தைக் கூறி நிற்க அதனைக் கேட்ட ரிஷிபுங்கவர் அத்யந்த சந்தோஷமுடையவராய் கோர தபசியை ஆலிங்கனஞ்செய்துகொண்டு ஏ தப சிரேஷ்டா! இந்தக்ஷேத்திரத்தை சாமான்யமாக நினைத்துவிடாதே, ஜீவர்களடைந்த பாபத்தைப்போக்கி அஸ்வமேத முதலிய யாகாதிகளைச் செய்ததினாலாகும் பயனையும், கங்கை முதலிய அறுபத்தாறுகோடி தீர்த்தங்களில் ஸ்நானம் செய்ததினாலாகும் பயனையும் ஒருங்குசேர அளிக்குந்தன்மையையுடையது "உலகின்மேலாவைத்த தலமிது வென்றுவியாவரே யிதன் பெருமைவழுத்தற்பாலார்." பூவுலகில் மேலான தலமிதுவே என வேதாகமாதிகள் கூறுமாயின் நான் சொல்வது என். எவர்களேனும் இந்த க்ஷேத்திரத்தில் வசித்து சிவநாமசங்கீர்த்தனம் செய்துகொண்டு இருப்பாராயின் அன்னவர்க்கு பஞ்சநதீசப்பெருமான் நித்தியானந்தப் பேரின்ப வீட்டையளித்தருளுவர். ஆதலால் நீ இந்த க்ஷேத்திரத்திற்றனே வசிக்கக்கடவாயென்று திருவாய் மலர்ந்தருளினர். அதனைக்கேட்ட கோரதபசி பின்னுந் தூர்வாசரிஷியை நோக்கி என்னையனே பாபத்தைப் போக்கி முத்தியையளிக்குமென் றீர்களே அப்பாபம் என்பது எத்தன்மையையுடையன அதனைத் திருவாயமலர்ந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள மகரிஷியானவர் அதனைக்கூறுவான் றொடங்கி கோரதபசியே! பாபத்தின் விரிவைக் கேட்கக் கடவாய். உலகத்தில் பிரம்மஹத்திசெய்தல்

கட்குடித்தல், பிறர் இகழ வியக்கவைத்தல், தாயைப்புணர்பவனோடு சேர்தல், * தாயையொத்த மாதர்களைப் புணர்தல், தன்புத்திரி, உடன் பிறந்தவள், புத்திரன்மனைவி, இவர்களைப்புணர்தல், எவ்வித ஜீவர்களுக்கும் துன்பம் விளைத்தல், பிறர்களுக்குக் கெடுதி நினைத்தல், வீட்டுக்குப்புறம்பான மாதரையும் கொடியமுடைய பெண்களையும் புணர்தல், தேவதாஸசமுடைய பிக்ஷுகளைஉடைத்தல், விளைநிலத்தை அபகரித்தல், பிறன்மனையாளை அவள் நாயகன்போல வேஷம் பூண்டு கலத்தல், நெற்றி முதலிய அங்கங்களில் § விபூதியில்லா திருத்தல், விபூதியில்லாத மற்றவைகளைத் தரிக்க எண்ணுதல், சங்கு சக்கரத்தால் சூடுபடுதல், ஏக்நபாகாதிகளைக் கற்றுணர்ந்தோர் வேத பாராயணஞ் செய்வோர், வேதாகமாதி புராணங்களை அறிவித்த சிரத்தையோடு கேட்போர், இவர்கள் மனையாளைப்புணர்தல், தன் மனையாளொடு சேராதிருத்தல், அக்காதி தேவதைகளின் விக்கிரகங்களைப் பேர்த்தல், தன் பத்தினியின் பாங்கிகள், தன் கோத்திரத்திற் பிறந்த பெண், பிராணப்பெண், சந்நியாசி ஆச்சிரமம் பெற்றபெண், தன்னை அடைக்கலமடைந்த பெண், இவர்களைப் புணர்தல், யாவரையும் நிந்தித்தல், கிராமத்தில் தீயிடுதல், பொய் சொல்லுதல், கோட் சொல்லுதல், ஆச்சாரியர்க்குத் துன்பம்விளைத்தல், வேதாகமாதிகளைப் படித்து உணர்ந்து மறந்துவிடுதல், ஆச்சாரியன் முன்னேவணக்கமில்லாதிருத்தல் பாரன்னம்புசித்தல், தாய் தந்தை உடன்பிறந்தார் மனைவி இவர்களை விலக்குதல், உண்ணக்கூடாத பதார்த்தங்களை உண்ணல், குல கோத்திரவினுக்கு யாகாதிகருமங்களைப் பொருளாசையால் செய்து வைத்தல், பொருளிடத்து ஆசைமிகுதிகொண்டு அது முன்னிலையாகவே ஒருவர்க்கு வித்தை கற்பித்தல், வேதத்தில் சொல்லிய சத்கருமங்களை விடுத்தல், தந்தம் வருணாச்சிரம ஒழுக்கத்தை விட்டிருத்தல், யாவராலும் நிந்திக்கப்பட்டவனுக்குக் கருமங்களைச் செய்துவைத்தல், விருக்ஷங்களை வெட்டிவிற்றுச் சீவனம் செய்தல், பிறரிடத்தே உண்டான கோபத்தால் அவர்க்கு தீங்குண்டாகும் வண்ணம் ஏவல் முதலிய தீய காரியங்களைச் செய்வித்தல், தனக்கு மாத்திரம் அன்னம் சமைக்கச்செய்தல் புத்திரோற்பத்திக்கான காரியங்களைச் செய்யாதிருத்தல், நாஸ்திகசாஸ்திரங்களைக் கற்றல், அது கற்றவர்களோடு

* தாயையொத்தமாதர்கள்—பெற்றவள், வளர்த்தவள், தமயன்மனைவி, ஆச்சாரியின்மனைவி, இராசன்மனைவி, இவர்களாம்.

§ நீறில்லா நெற்றிபாழ் என்றார் ஔவையாரும்.



பழகுதல், சுராபானம் செய்யும் மாதரைப் புணர்தல், எவர்க்கேனும் ரோகம் உண்டாகும்படி செய்தல், கஞ்சா கள் முதலிய மயக்க வஸ்துக்களை நுகர்தல், உலகத்தார்க்கு மாறுபட நடத்தல், மிருகங்களைப் புணர்தல், பூமியில் இந்திரியத்தை விடுதல், ஏகாதசி, பௌர்ணமி, அமாவாசை, விதிபாதம், ஞாயிற்றுக்கிழமை, சிரார்த்ததினம், மாசப்பிறப்பு இவைகளில் புணர்தல், கிராமத்தில் கலகம் செய்தல், ஆரண்ணியத்தை அழித்தல், மிருகங்களுக்கு உபத்திரவம் செய்தல், தர்ம திரவியங்களை அபகரித்தல் ஜாதியீனர்களுடைய அன்னம் உண்ணுதல், யாவரும் நிந்திக்கும்படியான ஜீவனம் செய்தல், வியாபாரம் அதன் முறையைக் கடந்து செய்தல், பக்ஷி, மிருகம், இவைகளைக் கண்ணி வைத்துப் பிடித்தல், சூதாடுதல், கள்ளுடன் அன்னத்தைக் கலந்து உண்ணல், சந்தியா வந்தனத்தை குறித்த காலத்தில் செய்யாது விடுத்தல், அகாலத்தில் செய்தல், * ஔபாசனம், வைசுவதேவம், பிரமயக்ஞம், அதிதிபூஜை, தேவார்ச்சனை ஆகிய பஞ்சமகா யக்ஞங்களை விடுத்தல், சிவ, விஷ்ணு நாம சங்கீர்த்தனம் செய்யாதிருத்தல், தெண்டனைக் குரியவரை விடுத்தல் உரியரல்லாதவரைத் தெண்டித்தல், இறைமிகுதியாக வாங்கல், யுத்தத்தில் பயந்தோடல், குறைந்த படிக்கல்லால் விற்றல், மாம்சம், கள் இவைகளை விற்றல், § காராம்பசுவின் பாலை உண்ணல், நீசனைச் சேர்தல், பணிவிடைக்காரனைப் புணர்தல், கெர்ப்பத்தைச் சேதித்தல், நாயகனுக்குக் கெடுதி விளைத்தல், மருமகன் குலகுரு இவர்களைப் புணர்தல், மாமன் மாமியை நிந்தித்து எதிர்த்துப் பேசுதல், கொழுந்தன்மார்களை அலக்ஷியம் செய்தல், இவை போன்ற இன்னும் அளவிறந்த செய்கைகளெல்லாம் பாபருபமாகும். மேற்கூறியவைகள் யாவர்க்கும் பொதுவாயினும் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்ற வகுப்பினர்க்கும் பெண் பாலர்க்கும் பிரித்துக்கொள்ளக்கூடியவைகளும் உண்டு அவைகளைப் பிரித்து நீ உணரக்கடவாய். இப்பாவங்களைச் செய்தோர் அனுபவிக்கவேண்டிய நரகங்கள் எண்ணிறந்தன. அதன் விரிவைக் கூறப்புகில் மிக விரியும் ஆதலின் கருடபுராணத்தால் உணர்க, முன்னர் மனிதர்கள் செய்த பாபத்துக்குத்

* ஔபாசனம்—சமைத்த அக்கினியை எடுத்து அதில் தேவப்பிரீதியாகச் செய்யும் அவிர்ப்பாகம், வைசுவதேவம்—சமைத்த அன்னத்தால் பூதங்கட்கு பலியிடல், பிரமயக்ஞம்—வேதமோதுதல்.

§ காராம்பசுவின் பால் சிவலிங்கப்பெருமான் அபிஷேகத்துக்குரியன ஆதலின், உண்ணல் பாவமென்றார்.

விவாகத்தைச் செய்து முடித்து சதிபுருஷர்களிருவரையும் ஆசீர்வதித்து இல்லறம் நடத்தும்படி அனுப்பிவிட்டுத்தான் ஆச்சிரமத்தை அடைந்து ஆனந்தமாயிருந்து கொண்டிருந்தனர். அநன்மரகப் பத்தினி சமேதமாய்ச் சென்ற கோரதபசியானவர் இல்லறம் நடாத்திக்கொண்டு வருங்காலில் அவர் பத்தினியாகிய சாருலோசனையானவள் குணமேருவாகிய ஓர் புத்திரனைப்பெற அக்குழந்தைக்குச்செய்யவேண்டிய சடங்குகளை எல்லாம் முறைப்படி செய்து சைலாதி என்ற நாமகரணஞ்சூட்டி சகல சாஸ்திர பாண்டித்திய முடையவனாகச்செய்து வைக்க உடனே அப்புத்திரனானவர் பஞ்சநதக்ஷேத்திரம் வந்து ஓர் காவேரி பூமியில் வசித்து இரு கரங்களையும் ஆகாயத்தில் தூக்கி சூரியனை இமையாது நோக்கின வண்ணமாய்ப் பரிபூரண சச்சிதானந்த சொரூபமாகிய சிவபெருமானைக் குறித்துத் தபம் செய்வாராயினர். அங்ஙனம் செய்யவே பஞ்சநதீசப்பெருமான் அவர் தபத்திற்கு மகிழ்ந்து பிரத்தியக்ஷமாய் ஏ சிலாதமுனிவன் வர புத்திர சிரேஷ்டா! என்று விளித்தருள, உடனே சைலாதியானவர் எம்பெருமானது திருக்கோலக் காக்ஷியைக் கண்டு சரீர வசமில்லாதவராய் கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து எழுந்து உண்மை அன்பருள்ளத் தமர்ந்த இன்பத்திருவுருவே! நாயினும் கடையனாகிய அடியேனை ரக்ஷித்தருள எழுந்த பரமகாருண்ய மூர்த்தியே! எனப் பலவாறுத் தோத்திரம் செய்து இரு கரங்களையும் சிரசின் மேல் குவித்து நின்றுகொண்டிருக்க சிவபெருமான் மிகக் கருணையோடு நோக்கியருளி ஏ சைலாதி! உனது பக்தியின் வலிமைக்கு மிகச் சந்தோஷமடைந்தோம். வேண்டு வரங்களைக் கேட்கக்கடவாயென்று திருவாய் மலர்ந்தருளச் சைலாதியானவர் என்னை ஆண்டருளிய நித்தியமங்கள மூர்த்தியே! அடியேன் தேவரீருடைய சந்நிதானத்தை விட்டு எப்போதும் நீங்காதிருக்கும்படியான வரம் ஒன்றே தந்தருளல்வேண்டும் என்று விண்ணப்பித்து நிற்க பரம்பொருள் அங்ஙனமே தந்தருளினோம் பெற்றுக்கொள்ளக் கடவாயென்று உடனே சூரியபுஷ்கரணி, கங்காநதி, சந்திரசிகரத்தினின்று முண்டாகிய அமிர்தநதி, கௌரியினிடத்தினின்றும் தோன்றிய பாலாறு, நந்திவாய் நுரைத்தீர்த்தமாகிய ரிஷபநதி, ஆகிய ஐந்தையும் நிர்மித்து அபிஷேகம் செய்வித்து பூதகணங்களுக்கெல்லாம் தலைமையாய் விளங்கும் தன்மையையும், தனது சாரூபத்தையும், தன்னையும் அன்னவரையும்



உமையம்மையார் வேறுபாடிய * ரிஷபத்தின் முகத்தையும், நந்திகேஸ்வரரென்னும் திருநாமத்தையும் கொத்தினவேத்திரத்தையுங் கொடுத்தருளி உடன்கொண்டு சிவபரஞ்சுடர் அந்தர்த்தானமாயினர். ஏ மகரிஷிகாள்! சைலாதிக்கு நந்திகேஸ்வரத்திருவுருவம் எம்பெருமான் அளித்தகாலத்து உண்டான நதி ஐந்தாகையால் இந்த க்ஷேத்திரத்திற்கு பஞ்சநதமென்ற பெயர் வந்தது. அவைகள் எங்குள்ளதென்னில் பின் சொல்லப்போகிற காவேரிநதியில் மறைந்து விட்டனவாகும். தெரிந்துகொள்ளக்கடவீர்களெனச் சூதபௌராணிகர் பஞ்சநதப் பெயர் வந்தகாரணமுரைத்த சரித்திரத்தைப் பூர்த்தி செய்து காவேரியின் வரலாறுரைத்த சரித்திரத்தைக்கூறுவான் தொடங்கினர்.

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## ௰. காவேரியின் வரலாறு உரைத்த அத்தியாயம்.

முன்னொருகாலத்தில் அகஸ்திய மகரிஷியானவர் தன் மாணாக்கர்களோடு திருவெண்காட்டில் திருக்கோவில் கொண்டருளிய சிவபரஞ்சுடரைத் தெரிசிக்கவேண்டி அவ்விடம் வந்துசேர்ந்து சிவதெரிசனஞ்செய்துகொண்டு சிலகாலம் வசித்திருந்தனர். அன்னவர் அங்கு எழுந்தருளியிருப்பதை சமுத்திரராஜன் கேள்வியுற்றுவந்து சேர்ந்து மகரிஷியை சாஷ்டாங்கமாய்வணங்கி சுவாமின்! தங்களுடை தெரிசனையைப்பெறவேண்டுமென்று பலகாலமாய் நினைத்துக்கொண்டிருந்த அடியேன் இன்று கிடைக்கப்பெற்று கிருதார்த்தனாயினேன். தங்களால் எனக்கு ஆகவேண்டியகாரியம் ஒன்றுள்ளது அது என்னென்னில், யான் உலகத்திலுள்ள கங்கைமுதலாகிய நதிகளுக்கெல்லாம் நாயகனாயிருந்தும், சிவப்பிரசாதத்தால் கவேர ராஜரிஷிக்கு புத்திரியாய்ப்பிறந்து சையபருவதத்தில் வசிக்கும் காவேரியை மனைவியாகப்பெறுதற் குறையொன்றை அடைந்தவனாகியிருக்கின்றேன் அக்குறை தங்கள்கிருபையால் நீங்கத்தக்கதாகலின் கருணைசெய்தருளல்வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அவ்வசனத்தைக் கேட்ட கும்போத்பவரானவர் ஏ சமுத்திரராஜனே! உன்னுடைய கோரிக்கையை பூர்த்திசெய்துவைப்போம் கவலையுறுதே என ஆக்ஞாபித்து தான் பிரயாணமாகி கவேரரிஷி ஆச்சிரமம் வந்துசேர, கவேரரிஷி

* ரிஷபமுகம்—நந்திகேஸ்வரருக்கு ஈஸ்வரனால் முதலில் வானரமுகம் அளிக்கப்பட்டதெனவும் பின்னர் இராவணன் ஓர் சமயம் அதைக்கண்டு நகைத்தமையால் அதை நீக்கி ரிஷபமுகம் கொடுக்கப்பட்டதெனவும் ஆன்றோர் கூறுவர்.

யானவர் அகஸ்தியமகரிஷியின் வரவை எதிர்கொண்டு முகமனுரை வழங்கி அழைத்துக்கொண்டு பர்ணசாலையிடம்சேர்ந்து ஆசனமுதலிய உபசாரங்களையும் அதிதிபூஜையும் செய்வித்து ஏ அகஸ்திய மகரிஷி! தங்கள்வரவால் யான் மெத்த சந்தோஷமடைந்தேன். வந்தவிஷயம் என்ன அதைத்தெரிவித் தருளவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவ்வசனத்தைக்கேட்ட அகஸ்தியரானவர் காவேரியினைநோக்கி ஏ மகரிஷி! நீர் சிவப்பிரசாதமாகிய பெரும்பேற்றினைப்பெற்ற மேன்மையுடையவர், திரிகால வர்த்தமானத்தையும் அறிவீர், அங்ஙனமாக யான்வந்தவிஷயம் தெரிந்திருந்தும் நான் சொல்லக்கேட்க வேண்டுமென்ற விருப்பத்துடன் கேட்கிறபடியால் சொல்லுகின்றேன் கேட்கக்கடவீர். அது என்னெனில், சமுத்திரங்கட்குத் தலைவனாகிய சமுத்திரராஜன் உமது புத்திரியாகிய காவேரியை மனைவியாகப் பெறவேண்டி என்னை உம்மிடத்துக்கு அனுப்பினான். அக்காரியமாக நானிங்குவந்தனன். ஆனால் பெண்ணை ஒரு நாயகனுக்கு கொடுக்கும்விஷயத்தில் விசாரிக்கவேண்டுவது மிக உள்ளனவாயினும் நான் சொல்லுகின்ற சம்பந்தத்தைப் பற்றி பேசவேண்டுவதும், விசாரிக்கவேண்டுவதும் ஒன்றுமேயில்லையாதலால் நிச்சயதாம்பூலம் செய்து கல்யாண மகோத்சவத்தை முடித்தருளவேண்டுமென்று நியமமாய்க்கூறியருள அதைக்கேட்ட கவேர மகரிஷியானவர் அதிகத்த சந்தோஷமடைந்து ஏ மகரிஷி! தாங்களே வந்தும் கல்யாணத்தை முடிக்கும்படி நியமனஞ்செய்தும் சொல்லுகின்றபடியால் என்ன ஆக்ஷேபணையிருக்கின்றது புறப்படுவோமென் றுரைத்து தன் புத்திரியை அழைத்துக்கொண்டுபுறப்பட எல்லோருமாய் திருவெண்காட்டை நோக்கிவருவாராயினர், அப்படி வருங்கால் [illegible] க்ஷேத்திரத்தில் சகல பஞ்சநதிஸ்நானஞ் செய்து [illegible] ஐயாறப்பனையும் அறம்வளர்த்த நாயகியாரையும் சேவித்து [illegible] அவ்விடம்விட்டுப்புறப்பட காவேரியானவள் அந்தஸ்தலத்தைவிட மனமில்லாதவளாய்த் தேங்கிநிற்க மகரிஷிகளிருவரும் அவளைநோக்கி குழந்தாய்! ஏன் நின்றனை புறப்படுவாய் [illegible] என்று சொல்லாது பின்னரும் நிற்க அதைநோக்கி இருவரும் [illegible] கையைப்பிடித்து இழுக்க காவேரியானவள் பரமசிவனை மனதிலே தியானித்து வாய்விட்டு அழுவாளாயினள். அங்ஙனமாக, அக்காலத்து நினைப்பதைத் தெய்வமாகிய சிவபெருமான் உடனே அவள்முன் பிரத்தியக்ஷமாகி பெண்மணி! உன் அழுகின்ற உன் எண்ணத்தைத் தெரிவிக்கக் கட



வாயென்றருளிச்செய்தருள காவேரியானவள் உமாநாயகனது பாத பத்மங்களில் விழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து பரமகாருண்ய மூர்த்தியே! அடியேன் என் தந்தையோடும் அகஸ்திய மகரிஷியோடும்வந்து இங்கு உம்முடைய திருவுருவத்தை தரிசித்த உடன் இவ்விடம்விட்டுச்செல்ல மனமில்லாதவளாகயிருக்க அதையறியாது இருவரும் வரும்படி பலாத்காரம் செய்தபடியால் உன் சரணமே கெதியென வாய்விட்டலறினேன், ஆனபடியால் அடியேன் இவ்விடத்தைவிட்டு நீங்காது நித்யமாய் தேவரீரைத் தரிசித்துக்கொண்டிருக்கும்படியாய்க் கிருபையாளித் தருளவேண்டுமென்று பின்னரும் வணங்கிநிற்க, சிவபெருமான் காவேரியின் பக்தியில் மிகமகிழ்ந்தவராய் அவ்வவளை நோக்கி குழந்தாய்! அங்ஙனமே செய்கின்றோம்பயப்படாதே எனக்கூறிய பின் அகஸ்தியர்பால் கிருபாவீக்ஷண்யஞ்செய்து ஏ அகஸ்தியா! நீ எல்லாம் உணர்ந்தவனாகியும் "பேதமையென்பது மாதர்க்கணிகலம்" அறியாத்தனமே பெண்கட்கு ஆபரணமென்பதை உணராது காவேரியானவள் இவ்விடம்விட்டு வராதாநின்றவுடன் அவள்மனோபாவத்தை அறிந்து அதற்குரிய நியாயங்களைக்கூறி சமாதானத்துடன் அழைத்துக்கொண்டு செல்லாது பலாத்காரஞ்செய்ய ஆரம்பித்தனை அது நீ கோரியகாரியத்தை முடித்துவிடவேண்டுமென்ற எண்ணங்கொண்டு போலும் பரவாயில்லை உன் எண்ணத்தையும் பூர்த்திசெய்விக்கின்றோம் கொஞ்சம்பொறுக்கக்கடவாயென்று திருவாய்மலர்ந்து பின்னரும் காவேரியைநோக்கியருளி ஏ பெண்மணி! உலகில் ஒருவருக்கு பெண்பிறந்துவிட்டால் அது மிகுந்த துக்கத்துக்கு ஏதுவானகாரியமாகும். அத்துக்கம் அப்பெண்ணை ஒருவனுக்கு விவாகஞ்செய்து கொடுக்குமளவில் நீங்கவேமாட்டாது. ஆகையால் விவாகஞ்செய்து கொடுக்கவேண்டியது பிதாவின் கடமையாகும். நீயும் யௌவனபருவத்தையடைந்து "யத்நாரோக்ஷதி கௌமாரே" நாயகனால் ரக்ஷிக்கப்படுவது யௌவனபருவம் என்ற உண்மைவசனப்படி புருஷனால் பாதுகாக்குந்தன்மையை அடைந்துவிட்டாய். ஆகையால் உனக்குள்ள நூற்றெட்டுகலைகளில் ஒருகலையுடன் அகஸ்தியரோடுசென்று சமுத்திரராஜனை மணம்புணர்ந்து வாழ்வதுடன், நூறுகலையோடு நித்யமாய் இத்க்ஷேத்திரத்தில் வசித்து உன்னிடத்தில் ஸ்நானஞ்செய்வோர் பாபத்தைப் போக்குவிக்குந் தன்மையோடு விளங்கிக்கொண்டிருக்கக்கடவாய் என்று ஆக்ஞாபித்து அகஸ்தியருக்கும் அழைத்துக்கொண்டுபோகும்படி விடைகொடுத்தருள இருவரும் விவாகஞ்

யைப்பெற்றுக்கொண்டு கவேராஜ ரிஷியுடன் திருவெண்காட்டினிடம் வந்து சேர்ந்தார்கள். அங்கு வந்து சேரவே, அவர்கள் வந்த சங்கதியை சமுத்திர ராஜன் அறிந்து அவ்விடம் தானும் வந்து சேர்ந்து நல்ல சுப முகூர்த்தத்தில் காவேரியை மணம்புரிந்து சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்க கவேர ரிஷியானவர் தனது இருப்பிடமாகிய சையபர்வதத்தை அடைந்தனர். உடனே சமுத்திர ராஜன் அகஸ்தியரை வணங்கி சுவாமிகாள்! தங்கள் அனுக்கிரகத்தால் என்னிச்சை நிறைவேறியது, அடியேனுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸையபர்வதத்துக்குச் சென்ற தாங்கள் இத்துணைக்காலந் தாழ்த்ததற்கு காரணம் யாதோ அதை அடியேன் தெரிந்துகொள்ளுமாறு திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்று கேட்டுக்கொள்ள அகஸ்தியரானவர் அங்ஙனம் வினவிய சமுத்திரராஜனை நோக்கி நடந்த சங்கதியாவற்றையுங் கூறினவராய் காவேரியானவள் பஞ்சநத க்ஷேத்திரத்தில் நூறு கலைகளுடன் தங்கி ஒரு கலையோடு இவ்விடம் வந்து சேர்ந்த சங்கதியைத் திருவாய்மலர்ந்தருள அதைக் கேட்டவுடனே சமுத்திரராஜன் காவேரியை மணம்புணர்ந்ததினாலாகிய சந்தோஷத்தினின்று நீங்கினவனாய் பின்னரும் வணங்கி சுவாமின்! பஞ்சநதக்ஷேத்திரத்தில் வசிக்கும் காவேரியுடன் வாழவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கின்றேன் ஆகையால் அது கைகூடுமாறு கிருபை பாலித்தருளவேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்ள அதனைக் கேட்ட அகஸ்தியரானவர் அங்ஙனமே செய்யக்கடவாய் என்று விடைகொடுத்தனுப்பிவிட்டு தானும் ஆசிரமத்தைநோக்கிச் சென்றனர். சமுத்திரராஜனும் அவ்விடம் விட்டு நீங்கி பஞ்சநதக்ஷேத்திரம் வந்து சேர்ந்து சிவபெருமான் அனுக்கிரகத்தால் ஆங்குள்ள காவேரியுடன் கலந்து எம்பெருமானுடைய ஆலயத்திற்கு வாயுமூலையில் தடாக ரூபமாய் வாழ்ந்துகொண்டிருக்கின்றனன். ஏ மகரிஷிகாள்! கவேரராஜ ரிஷிபுத்திரியாதலால் காவேரி என்ற நாமம்வந்ததோடு திருவையாற்றில் நூறு கலைகளோடும் வாழ்ந்துகொண்டிருக்கின்றபடியால் அங்கு ஸ்நானஞ் செய்பவர்கள் மோக்ஷானந்தத்தைப் பெற்றுவாழ்வர். அறிந்து கொள்ளக் கடவீர்களென காவேரியின் வரலாறுரைத்த சரித்திரத்தை பூர்த்தி செய்து சிவதாசப்பிராமணன் முத்தி அடைந்த சரித்திரத்தைக் கூறுவான் புகுந்தனர்.

பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

---



## ௰௧-வது சிவதாசப்பிராமணன் முத்தி அடைந்த அத்தியாயம்.

முன்னொரு காலத்தில் மகாயோகியாகிய சிவதாசனென்ற பிராமணோத்தமர் அனேக தீர்த்தயாத்திரை செய்ததோடு ஆங்காங்குள்ள சிவக்ஷேத்திரங்களையும் தெரிசித்துக்கொண்டு கடைசியாய் ஜீவன்முத்தி க்ஷேத்திரமாகிய திருவையாற்றை அடைந்து காவேரி ஸ்நானம் செய்து, விபூதி ருத்திராக்ஷம் அணிந்து நித்திய கருமானுஷ்டானங்களை முடித்துக்கொண்டவராய் சிவாலயத்தினுட்சென்று சிவதரிசனஞ்செய்துகொண்டு இந்தவருஷகாலம் ஜெப்பியேச்சுர மண்டபத்திலிருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர ஜெபம் செய்துவந்தனர். அங்ஙனம் இருக்குங்காலத்தில் ஓர்நாள் காசியிலிருந்து மரணம் அடையில் முத்திசித்திக்குமென்று வேதாகமங்கள் கூறுகின்றபடியால் இவ்விடம்விட்டு அங்குசெல்வதுதான் விசேஷமென்ற தோற்றம் உண்டாக உடனே காசிக்குப் போகவேண்டுமென்று புறப்பட்டு விந்தமலைக்குச் சமீபமாய்ச்செல்லும்போது. அங்குவசித்துக்கொண்டிருந்த ஓர் ராண்டபக்ஷியானது அன்னவரை எடுத்து விழுங்கவே அதை சகிக்காதவராய் பிராமணோத்தமரானவர் சிவபாதஞ்சடை மனதில் நினைந்துப் பலவாறாக ஸ்தோத்திரஞ்செய்யவே, அடியார்க்கெளியன் யாவென்று உலகமுய்யச்செய்து எங்கும் வியாபகமாய் விளங்கு சிவபெருமான் அவர்தோத்திரத்திற்கு மகிழ்ந்தவராய் ஓர் அரசன்போல் வேடம்பூண்டு அஸ்வாரூடராய் திருக்கரத்தில் குந்தாயுதத்துடன் அவ்விடத்திற்றோன்றி ஏ பிராமணோத்தமா! பயப்படாதே இதோ உன்னைவிழுங்கும் பக்ஷியை சம்மாரஞ்செய்து காப்பாத்துகின்றேனென்று அவ்வாயுதத்தால் பக்ஷியை இரண்டுதுண்டாக்கிப்பூமியில் வீழ்த்தினர். அங்ஙனஞ்செய்யவே பிராமணோத்தமர் பக்ஷிவாயினின்றும் நீங்கி மூர்ச்சாக்கிராந்தராய்ப் பூமியில்வீழ்ந்து சற்றுநேரஞ்சென்று சோபம்நீங்கி எழுந்தவராய் சமீபத்தில்நின்ற அரசனாகிய பரமசிவனைப்பார்த்து ஏ ராஜன்! ஆபத்துக்காலத்தில் உயிர்த்துணைவன்போன்று வந்து எனக்கு ஜீவதானஞ்செய்தனை. அதற்கு பிரதி உபகாரமாய் சக்கிரவர்த்தி திருமகனாகிய உனக்கு மிக எளிய பிராமணனாகிய யான் செய்யத்தக்கது ஒன்றுமில்லையாயினும் என்னுடைய பூர்ண ஆசீர்வாதமே அளிக்கத்தக்கது ஆகுமென்று மிகுந்த விசுவாசத்துடன் ஆசீர்வாதஞ் செய்து பின்னரும் ஏ ராஜன்! நீ எந்த தேசாதிபதி அதனை யானறிய அன்புடன் தெரிவிக்கவேண்டுமென்று வினவிப் பார்க்கவே

எம்பெருமான் ராஜ உருவத்தினின்றும் நீங்கி காளகண்டம், திரி நேத்திரம், சடாமகுடம் முதலிய அருட்டிருமேனியோடு உமையம்மையை வாமபாகத்தில் விளங்க ரிஷபாரூடராய்க் காக்ஷிதந்தருளி ஏ சிவதாசனே! அபத்துக்காலத்தில் நம்மை நினைத்தமையால் உன்னை ரக்ஷிக்கும் பொருட்டு அரசகோலத்துடன் தோன்றி காப்பாற்றியருளினோம், இப்போது நீ எங்கு செல்கின்றாய் அதனைக் கூறக்கடவாயென்று திருவாய் மலர்ந்தருளப் பிராமணோத்தமர் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து பணிந்தெழுந்து இருகரங்களையும் சிரசின்மேல் குவித்தவராய் கண்களிலானந்த நீர் பெருகப்பலவாறுகத் தோத்திரஞ் செய்து என்னப்பனே! அடியேனைக் காக்கும்பொருட்டு அரசகோலங்கொள்ள எங்கு கற்றனையோ, அதுவும் ஓர் திருவிளையாட்டேயாகும். உன்னை வேதாகமாதிகள் அறியாது மயங்குமென்னில் சிறந்தோனாகிய யான் சொல்லக் கிடக்கின்றதுமில்லையாகும். அநாதிர அடியேன் பஞ்சநதக்ஷேத்திரத்தில் வசித்திருந்து இப்போது மரணத்தால் முத்தியைத்தரத்தக்க காசியில் வசிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் அங்கு செல்கின்றேன் என்று கூறி நின்றனர். அவ்வாறு கூறவே சிவபெருமான் அதனைக் கேட்டருளி ஏ சிவதாசனே! மண்ணுலகத்தில் சிவஸ்தலங்களெவற்றிற்கும் மேலானதாய் ஒப்புவமை அற்றதாய் ஆங்கு வசிப்பவர்களது மரணத்தில் நாம் எழுந்தருளி தாரகமந்திரோபதேசஞ்செய்து முத்தியைத்தரத்தக்கதாயும் விளங்கும் அத்தலத்தின் மகிமையை உணராது வசித்துவந்தமையால் இவ்விதமான மருளுபத்து உனக்கு நேர்ந்தது. அப்பஞ்சநதக்ஷேத்திரம் ஜெனனத்தாலும், மரணத்தாலும், நினைத்தலினாலும், தெரிசித்தலினாலும், வாசம் செய்வதினாலும், மாபாதகங்களை எல்லாம் போக்கி முத்தியை அளிக்கத்தக்கதாகும். அதன் பெருமையை எடுத்துக்கூறப்புகில் மிக விரியும் ஆகையால் நீ இப்போதே ஆங்கு செல்லக்கடவாயென்று திருவாய்மலர்ந்தருளி இத்தடாகத்தில் மூழ்குமென ஆக்ஞாபித்து மறைந்தருளினர். அங்ஙனமாக பிராமணோத்தமர் உடனே சிவாக்ஞைப்படி தடாகத்தில் மூழ்கி திருவையாற்றில் காவேரியின் மத்தியில் எழுந்து பார்க்க எம்பெருமானுடைய கருணையங் கடல் அவ்விடத்து ரிஷபாரூடராய் காக்ஷிதந்தருளி ஏ சிவதாசா! காசியும் இணையாகாத இத்தலத்தில் உன் மரண பரியந்தம் வசித்து முடிவில் நமது சாயுச்சியம் பெற்று வாழக்கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளி மகாலிங்கத்தினுள்ளே மறைந்தருளினர். பிராமணோத்தமரும் நீண்டகாலம் அவ்விடத்து வசித்து மா



ணத்தில் சிவபாதங்களின் சரணாரவிந்தத்தை அடைந்து வாழ்ந்தனர். ஏ ரிஷிபுங்கவர்காள்! எம்பெருமான் திருவருட்டிறத்தை நன்கு உணரக்கடவீர்கள். என்று சூதமுனிவர் பிராமணன் முத்தி அடைந்த சரித்திரத்தை பூர்த்தி செய்து ஆர்த்தமன் முத்தியடைந்த சரித்திரத்தைக் கூறுவான் புகுந்தனர்.

பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

## ௰௨-வது ஆர்த்தமன் முத்தி அடைந்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகள்! கேட்கக் கடவீர்கள். முன்னொரு காலத்தில் பிராமண குலத்தில் தோன்றி சிறு பருவத்திலேயே தாய் தந்தையருடைய அருமையினால் அடங்காது மூர்க்கனாய் வளர்ந்து யௌவன பருவம் வந்த உடனே தன் மனதிற்குத் தோன்றியவாறு நடக்க ஆரம்பித்து பஞ்சமாபாதகத்திற்கு இருப்பிடமாய்க் கெட்ட வழியாலும் திருட்டினாலும் பொருள் சம்பாதித்து மானவெட்கமென்பதின்றி முறை கடந்து மீன்றிலே, ஆயினும் குல ஒழுக்கத்துக்கு மிக இழிவான காரியமாச்சே என்பதை மனதில் எட்டுணையும் எண்ணுவதுவுஞ் காலவேறுபாட்டையும் நோக்காது புணர்ந்தும், ஆகாரம் இன்ன இடத்தில்தான் உண்ணவேண்டும், நம் குலத்துக்குரிய ஆகாரம் எதுவோ அதைத்தான் உண்ணவேண்டுமென்ற முறையை கடந்து இழிந்த வருணத்தவர்கள் கிரகங்களில் மதுமாம்ச முதலிய ஆகாரங்களை உண்டும் கையில் கொலைக்குரிய ஆயுதங்களை வைத்துக்கொண்டு பார்ப்பவர்கள் இவன் மகா வேத வித்தாப்போலிருக்கின்றது எனக் கூறுமாறு பரம சாதுக்கள் போன்ற வேடம் தரித்து பிறர் பொருளை வஞ்சனையால் கவர்ந்தும், இன்னும் அளவிறந்த கெட்ட காரியங்களைச் செய்துகொண்டுவந்த ஆர்த்தமன் என்ற ஓர் பிராமணனிருந்தான். அன்னவன் ஓர் நாள் அளவிறந்த பிராமணோத்தமர்கள் கூட்டம் கூட்டமாய் சிவநாம சங்கீர்த்தனம் செய்துகொண்டு மார்க்கத்தில் செல்லுவதைக் கண்டு அவர்களிடத்தில் உள்ள பொருளைக் கவரவேண்டுமென்ற எண்ணங்கொண்டவனாய் தானும் பரம சைவிகள் போன்ற வேடம் பூண்டு அவர்களுடன் கலந்து சென்றான்! சர்வகாருண்ய மூர்த்தியாகிய உமாபதியானவர் உலகத்தவர் கண்டு தெரிசித்துக் கடைத்தேறுமாறு [illegible] திருவுருவத்தைக் கொண்டெழுந்தருளினர் போலத் [illegible]ங்களிலெல்லாம் எங்கு செல்கின்

தீர்கள். அதனை அடியேன் தெரிந்துகொள்ளத் தெரிவித்தருளல் வேண்டுமென்று சாஷ்டாங்கமாய் வீழ்ந்து பணிந்து மிக பயபக்தியுடையான் போல நின்றுகொண்டிருந்தனன். அதனைக் கேட்ட பிராமணோத்தமர்கள் யாவரும் களங்கமற்ற மனதையுடையவர்களாதலின் பரம அயோக்கிய சிகாமணியாகிய அவ்வஞ்சகனை நோக்கி ஏ பிராமணோத்தமா! மேலான உனது பிராமணீகத்தன்மையையும் இனிய வசனங்களையும் கேட்டு மெத்த சந்தோஷமடைந்தோம். இப்போது நாங்கள் யாவரும் பஞ்சநத க்ஷேத்திரத்தில் துலா மாதம் முழுமையும் இருந்து காவேரி ஸ்நானம் செய்யில் அதுவானது ஜென்மத்திற்கு இன்றியமையாப் பெரும் பேறென வேதாகமங்கள் விதித்திருக்கின்றபடியால் அவ்வுத்தம காரியத்தைச் செய்வதின்பொருட்டு அங்கு செல்கின்றோம், எங்களை வினவிய நீ யாவன் எங்கு செல்கின்றாய் அதனை உருவாறு சொல்லக்கடவாயென்று கேட்டனர். அவ்வாறு அவர்கள் வினவிய துர்த்தமனனவன் பின்னரும் அவர்களை வணங்கி பிராமணோத்தமர்காள்! என் வர்த்தமானத்தை என் கேட்கின்றீர்கள் நானோ தாய் தந்தை முதலிய ஒருவரும் இல்லாத அநாதையாய் மிகுந்த துக்கத்துடன் அநேக தேச சஞ்சாரஞ் செய்துகொண்டு வருகின்றேன். அங்ஙனமாக வருஞ் சமயத்தில் மகாயோகி ஒருவர் என்னைப்பார்த்து ஏ பிராமணா! நீ மிகுந்த கிலேசமுடையவனாகக் காணப்படுகின்றாய் அது நிவர்த்தியாதற்பொருட்டு நான் ஒரு மந்திரோபதேசஞ் செய்கின்றேன் அதனைப்பெற்றுக்கொண்டு பஞ்சநத க்ஷேத்திரஞ்சேர்ந்து காவேரிஸ்நானஞ்செய்து அங்கிருந்து ஜெபிப்பாயாகில் துக்க நிவர்த்தியாவதோடு ஜெப சித்தியுமாகி நல்ல கதியையும் அடைவாயெனக் கூறி ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரோபதேசஞ் செய்தருளினர். அதனைப்பெற்றுக்கொண்டு பஞ்சநத க்ஷேத்திரம் செல்கின்றேனென்று மெய் யென்பது அணுவளவு மில்லாத பொய்யைக் கூறி நடித்து நிற்க, பிராமணோத்தமர்கள் அதனை உண்மையெனக் கொண்டு தங்களோடு அழைத்துக்கொண்டு திருவையாற்றினிடம் வந்து சேர்ந்தார்கள். அங்ஙனமாக யாவரும் வந்து சேர்ந்து எல்லோரும் வசித்தற்கேதுவாகிய ஓர் இடமமர்த்தி அதில் அன்றிரவு தங்கியிருந்து உதயத்தில் துலாமாத ஸ்நான ஆரம்பமாகையால் யாவரும் ஒருங்கு சேர்ந்து ஸ்நானஞ்செய்யப் போகப்புறப்பட்டு தங்களுடைய சாமான் முதலிய யாவற்றையும் பாதுகாத்தற்கு யாவரிருக்கின்றதென்று யோஜனை செய்துகொண்டிருக்க அதனைப் பக்



கத்திலிருந்த துர்த்தமன் அறிந்து இது நல்ல சமயம் நாம் எண்ணத்தை முடித்துக்கொள்ளுவதற்கென்று தீர்மானித்து யோஜனை செய்துகொண்டிருக்கின்ற அவ்வந்தணர்களை நோக்கி சுவாமிகாள்! எதற்காக யோஜனை செய்தல்வேண்டும் அடியேன் இங்கு தங்களுடைய பொருளையெல்லாம் பாதுகாத்துக்கொண்டிருக்கிறேன். தாங்கள் யாவரும் ஸ்நானஞ் செய்து வந்தவுடன் செல்கின்றேன். ஆகையால் கொஞ்சமும் கவலையில்லாது காவேரிக்குச் சென்று ஸ்நானஞ் செய்து வாருங்கள் என்று மிக வணக்கத்துடன் தெரிவிக்க அவர்கள் யாவரும் மெத்த சந்தோஷத்துடன் அதைக் கேட்டுக்கொண்டு (யௌவன பருவமுடைய ஒரு பெண்ணை விட்டொருவன் தான் இவளைப் பாதுகாக்கின்றேன் கவலைவேண்டாமென்று சொல்ல அதை நம்பிச்செல்கின்றவர்கள்போல) நம்பிக்கையுடன் ஸ்நானஞ்செய்யச் சென்று விட்டார்கள். அங்ஙனஞ் செல்லவே துர்த்தமன் உடனே அவர்கள் பொருள்யாவையும் எடுத்து ஓர் மூட்டையாய்க் கட்டிக் கொண்டு தான் வந்த வழியை நோக்கிச் செல்ல ராஜ சேவகர்கள் இவன் செல்கின்ற தன்மையை நோக்கித் திருடனென்ற அநுமானங்கொண்டு பின் தொடர்ந்து செல்ல அதனையறிந்த துர்த்தமனும் அவர்களிடத்தில் அகப்படாது ஓடிப்போகவேண்டுமென்று எண்ணங்கொண்டவனாய் காவேரியில் ஸ்நானஞ்செய்துகொண்டிருந்த கூட்டத்துட் பிரவேசித்து தானும் ஸ்நானஞ்செய்யவே சேவகர்கள் தாங்கள் கொண்ட அநுமானத்துக்குத் தக்கவாறு இவன் மறைந்ததைக்கண்டு திருடனெனத் தீர்மானித்தவர்களாய் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்தவனைப் பிடித்துக் கரையிற் கொண்டு வந்து பரிசோதனை செய்ய பொன் முடிப்பு முதலிய வஸ்துக்களிருப்பதைக்கண்டு மட்டிலாமட்டில் இருக்கின்றது தங்கள் அரசன் முன்பாகக்கொண்டுபோய் விட்டார்கள். அங்ஙனம் விடவே அரசனானவன் சேவகர்கள் கூறியவாறு இவன் திருடனாகவே விசாரித்து அறிந்து திருடன்தான் என்பதாய்த் தீர்மானித்தவனும் பிராமணன் என்ற அபிமானத்தால் அவனிடத்திலுள்ள பொன் முடிப்பு முதலியவைகளை வாங்கிக்கொண்டு அவனை விரட்டிவிடும்படிச் சேவகர்களுக்கு ஆக்ஞாபிக்க அவர்களும் அரசனுடைய ஆணையின்படி செய்யவே துர்த்தமனனவன் திருவையாற்றைவிட்டு ஓடிப்போய்விட்டான். இங்கு இவ்வாறாக ஸ்நானத்திற்குச் சென்ற பிராமணோத்தமர்கள் யாவரும் வந்து சேர்ந்து இந்த அயோக்கியனையும் தங்களுடைய முதலியவைகளையும் காணாமல் மிக்க கிலேசமுடையவர்களா

னாய் அரசனிடம் வந்து முறையிட அரசன் அதனைத் தெரிந்து
அவர்களுடைய பொன்முடிப்பு முதலிய யாவற்றையும் கொடுத்து
நடந்த சங்கதிகளையும் கூறி விடுக்கவே பிராமணோத்தமர்கள் அவ்
வரசனை ஆசீர்வதித்து தங்கள் திரவியாதிகளைப் பெற்றுக்கொண்ட
வர்களாய் கிராமத்தினிடம் வந்து தங்கள் இஷ்டப்படி சந்தோஷமாய்
வசித்துக்கொண்டிருந்தார்கள். ரிஷிபுங்கவர்களே! கேட்கக் கட
வீர்கள். இவ்விதம் திருவையாற்றை விட்டகன்ற ஆர்த்தமனென்ப
வன் அளவிறந்த தேசங்களில் சென்றும் துன்மார்க்கத்தை அநு
ஸரிப்பதும் விடாதவனாய் ஜீவனஞ்செய்துவந்துங் கடைசியாய் மரண
மடைய யமபடர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு தங்கள் உலகம்
செல்லவே கைலயங்கிரிவாசனாகிய சிவபரஞ்சுடர் நந்திகேசுவரனை
விளித்து ஏ நந்தி! யமபடர்களால் பிடிக்கப்பட்டு அவர்கள் உலகம்
செல்கின்ற ஆர்த்தமன் மகாபாபியாய் ஓர் காலத்துப் பயத்தால் காவே
ரியில் மூழ்கினவனானாலும், அமாவாசைப் பிராதக் காலத்தில் அது
கிடைத்தபடியால் சகல பாபத்தினின்றும் நீங்கி நம் சிவலோகத்தில்
வசிக்கும்படியான தன்மையை அடைந்துவிட்டனன். ஆகையால்
நீ சென்று அவர்களிடத்தினின்றும் அவனை விடுத்து இங்கு கொண்
டுவரக் கடவாயென்று ஆக்ஞாபித்தருள், நந்திகேசுவரர் அவ்வாக்
ஞையின்படி சென்று ஆர்த்தமனை அழைத்துக்கொண்டு வந்து தன்
வாசஸ்தானத்தில் விடவே சிவபெருமான் அன்னவனுக்கு சாரூ
பத்தியம் கொடுத்து தன் உலகத்தில் வைத்தருளினார். இதனை அறி
ந்த யமதர்மனென்பவன் உடனே சிவ சந்நிதானத்தில் வந்து எம்பெரு
மானே! மகாபாதகனாகிய ஆர்த்தமன் சிவலோகத்தில் வசித்தற்கான
பெரும்பேற்றை அடைந்த காரணம் அடியேன் தெரிந்துகொள்ளு
மாறு திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்து அஞ்
சலியஸ்தனாய் நிற்க உமாநாயகன் அவ்வணம் வினவிய யமதர்மனை
நோக்கி ஏ தண்டதரா! காவேரி ஜலத்தில் பட்ட காற்று மகாபாத
கன் மேற்படினும் அவனைப் பாவத்தினின்றும் விடுத்து முத்தியை
அளிக்குமென்னில் மாபுண்ணிய தினமாகிய அமாவாசைப் பிராதக்
காலத்தில் அதில் படிந்து ஸ்நானம் செய்த ஆர்த்தமன் பெறும்
பேற்றைக் கூறவும் வேண்டுமோ இதனை அறிந்து நடந்துகொள்ளக்
கடவாய் உன் உலகம் செல்லென்று ஆக்ஞாபித்தருள யமதருமன்
பரம்பொருளின் பாதபதுமங்களில் வீழ்ந்து பணிந்து விடைபெற்
றுக்கொண்டவனாய் தன் உலகம் சேர்ந்தனன் மகரிஷிகாள்! காவே
ரியின் மகிமை எவ்விதத்தும் நாவினால் சொல்லும் திறத்ததா அறிந்து



கொள்ளக் கடவீர்களென ஆர்த்தமன் சரித்திரத்தை பூர்த்திசெய்து
அஜப்பிரக்ஞப் பிராமணன் முத்தியடைந்த சரித்திரத்தைக் கூறு
வான் புகுந்தனர்.

௰௨-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## ௰௩-வது அஜப்பிரக்ஞன் முத்தி அடைந்த அத்தியாயம்.

---

நைமிசாரண்யவாசிகாள் கேட்கக்கடவீர்கள். பூர்வத்தில்
மண்ணுலகத்துக்கு தேவகளை உலகமதிக்கப் புகழத்தக்க
பிராமண குலத்திற் பிறந்தும், அக்குல ஒழுக்கங்களைவிட்டு, மாதா
பிதா, குரு பக்தர்கள் முதலிய மேன்மையுடையாரின் சொல்வழி
நடவாது மகா துன்மார்க்கச் செய்கைகளை கைக்கொண்டவனாய்
அஜப்பிரக்ஞன் என்னும் நாமத்தையுடையவோர் பிராமணனிருந்
தான். அன்னவன் தன் மனைவியை விலக்கிவிட்டு ஓர் இழிந்த
குலத்திற் பிறந்தாளாகிய வேசியை வைப்பாட்டியாகக்கொண்டு
அவள் வீட்டிலேயே போஜன முதலியவைகளும் உண்டு மதுமாம்ச
பக்ஷண ஆகாரியாய் உலகத்தவர் நிந்திக்குந் தன்மையோடு காலங்
கழிக்குங்கால் சமயத்தில் ஓர் நாள் பஞ்சநத க்ஷேத்திரத்தில் செம்
பொற்சோதீஸ்வரருடைய சைத்திரோற்சவம் நடப்பதைப் பார்க்க
அளவிறந்த ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் சிவநாமசங்கீர்த்தனஞ்
செய்துகொண்டு செல்வதைப் பார்த்து தானும் "சாமியுனைப்பிரியே
னென்றுரைத்துப் பின்னகன்று மின்னுடன்னை நோக்கித், தோமிலா
தின் மாற்றந்திரம்பியதேதென்றெண்ணீ தொகுப்பாய்த்தந்த, சாமியை
நான் பிரியேனென்றெனறதல்லாலுனையன்றசாமியானெல், பூமியிலுன்
மாத்தேன்ன விலையென்ன விடையென்ன புகல்வாயென்றுள்'' (ஓர்
பாலியனானவன் மிகுந்த திரவியமுடையானாய் இருக்குஞ் சமயத்தில்
காமஇச்சையால் ஓர் வைப்பாட்டியை வைத்துக்கொள்ள அன்னவள்
அவனிடத்தே உள்ள பொருளைக் கவர வேண்டி ஆசையிக உடை
யாள்போன்று நடித்து என் சாமி உன்னை எக்காலத்தும் பிரியேனெ
னக் கூறி அவனிடத்திலுள்ள பொருள் யாவுந் தன் வசமானவு
டனே அவனைத் தன் வீட்டுக்கு வாராதிருக்கும்படியான மார்க்கங்க
ளைச் செய்து நீக்கிவிடவே அன்னவன் தன் தாய் தந்தை மிக
வருந்திச் சம்பாதித்த பொருள் போனதுக்குத் துக்கமடையாது
அவள் பிரிந்த விஷயத்தில் மிகுந்த துக்கமுடையவனாய் ஏ பெண்

யிணி! நீ சாமியுனைப் பிடியென் என்று கூறிய உன் குற்றமில்லாத வர்த்தையை மறந்து இங்ஙனமாவதென்னென்று வினவ அந்ந வன் சாமியெனத் திரவியத்துக்கு ஓர் நாமமுள்ளதை நீயறிந்திலாய் யே, நான் அத்திரவியத்தை எப்போதும் விட்டுப் பிரியமாட் டேனென்று சொன்னதேயல்லாது உனையல்ல நீ அந்த திரவியம் நான்தான் எனக் கூறுவாயாகில் மாத்து, இடை, விலை முதலியவை கள் திரவியத்துக்கு உள்ளது போன்று உனக்கிருக்கின்றதா வென்று கூறும் தன்மையுடையாளிவ ஒருத்தியாகிய) தனவைப்பாட்டியுடன் திருவையாற்றுக்கு வந்து சேர்ந்து அன்று தினம் எம்பெருமானு டைய ரதோத்சவமானதால் ரதாரூடராய் உமையம்மையார் சமேத ராய் எழுந்தருளிவருகின்ற சிவபரஞ் சுடரைத் தெரிசித்து அன்றி ரவு பலஜனங்கள் படுத்து நித்திரை செய்யும் வீதியில் தானும் வைப் பாட்டியுடன் படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தனன். அங்ங னம் நித்திரை செய்துகொண்டிருக்கும் சமயத்தில் அநேகந் திருடர் கள் கூட்டமாக ஆயுதபாணிகளாய் அங்கு வந்து சேர்ந்து நித்திரை செய்துகொண்டிருக்கும் ஜனங்களைக்கொன்று பொருள்களைக் கவர் ந்த சமயத்தில் அப்பிராமணனும் அவன் வைப்பாட்டியாகிய விலைச்சி யும் அன்னவர்களால் வெட்டுண்டு மரணத்தையடைந்தே இருவரும் சிவலோகஞ் சேர்ந்து ஆனந்தமாய் வாழ்ந்துகொண்டிருந்தனர். ரிஷி ஸ்ரேஷ்டர்காள்! தன்னை ஸ்பரிசித்தவஸ்து எதுவாயினும் அதை தங்கமயமான பொன்னாக்குவது பரிசவேதி என்னும் இலக்குள் ளது போன்று பஞ்சநதத்தில் வசித்து எம்மையுடையகொண்டரு ளிய சிவபரஞ் சுடரைத் தெரிசிப்பவர்கள் எத்துணை பாதகமுடைய ராயினும் அவையாவும் அனலிடைப்பட்ட பஞ்சுபோல் நசித்து சிவ லோகத்தன்மை பெறுவது சத்தியமாகும் நன்குணரக்கடவீர்களென ஸூதபௌராணிகர் அப்பிராமணன் சரித்திரத்தை பூர்த்திசெய்து பாபி கள் ஜென்மமடைகின்ற சரித்திரத்தைக் கூறுவான் ஆரம்பித்தனர்.

௰௩-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## ௰௪-வது பாபஞ்செய்தவர் ஜென்மம் அடையும் வரலாறு உரைத்த அத்தியாயம்.

---

அவைத்தியா சேவியாளவன் ஸூதனமாவாகிய தன்றுடைக் கனைக்கு ஏ ஸ்வாமின்! உலகத்தில் ஜீவர்கள் செய்த பாபத்து க்குத் தக்கவாறு நரகவேதனையை அநுபவித்தாலும் அதன் சேஷத்



தால் பூமியில் வந்து அனேகவிதமான ஜென்மங்களை அடைகின்றார்கள் என்கிறீர்களே. அங்ஙனம் என்ன என்ன பாபம் செய்தவர்கள் என்ன என்ன ஜென்மத்தை அடைகின்றார்கள் அதனை அடியேன் தெரிந்து கொள்ளுமாறு ஒருவாறு தெரிவித்தருளல் வேண்டுமென்று கேட் டுக்கொள்ள ஸூதனமாவானவர் அதனைக் கேட்டு என்னைப்பிற் றுமியாய்! கூறுகின்றேன் கேட்கக்கடவாய், பிரமஹத்தி செய்த வன், கழுதை, பன்றி, ஒட்டை, கஜம், பக்ஷி, மான், நாய் முதலிய ஜென்மங்களை அடைவதோடு புலாலுண்ணும் சண்டாளனாகவும், ஆசாரியன் மனையாளைப் புணர்ந்தவன், மலத்தை உண்ணும் பன்றி, நரி, காகம், கழுதையாகப் பிறப்பதோடு, மனிஷிய ஜென்மத்தையும் அடைந்து திருடனாகவும், கட்குடித்தவன், கோட்டான், எறும்பு, ஈ, கொசு, மூட்டைப்பூச்சியாகவும் பிறந்து மனிஷிய ஜென்மத்தில் சேனம் சுடும் வெட்டியானாகவும், சுவர்ணத்தைத் திருடினவனும், அவனுடன் சிநேகித்தவனும், எலி, குரங்கு, தவளை, ஆமை, புழு, புறா, அன்னம், கொக்கு, எருமையாகவும் பிறப்பதோடு, மானிட ஜென்மத்தில் நீசனாகவும் ஒருவர் சொத்தை அபகரித்தவன், பிரம ராக்ஷசனாகவும், தானியங்களைத் திருடினவன் பெருச்சாளியாகவும், தண்ணீர் திருடினவன் நீர்க்காகமாகவும், நெய் திருடினவன் கஸ் மன் முடிய தாவரமாகவும், கீரியாகவும், காய்கறி திருடினவன் மயிலாகவும், வாஸ்ம பதார்த்தத்தை தேங்காய் திருடினவன் சிறு குருவியாகவும், மாம்சம் திருடினவன் கழுகாகவும், எண்ணெய் திரு டினவன் கழுதையாகவும், பட்டு வஸ்திரம் திருடினவன் சிச்சிலி யாகவும், வெண்பட்டுத் திருடினவன் தவளையாகவும், புஷ்பத்தைத் திருடினவன் குரங்காகவும், இலையும் பழங்களைத் திருடினவன் வர்க் குருவியாகவும், வைக்கோல் புல் திருடினவன் புல்லட்டையாகவும், பாய் கட்டில் தலையணை வாகனம் பல்லக்கு இவைகளைத் திருடினவன் ஒட்டகமாகவும், தேவாலய அதிகாரத்தை வகித்து நஷ்டம் விளைத் தவன் பிசாசாகவும், விபூதி ருத்திராக்ஷம் வஸ்திரம் இவைகளைத் திருடினவன் பெருவியாதி உடையவனாகவும், பொய் சொன்னவன் மனைமுக்காலத் தவளையாகவும், தாய் தந்தை தமையன் குரு வேதி யர் வைஷ்ணவர் சந்நியாசி சூரியன் சந்திரன் நவக்கிரகம் மற்ற தேவர் கள் திரிமூர்த்திகள் இவர்களையும், வேதசமாதி புராணங்கள் யாகம் இவைகளையும் நிந்தித்தவன் தேள் பாம்பு சடலைக்காரியாகவும், ஒருவருக்குக் கொடுத்த தானத்தை கொடுக்கவொட்டாது செய்தவ னும், அடியார்க்கு அன்னமிடாதவனும், ஊன்று ஆசாரமின்றி வருத்

தம் தரித்திரனுகவும், ஒருவருக்கு ஒன்றைக் கொடுக்கவேண்டுமென்று பின் கொடாதவன் துர்நாற்றமுள்ள மூக்கை உடையவனுகவும், வேதத்தில் கூறியுள்ள விதியை விட்டு விலக்கை அனுசரிப்பவன் முள் நிறைந்த செடியாகவும், தேவாலயம் சாவடி குளம் கிணறு இவைகளைக் கெடுத்தவனும், சிலம்பம் படித்தல், சாஸ்திரமுள்ள அமுக்கை சாதாரண காலத்தில் தேய்த்தருட்டல், காலமல்லாத காலத்தில் புணர்தல், எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தல், நித்திரை செய்தல், க்ஷவரம் செய்துகொள்ளல், அதிக அன்னம் உண்ணல், சூதாடுதல் இவைகளைச் செய்தவனும் திரப்பிர[illegible]பாகவும், தேவர்களையும் அடியார்களையும் நிந்திப்பதைக் கேட்பவன் மண்ணுளிப்பாம்பாகவும், அத்தாவிக்கத்தை நிந்திப்பவன் முகத்திலும் காதிலும் சீழொழுகும் ரோகம் உடையவனுகவும், சூத்திரப்பெண்ணை புணர்ந்த பிராமணன் முதலையாகவும் மீனுகவும் ஆமையாகவும் பிறந்து உழலுவர். ஏ அனவத்தியாதேவி ! இதன் விரிவைக் கூறப்புகின் இன்னும் அனேகமாகும், ஆனால் சிலர் இங்கு கூறியவந்த ஜென்மங்களைத்தாம் உலகில் உள்ளனவாயினும் இந்த பாபத்தைச் செய்தவர்தான் இந்த ஜென்மத்தை அடைந்தவரென்ன அதற்கு ஆகமப்பிரமாணமேயன்றி காக்ஷிப்பிரமாணம் இல்லையே ஆதலால் நாம் அதை நம்பக்கூடுமென மறுத்துக் கூறுவர். கண்மணி! அவர்கள் ஆகமப்பிரமாணத்தை நம்பாவிடினும் "சாஸ்திரயதுகாயச்சா" சாஸ்திரங்களனைத்தும் மக்களது சுகத்தின்பொருட்டெனக் கூறிய உண்மை வசனப்படி பாபகாரியங்களைச் செய்வோர் உலகத்தாரால் நிந்திக்கப்படுவதோடு தனக்கும் ஓர் சுகமில்லாதிருப்பதைக் காக்ஷிப்பிரமாணத்தில் காண்கின்றபடியால் பாபத்தைச் செய்ய அஞ்சவேண்டுவது முக்கியமாகும். அதுநிற்க மேற்கூறிய பாபங்களைச் செய்தவர் அதனைப் போக்கிக்கொள்ளவேண்டுமென்று எண்ணங்கொண்டு பஞ்சநதக்ஷேத்திரம் சேர்ந்து பத்துவருஷகாலம் அவ்விடத்தே வசித்து பிராதக்காலத்தில் காவேரி ஸ்நானமும் ஒருவேளை ஆகாரமும் செய்துகொண்டு பரம கருணாநிதியாகிய சிவபெருமானின் அர்ச்சனை செய்து வருவாராகில் பாப நிவிர்த்தியாய் நல்ல பதவியைப் பெறுவர் அறிந்துகொள்வாயெனக் கூறியவற்றை ஏ மகரிஷிகாள்! உங்கட்கு தெரிவித்தருளினேம் தன்குணரக் கடவீர்களெனச் சூதபுராணிகர் பாபிகள் ஜென்மம் அடையும் சரித்திரத்தைப் பூர்த்திசெய்து மரணக்குறி உரைத்த சரித்திரத்தை கூறுவான் ஆரம்பித்தனர்.

பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.



## ௰௫-வது மரணக்குறி உரைத்த அத்தியாயம்.

அனவத்தியாதேவி பின்னும் நாதசன்மாவை வணங்கி சுவாமின் ! மரணக் குறியையும் அதற்குப் பிராயச்சித்தத்தையும் கூறியருள்வீரென்றுவேண்டி கேட்க நாதசன்மா ஏ பெண்ணே ! இராக்காலத்தில் சந்திரனைச் சூரியனைப்போல் உஷ்ணமாகக் கண்டாலும், சூரிய கிரணங்கள் கண்ணுக்குத் தோன்றாதிருந்தாலும், ஆகாசம் சிவப்பாக இடையிடையே விட்டுவிட்டுத் தோன்றினாலும், எலி [illegible]பட்சி ஆசனத்துவாரம் இருந்தாலும், காகக்கூடுபோற்றுக் கந்தர்த்தவிலில் விழினும், சீக்கிரத்தில் மரணமுண்டாகும். சூரியனில் துவாரமாகக் கண்டாலும், தன் நிழலில் துவாரமாகக் கண்டாலும், ஒரு மாசத்தில் மரணமுண்டாகும். ஜலத்திலாவது கண்ணாடியிலாவது தன் சிரம் வக்கிரமாகவும் அற்றதாகவும் கண்டால், எமன் தன் வீட்டில் வந்திருக்கின்றான். கண்ணை மூடித் திறக்கும் காலத்தில் பூச்சி பறந்துபோயிருந்தால், உடனே மரணம். காதைப் பொத்தி சத்தம் கேளாதிருந்தால், எமன் சமீபத்திலிருக்கின்றான். நெருப்பு மயிலின் கழுத்துப்போல் தோன்றினாலும், மேகமில்லாத காலத்தில் மின்னல் தோன்றினாலும், மின்னல் காலத்தில் ஒளி தோன்றாதிருந்தாலும், மேகத்தில் சூரியகாந்தி தோன்றினாலும், பதினைந்து நாளில் மரணம். பூமியில் சுவாலை தோன்றினால், ஏழு நாளையில் மரணம். சந்திரகாந்தி - துருவநக்ஷத்திரம் - அருந்ததிநக்ஷத்திரம் - கண்ணுக்குத் தோன்றாதிருந்தால், ஒரு வருஷத்தில் மரணம். கிரணமில்லாமல் சூரியனையும், காந்தியில்லாமல் அக்கினியையும் கண்டால், பதினொருமாசத்தில் மரணம். அகாரணமாகத் தன் உடம்பு பருமனுகவும், இளைப்பாகவும், கறுப்பாகவும் கண்டால் எட்டு மாசத்தில் மரணம். புறா - கழுகு - பருந்து - காகம். தலையில்பட்டால் ஆறுமாசத்தில் மரணம். சலத்தில்சித்திரதனுசு கண்டால்; இரண்டு அல்லது மூன்றுமாசத்தில் மரணம். தேகத்தில் வேம்புவாசம் பிணவாசம் கண்டால், ஒரு மாசத்திற்குமேல் மரணம். இருதயம் வரட்சியாகவிருந்தாலும், தலையில் புகைச்சல் கண்டாலும், சரீரமுழுதும் நடுக்கமுற்றாலும், பத்துநாளையில் மரணம். பிராணவாயு வேகமாக அறுந்துபோயிருந்தாலும், பகல் காலத்தில் நக்ஷத்திரத்தைக் கண்டாலும் இராத்திரியில் இந்திரதனுசைக் கண்டாலும் சிவப்பு-கறுப்பு வர்ணமாகச் சந்திர சூரியர்களைக் கண்டாலும், சூரிய உதய காலத்தில் எதிரில் நரி ஊளையிட்டாலும் சீக்கிரத்தில் மரணம்,

நாக்கு அதிகக்கறுப்பாகவும், முகம் அவலக்ஷணமாகவும், கண்கள் சிவப்புடன் கலந்த கருப்பு வர்ணமாகவுங் கண்டாலும், மேற்பார்வை சிவப்பாகவும் கருப்பாகவுமிருந்தாலும், சரீரத்தில் உஷ்ணமின்றியிருந்தாலும், எமன் சமீபத்திலிருக்கின்றான், நாபியிலும், மார்பிலும் ஒட்டையாகக் கண்டாலும், தணல்போல் மூத்திரமிருந்தாலும், பல் கறுத்த நிறமாக இருந்தாலும், சீக்கிரத்தில் மரணம்.

சித்திரையில் பன்றியாற்றுணைடிப்படுவதாகவும், குரங்குதன் றலையைப் பிசைப்பதாகவும், கருக்குவாய்வு வீசுவதாகவும், பொன்வாந்தியெடுப்பதாகவும், தேனைக்குடித்துத்தின்பதாகவும், தாம்பூரத்திறுத்தி கைத்தின்பதாகவும், வெண்டாமரைப்பூவைத் தரிப்பதாகவும் கழுதை பன்றி இவைகள் கட்டின வண்டியிலேறிச் சவாரிபண்ணுவதாகவும், கறுத்த பசுவின் மேலேறுவதாகவும் விளாயிச்சம்வேர் மாலைதரித்துத் தென்றிசை போவதாகவும் பூதப்பிரேதப்பிசாசங்களைக் கண்டதாகவும் ஆகாயத்திற் கந்தர்வ பட்டணத்தைக் கண்டதாகவும் கிருகங்களைச் சிவப்பு நிறமாகவும் தன் கால் வெட்டப்பட்டதாகவும் சேற்றிலாவது புழுதியிலாவது தன் காலகப்பட்டழுந்ததாகவும் தன் வஸ்திரஞ் சித்திரவர்ணக்கறுப்பு வர்ணமாக இருப்பதாகவும் கருநிறமுடைய மொட்டைமனிதன் றன்னை வாதிப்பதாகவும், கற்களாலடிபட்டதாகவும், தன் றலையை விரிகதுச் சிரித்து ஆடிக்கொண்டு தென்றிசையிலோடுவதாகவும், கோமயமடுவில் விழுந்ததாகவும், நாண்ணெய்க்கொப்பரையில் விழுந்ததாகவுஞ் சொப்பனங்கண்டால் சீக்கிரத்தில் மரணமுண்டாகும். அதற்குப் பிராயச்சித்தமாகப் பஞ்சநதக்ஷேத்திரத்தையடைந்து காவேரிஸ்நானம் பண்ணிச் செப்பேசுவரரைத் தெரிசித்து மரணபரியந்த மங்குவசித்தால் எமலோகமடையாமற் சிவலோகமடைவார்களென்ச் சூதபுராணிகர் மரணக்குறி உரைத்த சரித்திரத்தைப் பூர்த்திசெய்து ஆலயவரலாறுரைத்த சரித்திரத்தை கூறுவான் றொடங்கினர்.

௰௩-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## ௰௪-வது ஆலயவரலாறுரைத்த அத்தியாயம்.

---

ரிஷி சிரேஷ்டர்காள்! கேட்கக் கடவீர்கள் முன்னொரு காலத்தில் சூரியவம்சத்திற்றோன்றி அக்குல அரசர்களுக்கு ராஜதானியாய் விளங்கும் அயோத்தி மாநகரத்தில் மனுச் சக்கிரவர்த்தி புதல்வனும் சப்த தீவுக்கு அரசனுமான பிரிய விரதமகாராஜன் இருந்து மனுமுறைவழுவாது அரசு செலுத்திக்கொண்டு வருங்காலத்தில் தவமிசேஷத்தால் பிறந்த தன் புத்திரர் எழுவர்க்கும் ஏழுதீவுகளை பகிர்ந்துக் கொடுத்துவிட்டு வாழ்ந்துகொண்டிருக்கு நாளில் ஓர் நாள் க்ஷேத்ரசஞ்சாரஞ் செய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டவனாய் மேற்றிசையை நோக்கிப் பிரயாணமாகிச் செல்ல அது சமயத்தில் ஆகாயவாணி அவ்வரசனை நோக்கி ஏ பிரிய விரதனே! நீ இன்னுங்கொஞ்சதூரஞ் சென்றால் ஒரு அற்புதத்தைக் காண்பாயென்று உரைத்தது. அதைக் கேட்டு அளவிறந்த சந்தோஷமுடையவனாய்ச் சென்றுகொண்டிருந்தனன். அங்ஙனமாகச் சிறிது தூரம் சென்றவுடனே சேனைமுதலியவற்றையும் வைத்துவிட்டுச் செல்லத்தக்க பிரகாசத்துடன் சிவலிங்கத்தினின்றும் சிவபெருமான் திருவருட் கோலத்தோடு எழுந்தருளி அன்னவனுக்குக் காக்ஷிதந்து ஏ பிரிய விரதனே! இவ்விடத்து உலக சிருட்டிக்கர்த்தாவாகிய அளவிறந்த பிரமாக்களும், அச்சிருஷ்டியைப் பாதுகாக்கின்ற அளவிறந்த விஷ்ணுக்களும் தோன்றி மறைந்தார்கள். எமது மாயாசக்தி விசேஷத்தாற் செய்யப்பட்ட தாவர ஜங்கம சொரூபங்களும் அங்ஙனமாகவே ஆயின. நாம் மாத்திரம் இங்கு இடைவிடாது எழுந்தருளியிருக்கின்றோம். அதன்றி உனக்கு காக்ஷிதந்தருளிய இவ்விடம் பஞ்சநதக்ஷேத்திரமெனவும், ஜெப்பியேச்சுரமெனவும் உலகம் போற்றிவாழ விளங்கும். ஆகையால் இங்குள்ள நமதாலயம் மிகச்சீர்ணமாயிருப்பதால் அதனை ஜீர்ணோத்தாரணஞ்செய்து சிவலோகப் பேற்றினைப்பெற்று உய்யக் கடவாயென்று திருவாய்மலர்ந்தருளி மகாலிங்கத்திலுள்ளே மறைந்தருளினார். அங்ஙனமாகப் பிரிய விரதமகாராஜன் மகத்தான சந்தோஷத்தால் பரம்பொருளின் திருவருட் பெருக்கத்தை வியந்து ஆனந்தக்கண்ணீர் பெருக இரண்டுகைகளையும் சிரத்தின் மேற்குவித்த வண்ணமாய் எம்பெருமான் திருவருட் குறியாகிய சிவலிங்க மூர்த்தத்தின் அருகு செல்லவே ஆங்கு பதினொருலக்ஷத்தைந்தடி குளி எழுந்த தேஜோமயமான மிக வொடுங்கி மூன்று ரேகையுடனும் அனேக ஆவரணங்களுடனும் உருக்கிப்புடமிட்ட தங்கம் பொலொளிவிட்டு நிற்கும் அச்சிவலிங்கத்திலுள்ளே அடங்குந்தன்மையையும் ஆவரணங்கடோறும் பிரமவிஷ்ணுவாதி தேவர்களையும், தூர்வாசர் கௌதமர் சநாதநர், நதிசி, வசிட்டர் முதலான மகரிஷிகளையும், மற்றுமுள்ள உலகமனைத்தையுங்கண்டு சாஷ்டாங்கமாய் வீழ்ந்து பணிந்தெழுந்து சிவாக்ஞையின்படி உடனே சுவர்ணத்தினால் ஆல

யத்திருப்பணியும், ஆபரணாதி முதலிய மற்றுமுள்ள சவரத்னங்களா லும் செய்வித்து அளவிறந்த கிராமங்களையும் திரவியங்களையும் எம்பெருமானுக்கெனவாக்கி ஆலயத்திலும் வீதிகளிலும் திருவிளக் கிட்டு வேத பாராயணத்துடன் உத்சவ நடாத்தியும் மறைகளில் ருத் திராத்தியாயத்திற் கூறியவாறு சிவ சந்நிதானத்தினின்று ஸ்தோத் திரஞ் செய்து நிற்க செம்பொற்சோதீஸ்வரப்பெருமான் அறம்வளர்த் தநாயகியார், விநாயகப்பெருமான், ஷண்முகப்பெருமான் இவர் கள் இருமருங்கும் விளங்க ரிஷபாரூடராய் அன்னவனுக்குக் காக்ஷி தந்தருளி ஏ பிரியவிரதனே! உனக்கு வேண்டும் வரங்களை கேட்கக் கடவாயென்று திருவாய்மலர்ந்தருள பிரியவிரதன் பரமசிவனின் திருக்கோலக் காக்ஷியைக்கண்டு தன்னை மறந்தவனாய் அடியற்ற மரம் போற் பூமியில் வீழ்ந்து பன்முறை பணிந்தெழுந்து அஞ்சலியோடு எம்பெருமானே! அடியேன் உனது சரண நிழலில் என்று நீங் காது வாழும் பெரும்பேற்றினையளித்தருளுவதோடு இத்தலத்தின் நாமத்தை நாவினுலுச் சரித்தாரும் முத்திப்பேற்றினையடைத் தாய்ப மாறு வரந்தந்தருளல் வேண்டுமென்று கேட்டுக்கொள்ள சிவபெரு மான் அங்ஙனமே தந்தனம் எனத் திருவாய்மலர்ந்து மறைந்தருளி னர். ஏ மகரிஷிகாள்! திருவையாற்றினிடத்தே உள்ள சிவாலயம் அனேக கற்பத்திலும் அழியாது விளங்குந் தன்மையையுடையது. அது உற்பத்தியாகிய காலம் எவரும் அறியார் தெரிந்துகொள்ளக் கடவீர்களெனச் சூதபுராணிகர் ஆலய வரலாறுரைத்த சரித்தி ரத்தை பூர்த்தி செய்து நாதசன்மாவுக்குக் காக்ஷிதந்தருளிய சரித்தி ரத்தை கூறுவான் புகுந்தனர்.

பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ௰௮-வது நாதசன்மாவுக்கு சிவபிரான் காக்ஷிதந்தருளிய அத்தியாயம்.

---

மகத்தான தவவொழுக்கத்தையுடைய ரிஷிகள்! கேட்கக்கடவீர் கள். நாதசன்மாவானவர் ஓர் தினத்தில் நிமைகளனைத்தும் அதிகரித் தோங்கும் கலியுகத்தில் வருணாச்சிரமதருமம், ஆசாரம், அநுஷ்டானம், சந்தியாவந்தனம், காயத்திரிஜெபம், சிவராத்திரி, சோமவாரம், ஏகாதசி முதலிய விரதங்கள், பஞ்சமகா யக்ஞம், காலத்தில்



செய்யத்தக்க உபாசனம், சௌசம், ஆத்தாசமனம், நித்யத் து செய்யும் மலமூத்திராதி விசர்ச்சனம், விதிப்படிக்குச் செய்யும் ஸ்நா னம் இவைபோன்று இன்னும் அளவிறந்தன மனிதர்கள் அவசியம் செய்யவேண்டியதென வேதம் விதித்திருக்கும் கிரிகைகளைச் செய் யாதவர்கள் இம்மையில் பதிதத்தன்மையோடு பாபத்தையும் பெற்று மறுமையில் நரகக்காளியாகப் பெறுவார்கள். அங்ஙனமாகியவை கள் நீங்கப் பஞ்சநதக்ஷேத்திரம் சேர்ந்து காவேரிஸ்நானம் செய்து விபூதி ருத்திராக்ஷம் அணிந்து, நித்தியகர்மானுஷ்டானங்களையும் முடித்துக்கொண்டு பவித்திரபாணியாய் சங்கற்பம், க்ஷேத்திரதீர்த் தம், பிதிர்தர்ப்பணமும் முடித்தவர்களாய் பஞ்சாக்ஷர ஜெபத்துடன் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துட்சென்று தெரிச னம், ஸ்தோத்திரம், பிரதக்ஷணம், சிவநாமசங்கீர்த்தனம் முதலியவை களைச்செய்துகொண்டு ஆங்கு வசிப்பார்களாகில் அவை நிவர்த்தியாய மோக்ஷாநந்தத்தைப் பெறுவர் என்று கூறிய மறைமொழி சத் தியமாயின் இப்பொழுதே சிவபெருமான் பிரத்தியக்ஷமாகித் திருவை பாலிக்கக்கடவரெனக் கூறித் திருவருளை சிந்தித்துக்கொண்டு நிற்க, கருணையங்கடலுடனே ரிஷபாரூடராய் அன்னவர்க்குக் காக்ஷி தந் தருளி ஏ நாதசன்மா! நம் அவதாரமாகிய நீ கூறியவைகளனைத்தும் உண் மையேயாம். இதனைப் பொய்யெனக் கொள்வோர் எக்காலத்தும் மேன்மையுற்று வாழமாட்டார். இது சத்தியமாகும், இத்தலத்தி லேயே நீ வசிக்கக்கடவாயெனத் திருவாய்மலர்ந்து மகாலிங்கத்தி னுள்ளே மறைந்தருள நாதசன்மாவும் சிவாக்ஞையின்படி பஞ்சநத க்ஷேத்திரத்திலேயே வசித்து சவ்வாத்தியானம் செய்துகொண்டிருந் தனர். ஏ மகரிஷிகாள்! "மூத்தோர்சொல்வார்த்தையமிர்தம்" பெரி யோர் வாக்கியமாகிய சாஸ்திரங்களனைத்தும் உண்மையென்ற நீதி யதனைப்படி சாஸ்திரம் கூறியவனைத்தையும் உண்மையெனக் கடைப் பிடித்து அவ்வழியில் நடப்போர் எப்போதும மேன்மையே பெறு வர். இது நம்குருசாரியரின் ஆக்ஞையாம். நம்பக்கடவீர்களெனச் சூதபுராணிகர் நாதசன்மாவுக்கு சிவபிரான் காக்ஷிதந்தருளிய சரித் திரத்தைப் பூர்த்திசெய்து உன்னதத்தாதி வஸ்துக்களை உண்பதினால் வரும் பாபநிவர்த்தி கூறிய சரித்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தனர்.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## ௰அ-வது உண்ணத்தகாத வஸ்துக்களை உண்டதால் வந்த பாப விமோசனம் உரைத்த அத்தியாயம்.

நைமிசாரண்யவாசிகாள்! உலகில் ஜீவர்களுடைய ஆகாரத்துக்கென ஏர்ப்பட்டவஸ்துக்கள் பலவாயினும் உண்ணத்தக்கன இன்ன உண்ணத்தகாதன இவை என வேதம் விதித்திருக்கின்றபடியால் அதில் நிவர்த்திக்கத்தக்கதைக் கூறுகின்றேன் கேட்கக்கடவீர்கள். அவை என்னெனில் வெள்ளைப்பூண்டு, வெங்காயம், கத்திரிக்காய், முருங்கக்காய், சுரைக்காய், பீர்க்கங்காய், முள்ளங்கி, அத்திக்காய் மண்ணிலுண்டாகும் உப்பு, பன்றி, கழுதை, ஒட்டகம், யானை, காகம், பூனை இவைகள் முகர்தல், அல்லது உண்டமிச்சமாகிய பதார்த்தங்கள், முலைப்பால், கழுதைப்பால், பழய அன்னம், கன்சம்மந்தமான அன்னம், எலிப்புழுக்கை வீழ்ந்த அன்னம், நகத்தாற் கிள்ளிய பதார்த்தங்கள், வேர்வை வீழ்ந்த அன்னம், புனற்பாகம், தேங்காய்நீர், கன்றுபோட்டு பத்துநாளைக்குள் கறந்தபால், கன்றில்லாத பசுவின்பால், ஒட்டைப்பால், காராம்பசுவின் பால், ஆட்டுப்பால், யானை, குதிரையால் ஸ்பரிசிக்கப்பட்ட பதார்த்தங்கள், ஜாதியீனரால் தொட்டவஸ்துக்கள், ஜெனனமரணத் தீட்டுடையவர்கள் அன்னம், வீட்டுக்குத்தூரமான பெண்ணின் அநுமதியின்பேரில் சமைத்த அன்னம், உபநயனமில்லாதவருடைய அன்னம், சந்நியாசி தொட்ட அன்னம், தன்னில்லாதவன் அன்னம், ஜாதியீனரால் சமைக்கப்பட்ட அன்னம், வேதாத்தியாயனம் செய்யாதவன் அன்னம், வேதவிதிக்குப்புறம்பான நடையையுடையவர்கள் அன்னம், வேதாகமாதிகளை நிந்திப்பவர்கள் அன்னம் வருணாச்சிரம ஆசாரத்தை விட்டவன் அன்னம், நன்றிமறந்தவன் அன்னம், பெருவியாதியாளன் அன்னம், விபசாரஞ்செய்பவர்கள் அன்னம், கோட்சொல்லுகிறவன் அன்னம் சிரார்த்தஞ்செய்யாதவன் அன்னம், "புக்குவேட்டக் திரிலுண்ணும் புன்மையோர்மக்களுட்பதடி என்றுரைக்கும் வையமே" மாமியார் வீட்டிற்கிரமமீறி இருந்து உண்பவன் மனிதரிற் பதராவான் என்ற நீதிவசனப்படி மாமியார் வீட்டிலிருந்தேனும் அல்லது அவர்கள் பொருளாலேனும் சாப்பிடப்பட்டவன் அன்னம்மிகத்தரித்திரமுடையான் அன்னம், பெரியோர்களை நிந்திப்பவன், எவரையுந் தூஷிப்பவன், தாக்ஷிண்ணிய முடையவன், பாமதுஷ்டன் மரியாதை இல்லாதவன், புரோகிதன், தொழிற் செய்வோன், உலோபத்தன்மையுடையவன், தேவத்துரோக முடையவன், விபூதிருத்திராக்ஷம் அணியாதவன், பாகவதர்களை பேசகுறிசெய்தவன், "மண்மாகப்படப்புகம்" மண்ணைக்குற்ற முண்டாகப்புகும் என்ற மறைமொழிப்படி வேதம் விதிக்காத காம நீளிப்பவன் தாசி, வேசி, இவர்கள் முதலானவர்களுடைய அன்னத்தை உண்ணுதலும் பாபமாகும். ஆதலால் அந்நியன்னம் புசிப்போர் அவைகளால் வந்த பாபத்தைப் போக்கிப் புனிதராகவேண்டில் திருவையாற்றை அடைந்து காவேரிஸ்நானஞ்செய்து செம்பொற்சோதீஸ்வரப் பெருமான் சரணாரவிந்தத்தில் வீழ்ந்து பணிந்தெழுந்து ஜெபபீடேசுர மண்டபத்திலிருந்து குருநிராத்தியரத்தில் கூறிய மந்திரங்களை ஜெபிக்கும் முறைவழாது அகங்கிபாசம், கரும்பாசத்தோடு ஜெபித்து மரணபரியந்தம் வாழ்வார்களேல் அது சித்திக்கும். ஆதலால் தொள்ளாக் கடவீர்களென்னு கூறிமுடித்தப்பின்னும் ஓ மகரிஷிகாள் மேற்கூறி வந்தவற்றுள் சில இந்திரியங்களை நல்வழியிற் செலுத்தாதனவாயும், சில ரோகவுற்பத்திக்கு காரணமாயுள்ளனவும், சில ஒழுக்கக்குறைவைத் தரத்தக்கனவும், சில அசுத்தத்தன்மையைத் தரத்தக்கனவும், சில அறிவின் பெருக்கத்தை குறைக்கத்தக்கனவுமாகி மனிதர்கட்கு கேடுவிளைக்குந் தன்மையுடையதாதலின் ஆன்றோர் விலக்கத்தக்கது என்று ஏர்படுத்திவைத்தார்கள். ஆதலால் "உலக மென்பது உயர்ந்தோர் மாட்டே" என்ற உண்மை வசனப்படி நல்லறிவுடையோர் சாஸ்திரங் கூறியுள்ள அவைகளை அநுசரித்து நடந்து மேன்மையடைவர். அல்லாதார் கூறியவற்றிற்கெல்லாம் ஓர் குருட்டு நாயங்கள் கற்பித்துக்கெட்டுழலுவர். இது சத்தியமாகும் என்று உண்ணத்தகாததை உண்டதால் வரும் பாபவிமோசனம் உரைத்த அத்தியாயத்தை பூர்த்திசெய்து விரசநாமவேதியன் முத்தி அடைந்த சரித்திரத்தைக் கூறுவான் புகுந்தனர்.

௰அ-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## ௰௯-வது விரசநாமவேதியன் முத்தி அடைந்த அத்தியாயம்.

மகரிஷிகாள்! கேட்கக்கடவீர்கள் முன்னொரு காலத்தில் காம்போஜநகரத்தில் பிறந்து வேதவேதாங்கம் யாவற்றையும் கற்றுணர்ந்து மகாவிரத சீலனாய் விளங்கிய விரசனென்னும் பிராமணனுக்

தமன் தீர்த்தயாத்திரையாகப் புறப்பட்டு அநேக தீர்த்தாடனஞ்
செய்து காவேரிதீரமடைந்து ஸ்நானஞ்செய்து ஆங்காங்குள்ள சிவா
லய தெரிசனஞ் செய்துகொண்டு கடைசியாய் பஞ்சநதக்ஷேத்திரம்
வந்துசேர்ந்து ஸ்நான சந்தியாவந்தனாதி நித்தியகருமங்களை முடித்
துக்கொண்டவனாய் திருக்கோவிலுட்சென்று ஆங்கு தர்மசம்வர்த்
தனி சமேதமாய் அடியவர் உய்ந்து கடைத்தேறுமாறு திருக்கோலங்
கொண்டருளிய பிரணதார்த்திஹரேஸ்வரரை வணங்கி பூஜை முடித்து
தெற்குவாயிலுக்கு மேல்புறமாய் பர்ணசாலை ஒன்றமைத்துத் தன்
னில்லாளோடு வசித்துக்கொண்டிருந்தனன். அங்ஙனம் வசித்துக்
கொண்டு வருங்காலத்தில் துலாமாதப்பிரவேசமான அம்மாத முழு
வதும் காவேரியில் திரிகால ஸ்நானம் செய்தும், உபவாசமாயிருந்
தும் உருத்திர ஜபத்துடன் பஞ்சாக்ஷர மந்திரம் ஜெபித்தும்,
நாள் ஒன்றுக்கு நூறு பிரதக்ஷணம் செய்துவந்தும், மாதாந்தத்தில்,
* அகமருஷண ஸ்நானம், காயத்திரிஜெபம் ஔபாசனம் பிரம்மயக்
ஞம், சூரியோபாசனம் முதலிய கிரிகைகளைச் செய்து முடித்து எம்
பெருமான் சந்நிதானம் சேர்ந்தவனாய் ஈஸ்வர சரணாரவிந்தத்தில்
விழுந்து பணிந்தெழுந்து அஞ்சலியோடு கண்களில் ஆனந்தவெள்
ளம் பெருக திரிலோசனா, தேவதேவோத்தமா, காமதகனா, சிவசங்
கரா, அந்தகாந்தகா, ஓங்காராதிமந்திரசொரூபா, ஜெபசித்திகரா,
கிரியாகிரியப்பிரபஞ்சசொரூபா, ஞேயஞானஞாதுருசொரூபா,
சக்தியோஜாதாதிபஞ்சமுகாம்புஜா, பிரணதார்த்திஹரா, அம்பிகாபதே
எனப் பலவாறாய் தோத்திரம் செய்து நின்றுகொண்டிருக்கப் பரம
சிவன் மலையரையன் திருப்புத்திரியாகிய பார்வதிதேவியார் வாமபா
கத்தில் விளங்க நந்தி பிருங்கியாதி சிவகணங்களுடன் ரிஷபாரூட
ராய் அன்னவனுக்குக் காக்ஷி தந்தருளி ஏ பிராமண சிரேஷ்டா,
உனது பக்தி மிகுந்த ஸ்தோத்திரத்தால் மெத்த ஆனந்தமடைந்
தோம், வேண்டும் வரங்களைக் கேட்கக்கடவாயென்னத் திருவாய்ம
லர்ந்தருள, பிரமோத்தமன் கருணைக்கடலின் அருள் நிறைந்த
சரணபங்கயங்களில் வீழ்ந்தெழுந்து எவனை அடிமைகொண்டாளக்
காக்ஷி தந்தருளிய தேவதேவோத்தமா! நாயினேன் காஞ்சிமாநகரத்
தை விட்டு இங்கு வந்து வசித்து உன் சரண சேவைக்காளாய் விளங்

* அகமருஷண ஸ்நானம்—ஜலத்தின் உள்ளிருந்து பஞ்சாக்ஷரஜெபம் 108-முடித்துப் பின்னர் செய்யும் ஸ்நானம்.



கியபிறகு அங்கு செல்ல மனமில்லாதவனாய் இருந்தும் ஆங்குள்ள
கம்பா நதியைத் தெரிசிக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிருக்
கின்றபடியால் அதனைத் தேவரீர் இங்கு வரவழைத்துத் தந்தருளுவ
தோடு சற்புத்திரப்பேற்றினையும், மரணபரியந்தம் இத்தலத்தைவிட்டு
நீங்காதிருக்கும் எண்ணத்தையும், மரணாந்தத்தில் உனது சரண நிழ
லில் வாழும் பெரும்பேற்றினையும் கொடுத்தருளல் வேண்டுமென்று
விண்ணப்பித்து நிற்க பஞ்சநதீசப்பெருமான் அங்ஙனமே அன்னவ
னுக்கு வரந்தந்து மகாலிங்கத்தினுள்ளே மறைந்தருளினார். அவ்
வாறாகவே பிராமணனும் ஈஸ்வர ஆக்ஞையின்படி ஆங்கு வந்த கம்
பாநதியில் ஸ்நானஞ்செய்து ஓர் புத்திரனைப்பெற்று அன்னவனுக்கு
பிரணதார்த்திகரன் என்று நாமமிட்டு நெடுநாளிருந்து சிவலோகம்
அடைந்தனன். எம்பெருமான் ஆக்ஞையின்படி பூமியின் வழியாக
வந்த கம்பாநதி பரமேஸ்வரி எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்கு
வடக்கில் அமர்ந்து தன்னிடத்துப் படிவோர் பாவத்தைப்போக்கி
முத்தி அளிக்கும் தன்மையோடு விளங்கிக்கொண்டு இருக்கின்றது.
மகரிஷிகாள் அறிந்துகொள்ளக்கடவீர்களெனச் சூதபுராணிகர் விரச
நாமவேதியன் முத்தி அடைந்த சரித்திரத்தை பூர்த்திசெய்து ததீசி
முதலிய மகரிஷிகள் முத்தி அடைந்த சரித்திரத்தைக் கூறலானா
புகுந்தனர்.

பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

## ௨௰-வது ததீசி முதலிய மகரிஷிகள் முத்தியடைந்த அத்தியாயம்.

ரிஷிசிரேஷ்டர்காள்! கேட்கக்கடவீர்கள் முன்னொரு காலத்
தில் சிவபெருமானது சரணாரவிந்தத்தில் நிறைந்த பக்தியுடையாரும்
விபூதி ருத்திராக்ஷதாரும், வேதவேதாங்க பாரங்கதரும், பஞ்சாக்ஷர
ஜபத்தியானபரரும், ருத்திரபாராயணம் செய்பவருமான ததீசி முத
லான மகரிஷிகள் இமயமலைச்சாரலிலிருந்து ஜீவன்முத்தியைத் தரத்
தக்க தலம் இன்னதென்பதை அறியவேண்டி சிவபெருமானைக்குறி
த்து தபசு செய்தார்கள், அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாக
மகரிஷிகள் எழுந்து நமஸ்காரம் செய்து, தேவதேவா! முத்திதான
மாயுள்ள சிவஸ்தலத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென விண்
ணப்பித்து நிற்க, பரமசிவன் அன்னவர்களை நோக்கி பக்தியுடையீர்!

யாகம் தபசு ஜபம் சித்திக்கத்தக்கதாம், கௌதமர் - துர்வாசர் - சநந்தர் முதலான மகரிஷிகளும், பிரம விஷ்ணுக்களும், யக்ஷகின்னர - கிம்புருட - வித்தியாதர - கந்தர்வ - சித்தசாத்தியசாரண - அப்சரசு முதலானவர்களும் தவசித்தி அடைந்ததுமாயுமுள்ளது பஞ்சநதக்ஷேத்திரமாகும், ஆகையால் அங்கு சென்று தபம்புரிவீர்களாகில் முத்தி சித்திக்குமென்று திருவாய்மலர்ந்து மறைந்தருள மகரிஷிகள் இமய பருவதச்சாரலை விட்டுப் பஞ்சநதத்தையடைந்து, காவேரிநதியில் ஸ்நானம் செய்து, ஜாபால உபநிஷத்திற் சொல்லியபடி விபூதி ருத்திராக்ஷம் தரித்து ஆலயம் வந்து ஜப்பியேசுவர மண்டபத்தில் நூறு வருஷகாலமிருந்து, சிவபூஜா துரந்தரர்களாகித் தவம் செய்தார்கள். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி ஏ மகரிஷிகாள்! உங்கள் தவத்தால் ஆனந்தமடைந்தோம். மற்ற ஸ்தலத்தில் அநேககோடி கற்பகாலமிருந்து செய்தாலும் சித்தியாகாத தபசு; இந்த ஸ்தலத்தில் கணப்பொழுது செய்யினும் சித்தியாகும். அப்படிக்கில்லாமல் நூறு வருஷ காலமிருந்து தவஞ்செய்தமையால் நீங்கள் மோக்ஷம் அடைவதற்கையமில்லையென்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தருள மகரிஷிகள் அநேக காலம்வசித்துச் சித்தி முத்திகளை அடைந்தார்கள். அறிந்துகொள்ளக் கடவீர்களெனச் சூதபுராணிகர் அத்திரி முதலிய மகரிஷிகள் முத்தி அடைந்த சரித்திரத்தைப் பூர்த்திசெய்து பிரணதார்த்திஹரநாமம் வந்த சரித்திரத்தைக் கூறுவான் துடங்கினர்.

௨௰-வது அத்தியாயம் முற்றிற்று.

## ௨௧-வது பிரணதார்த்திஹரரென்ற பேர் வந்த காரண முரைத்த அத்தியாயம்.

கிருதயுகத்தில் எல்லாச் சாஸ்திரங்களையுங் கற்றவனுஞ் சகல மந்திரார்த்தங்களுந் தெரிந்தவனும், வேதாநுஷ்டானந்தவறாதவனுமான *சிவசன்மனென்று பிராமணன் க்ஷயரோகத்தாற் பீடிக்கப்பட்டுக் கர்மகாண்ட விதிப்படி அநேக தருமங்களைச் செய்தும், நிவர்த்தியாகாமல் மிருத்யுவிசனத்துடன் பஞ்சநதஸ்தலமடைந்து, கௌதம நந்தனரான சுதாநந்தரைக் கண்டு, நமஸ்கரித்துச் சுவாமின்! நான் வெகு நாளாக வியாதியால் வருத்தமடைந்து, கர்மகாண்ட விதிப்படிய அநேக தர்மங்கள் செய்தும், அது நிவர்த்தியாகவில்லை தேவரீர் என்மேற் கிருபைசெய்து, இதுநிவர்த்திக்கு ஓர் வழிசொல்லவேண்டு



மென்றான். சுதாநந்தர் ஞானதிருஷ்டியால் அவன் பூர்வகருமத்தைத் தெரிந்து, சிவசன்மனே! நீ பூர்வஜென்மத்திற் குரிய கிரகணபுண்ணிய காலத்தில் ஒரு வண்டி தானியம் தானமாகத் தருகின்றேனென்றோர் பிராமணனுக்குச் சொல்லிப்பின் கொடாததனால் பிரமகத்தி பாவத்துக்கிணையான இந்த க்ஷயரோகம் வந்தது. இது உன்னை நின்று சென்மவரையில் விடாது. ஆகையால் இப்பொழுதே சிவாராதனமும், தினமொன்றுக்குப் பிரணவத்துடன் பதினாயிரம் பஞ்சாக்ஷரசெபமும், நூறு விதிப்பிரதக்ஷணமும், ஆயிரம் நமஸ்காரமும், இந்த க்ஷேத்திரத்தில் நீ செய்தால், வியாதி நீங்குமென்று சொல்லியருளினர். சிவசன்மன் தன் குருவாகிய சுதாநந்தர் சொல்லியவாறே ஓர் மாதம் வரையிற்செய்து; கடைசிநாள் இராத்திரி நித்திரைசெய்கின்ற சமயத்தில் சிவசன்மனருகிற் சிவபெருமான் சந்நியாசியாக வந்து, கையில் விபூதி எடுத்துச் சிரமுதற் பாதம்வரையிலுந் தடவி திருவடி தீக்ஷை செய்து மறைந்தருளினர். சிவசன்மா விபூதி தடவுங்காலத்தில் அறியாமல் தீக்ஷை செய்யுங்காலத்தில் விழித்தெழுந்து, சரீரத்தில் ரோகமில்லாமல் தங்கம்போலிருப்பதைக் கண்டு, ஆச்சரியமடைந்து வந்தவர் பரமசிவனேயென்று தெளிந்து, ஆலயமடைந்து, வேதங்களாலும் ஸ்மிருதி புராணங்களாலும் தோத்திரஞ்செய்து, பிரணதார்த்திகரனே! கிருபைசெய்தல்வேண்டுமென்று விண்ணப்பித்ததிற்கு, உடனே பரமசிவன் பிரசன்னமாகிச்சிவசன்மனே! சென்ற இரவுசந்நியாசிவேடமாகவந்து விபூதிதடவித் திருவடிதீக்ஷை செய்தது யாமே; உன்னுற் பிரணதார்த்திகரனென்றழைத்த பெயரை இந்த ஸ்தலத்தில் யாம் தரித்து அந்த நாமத்தினல் எம்மை யழைக்கின்றவர்கள் பாபநாசஞ்செய்வோம், நீ இந்த ஸ்தலத்திற் சுகமாய் வசிப்பாயென்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். அதன் பின் சிவசன்மா திருவையாற்றிலேயே நெடுங்காலமிருந்து, மரணமடைந்து, சிவலோகமடைந்தனன்.

௨௧-வது அத்தியாயம் முற்றிற்று.

## ௨௨-வது சர்வவிஜயனை வதைத்த அத்தியாயம்.

இரணியாசுரன் பேரனும், பிரகலாதன் புத்திரனுமான சர்வ விஜயனென்னும் அரசன் தான் எல்லா உலகத்திற்கும் அதிபதியாதல் வேண்டுமென்று, இமயபருவதச்சாரலிலிருந்து [illegible] தவஞ்செய்யாநிற்க, பிரமதேவன் அவன் தவத்திற்கிரங்கி அம்சா

னுக்குப் பிரசன்னமாக, உடனே அவ்வசுரனெழுந்து நமஸ்க
ரித்துநின்று சுவாமின்! பதினன்கு உலகங்களிலுமுள்ளவர்களாலும்
நான் அபஜெயமடையாத வரம் தரவேண்டுமென்றனன். அவ்வாறே
தந்தோமென்று சொல்லிப் பிரமதேவன் மறைந்தார். உடனே
இமயபருவதத்தைவிட்டுத் தன்னகரத்தையடைந்து, சொர்க்கலோ
கத்தை ஜெயிக்கவேண்டுமென்று தன் மந்திரிகளுடனுலோசித்துப்
பதினுயிரலக்ஷம் யானை, கோடிலக்ஷங்குதிரை, கோடிலக்ஷந்தேர்,
கோடிலக்ஷம்பதாதியுடன் புறப்பட்டு இந்திரலோகமடைந்து நான்கு
வாயிலிலும் வளைந்துகொண்டனன். அதை இந்திரனறிந்து தன்
சேனைகளுடன் யுத்தத்திற்குவந்துசேர இருதிறச்சேனைகளுங்கலந்து
போர்செய்யும்போது, சர்வஜெயன் குந்தாயுதமெடுத்துத்தேவகூட்
டத்திற்குட்புகுந்து, அடிக்கவே. அதற்காற்று மற்றேவர்கள் இந்தி
ரனை நோக்கி முறையிட்டார்கள். இந்திரன் அக்கினியை நோக்கி
அக்கினி தேவா! நீ சீக்கிரம் கவசம் பூண்டு, இரதமேறிச் சென்று,
சர்வஜெயனை யுத்தத்திற் செயித்துவருவாய் என்று சொல்லினன்.
உடனே அக்கினி தேவன் இரதமேறி யுத்தகளத்திற் சென்று சூலா
யுதத்தை எடுத்துப் பதினுயிரமசுரர்களைக் கொன்று சர்வஜெயனுக்
கெதிர்போகும்பொழுது, சர்வஜெயன் கண்டு ஒரு கதாயுதத்தை
யெடுத்து, அக்கினி தேவன் றலையிற்றாக்கினன். தாக்கினவுடனே
அக்கினிதேவன் வாயால் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு, பூமியில்
விழுந்து மரணமூர்ச்சை அடைந்தனன். உடனே அசுரன் தேவர்
கூட்டத்துட் புகுந்து யுத்தஞ்செய்ய, அதைச் சகிக்கமுடியாமல்
தேவர்கள் முறையிட்டார்கள். அதை இந்திரன் கேட்டு வாயுவை
நோக்கி நீ அசுரனைச் சம்மாரஞ்செய்துவாவென்றான். வாயுதேவன்
சுழிக்காற்றைப்போற் போர்க்களத்தினுட் புகுந்து, ஐயாயிரம் அசு
ரர்களைக்கொன்று திரிகின்ற சமயத்தில் அசுரன் வாயுவைச் சக்கிரா
யுதத்தாலடிக்க, வாயு தேவன் மனநொந்தோடிப் போய்விட்டான்;
அதன் பின் எமனை அனுப்பினன். எமன் புகுந்து யுத்தம் பண்
ணுங்காலையில் அசுரன் இருப்புலக்கையைச்சுழற்றியடிக்க அதற்காற்
றுமல் எமன் ஓடி ஒளித்தான். அதன்பின் வருணனையனுப்பினன்.
வருணன் வந்து யுத்தஞ் செய்யும்பொழுது அசுரன் தண்டாயுதத்
தாலடிக்க அதற்காற்றுமற் சமுத்திரத்துளோடியொளித்தான். அதன்
பின் இந்திரன், குபேரன், அஷ்டவசுக்கள், சப்தமருத்துக்கள்,
கெந்தருவர் முதலான அநேகர்களைக் கூட்டமாகவனுப்ப அவர்கள்
வந்து யுத்தத்தினுட் புகுந்து யுத்தம் பண்ணவே அசுரன் தன்



சேனை குறைந்ததைக் கண்டு, அதிக கோபத்துடன் உலக்கையைக்
கையிலெடுத்துக் கிறுகிறென்று சுழற்றியடித்தான். அதைப் பொ
றுக்கமுடியாமல் வந்தவர்கள் திசைகடோறு மோடி யொளித்
தார்கள்; பின் தேவேந்திரன் ஏகனாக நிற்பதையசுரன் கண்டு இந்
திரன் சமீபத்திற் போயினன். போனவுடன் இந்திரன் வச்சிர
பாணியாக ஐராவதத்தின்மேல் அநேகமசுரர்களைக் கொன்று, தன்
கையிலிருந்த வச்சிராயுதத்தால் அசுரன்றலையிற்புடைக்க, அந்த
அடியினுற் சர்வஜெயன் இரண்டு நாழிகையளவு மூர்ச்சையடைந்து
பூமியிற் கிடந்து பின்னெழுந்து கையை மடித்து இந்திரன் மார்பிற்
குத்தினன். குத்தினவுடன் இந்திரன் யானையினின்றுங் கீழே விழு
ந்து காயமடைந்து மூர்ச்சையடைந்தான். அத்தருணத்தில்
மாதலியாகிய சாரதி மறைந்து இந்திரனைத்தூக்கிக்கொண்டு அமரா
வதியடைந்தான். அப்பொழுதே சர்வஜெயன் அமராவதிப்பட்
டணத்துட் புகுந்து, தேவமாதர்களைச் சிறைபிடித்ததோடு காம
தேனு கற்பகவிருக்ஷமுதலான இந்திரன் செல்வங்களையெல்லாங்
கொள்ளையடித்துக்கொண்டு தன் நகரமாகிய இரணியபுரத்தையடை
ந்தனன். இந்திரன் இறந்தவர்கள் போக இருந்தவர்களோடு சத்திய
லோகத்தையடைந்துத் தேவருலகம் பாழாய்ப்போயிற்று. சத்தியலோ
கத்தையடைந்த இந்திரன், தக்ஷப்பிரஜாபதி, நாரதர், சனகர், சனந்
னர், சனற்குமாரர், சனற்சுஜாதர் முதலான யோகிகள் புடைசூழ
சரஸ்வதி சமேதராக வீற்றிருக்கும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம
தேவனைக் கண்டு நமஸ்கரித்தெழுந்து நின்று கமலாசனு! சுவா
மின்! பிரகலாதன் புத்திரனை சர்வஜெயன் தாங்கள் கொடுத்த
வரத்தின் பலத்தால் மிகுந்த கருவங்கொண்டு; தேவர்கள், பிரா
மணர்கள், மகரிஷிகள் முதலான பெரியோர்களுக்குச் சகிக்கமுடி
யாத விக்கினஞ் செய்வதுந்தவிர என்னையும் அமராவதிப் பட்டணத்
தைவிட்டுத் துரத்திவிட்டான்; நான் வசிப்பதற்கோ இடமில்லை, அடி
யேனை ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதைக்
கேட்ட பிரமதேவர் இந்திரன் முதலான தேவர்களைப் பார்த்து பூமி
யிற் பஞ்சநதமென்கின்ற சிவக்ஷேத்திரமிருக்கின்றது. அதில் வசிப்
பவர்களுக்குச் சர்வ சத்துருநாசமும், சகலரோகநிவாரணமும், சம்
சாரபந்த நிவர்த்தியும், ஜென்மமரணத்தால் வருந்துக்கமும் நிவர்த்தி
யாகும். அன்றியும் பரமசிவன் காலபைரவராற்றுஷ்ட நிக்கிரகஞ்
செய்தருளுவர். அசுரர், இராக்ஷதர், பிசாசு, துஷ்டக்கிரகங்களும்,
அந்த இடத்திலணுகமாட்டாது. ஆகையால், அந்த க்ஷேத்திரத்தில்

தேவரோடு, நீ வசிப்பாயேல் அதையறிந்து சர்வவிஜயன் அங்கு வந்து அநாசாரஞ் செய்ய ஆரம்பித்து காலபைரவரால் மரணத்தை யடைவானென்று திருவாய்மலர்ந்தருள, அதைக் கேட்டுக்கொண்டு இந்திரன் தேவரோடு திருவையாற்றையடைந்து, சிவபூஜாதுரந்தர னாக ஸ்ரீருத்திரத்தால் ஸ்தோத்திரஞ்செய்து நிற்க, பரமசிவன் பிர சன்னமாகி, இந்திரனே; நீ பயமடையாதே; இந்த ஸ்தலத்தில் பாவிக ளாகிய விருகநங்களுக்குக் கோட்டியாய் நமது ஸ்வரூபமாகிய காலபை ரவனிருக்கிறபடியால் அவனால் சர்வவிஜயன் மரணமடைவானென்று சொல்லி மறைந்தருளினார். பிரமதேவர், இந்திரன், பஞ்சநதத்தை யடைந்தபின் நாரதரை நோக்கி நாரதரே! நீர் நித்ய பாதாளலோகத்துக் குப் போவதுபோல் பூமியையடைந்து, சர்வவிஜயனைக்கண்டு இந்தி ரன் பஞ்சநதத்திலிருக்கின்றானென்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்குச் சர்வவிஜயன் போகும்படி செய்யவாருமென்றார். அவ்வண்ணமே நாரதர் பூமியில்வந்து அநேக தெய்வ நதிகளில் ஸ்நானஞ்செய்து, திருவையாற்றை யடைந்து பரமசிவனை தெரிசித்து, ஸ்தோத்திரம் பண்ணினார். அப்பொழுது பரமசிவன் பிரசன்னமாகி நாரதா! உன க்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக்கொள்வாயென்றும், நாரதர் ஐயனே! தேவரீர் பாததெரிசனத்தையன்றி அடியேனுக்கு வே றொன்றும் வேண்டுவதில்லையென, பரமசிவன் அம்மையுடனிருந்தோ மென மறைந்தருளினார். நாரதர் திருக்கோயிலைவிட்டு வெளியில் வந்து, திருப்பழனத்தை யுத்திதரிசித்துப் போகுந்தருணத்தில் இந் திரன் நாரதரைக்கண்டு நாரதரே! அசுரரால் சொர்க்கத்தைவிட்டுப் பூமியில் வாசஞ்செய்வது எப்பொழுது நீங்குமென்று கேட்க, நாரதர் பயப்படாதே விரைவில் அசுரர்கள் நாசமடைவார்களென்று சொல் லித் திருப்பழனத்தை யடைந்து, ஆபத்சகாயரைத் தெரிசித்துத் திருச்சோற்றுத்துறையை யடைந்து, ஓதனேசுவரரைத் தெரிசித்து திருவேதிகுடியடைந்து, ஆதிவேதேசுவரரைத் தெரிசித்து, திருக் கண்டியூரையடைந்து, கண்டேசுவரரைத் தெரிசித்துத் திருப்பூந்துருத் தியையடைந்து புஷ்பவனேசுவரரைத் தெரிசித்துத் திருநெய்த்தான மடைந்து, கிருதஸ்தானேசுவரரைத் தெரிசித்து திருவானைக்காவை யடைந்து, செம்புநாதரைத் தெரிசித்துத் திருச்சிராமலையையடைந்து, தாயுமானவரை தெரிசித்துப் பிறகு திரும்பிச் சுவாமிமலையையடை ந்து, ஸ்வாமிநாதரைத் தெரிசித்து, கும்பகோணமடைந்து, கும்பேசு வரரையும், உமாபதீசுவரரையுஞ் சோமநாதரையுந் தெரிசித்து, மத்தியார்ச்சுனத்தையடைந்து மகாலிங்கேசுவரரைத் தெரிசித்து,



இராமலிங்கத்தை தெரிசிக்கவேண்டுமென்று, இராமேசுவரத்துக் குச் சமீபத்தில் போகையில் சர்வவிஜயனைக்கண்டு தான் அவனருகில் போய்ச் சர்வவிஜயனே! நீ எங்குசெல்கின்றாயென்று கேட்டார். கேட்டவுடன், நாரதரை நமஸ்கரித்து என் சத்துருவாகிய இந்திர னோடு தேவர்களையுந் தேடிப்போகின்றேனென்று சொல்லுகிறான். அதைக்கேட்டு நாரதர் புன்னகைகொண்டு அசுரனே தேவர்கள் திருவையாற்றில் காலபைரவர் காவலால் நிர்ப்பயங்கரராக வசிக் கின்றார்கள். நீ அவ்விடம் போனால் உன் பாக்கியத்தைக்கண்டு, கால பைரவர் ஓடிப்போவார். சீக்கிரமங்குபோவாயென்று சொல்லி, இராமநாதரைத் தெரிசித்து, அசுரன்பஞ்சநதத்தை யடைவதற்கு முன் தான் பஞ்சநதத்தையடைந்து, பரமசிவனை ஸ்தோத்திரத்தாற் பிரத்தியக்ஷமாக வரவழைத்து, சுவாமின்! சர்வவிஜயன் இவ்விடத் திற்றேவர்களிருக்கின்றார்களென்று மிகுந்த கோபத்துடன் வருகி ன்றான். அவனைக்கொன்று தேவர்களைக் காத்தருளவேண்டுமென்று விண்ணப்பித்துநிற்க பரமசிவன் நாரதா! உன்னுடைய வேண்டுதலின் படி அவனைக்கொன்று தேவர்களைக் காத்தருள்வோமென்று திரு வாய்மலர்ந்து காலபைரவரையழைத்து, பைரவா! சர்வவிஜயனென் னும் அசுரன் தேவர்களைக்கொல்ல இங்குவருகின்றான். அவனைக்கொ ன்று தேவர்களை ரக்ஷிக்கக்கடவாயென்று சொல்லி மறைந்தார். அதன்பின், சர்வவிஜயன் இலக்ஷங்கோடி சேனையுடன் திருவையாற் றையடைந்து, நாலுபக்கமும் வளைந்து, அநேக பாணங்களை எடுத் துத் தேவர்கள்மேலும் பிராமணர்கள்மேலும் ரிஷிகள்மேலும் வரு ஷித்தான். அதைப் பொறுக்கமுடியாமல் காலபைரவரை நோக்கி முறையிட்டார்கள். காலபைரவர் சூலாயுதத்தைக் கையில் எடுத்துச் சுழற்றி அசுரர்சேனைமேல் விசினார். சூலமானது அசுரர் சேனையுட் புகுந்து இரண்டு கடிகைக்குள் சர்வவிஜயனோடு சேனைகளையும் கொ ன்று திரும்பியது. அதன்பின் இந்திரன் பரமசிவனை வணங்கி விடை பெற்றுத்தேவர்களோடு அமராவதிப்பட்டணம் அடைந்து வாழ்ந் திருந்தான்.

௨௨-வது அத்தியாயம் முற்றிற்று.

---

## ௨௩-வது சுசிரவேதியனுக்கு கலி நீங்கியதை உரைத்த அத்தியாயம்.

---

அனவத்தியாதேவி நாதசன்மாவை வணங்கி சுவாமின்! கலியின் சுபாவத்தையும் அதை நாசஞ்செய்யும் விதத்தையும் கூறியருள

வேண்டுமென்று கேட்க, நாதசன்மா பெண்ணே! நாலாவது யுகமா
கிய கலியுகத்தில் கோடி ஜனங்களில் ஒருவன் திரிகரணசுத்தியோடு
தருமஞ்செய்பவனாகியும், பெருமைக்குத் தருமஞ்செய்பவன் ஆயிரத்
திலொருவனாகியும், அவுபாசனம், சந்தியாவந்தனம், வேதாத்தியயனஞ்
செய்தல், தருமவானைக்கண்டருவருப்படைதல், விரதம், ஆசாரம், பாக்
கியம், குளம்வெட்டல் இவைகளை தடுத்தல்; பொறாமை, டம்பமிகுந்
தும் ஆசாரமாயிருத்தல், கொஞ்சம் வேதசாஸ்திரம் கற்ற கருவத்
தால் பாவம்செய்தல், கோட்சொல்லல், காரியம் முடியுமளவும்
பிறர்களுக்கவும் பந்துவாகவுமிருத்தல், சிராத்தத்தை விடுதல், பிதுர்
துரோகம், புத்திரதுரோகம், மனையாள்துரோகம், நாயகன்துரோ
கம், குருத்துரோகம், சிவத்துரோகம், நம்பிக்கைத்துரோகம், இர
ண்டாசௌசம்விடுத்தல், பிராமணர் சூத்திரர்கட்குத் தாசராயிருந்
தல், குதிரை, யானை, ரதமுடையவன், க்ஷத்திரியன், சண்டாளன்,
சூதகன், தூரமாதர், சாதிகெட்டவன், இவர்களைத் தொட்டு ஸ்நா
னம் செய்யாதிருத்தல், சங்குசக்கரத்தால் சூடுபடுதல், சங்குசக்கரச்
சின்னமுடையவர்களுடன் கலந்து விவாகம்செய்தல், அவர்களுடன்
கூடி அத்தியயனம் செய்தல், நான்தான் உயர்ந்தவனென்று சொல்
லல், அதர்ம இச்சையால் அற்பாயுளாகி மரணமடைதல், நான்கு
வருணத்தாருஞ்சங்கராசாரியாதல், காமக்குரோத அகங்காரத்தால்
வயிரமடைந்து பிறருக்கு வருத்தம்செய்தல், உத்தமர்கள் நீசராகு
தல், நீசர்கள் உத்தமராகுதல், அரசர்கள் திரவிய ஆசையடைந்து
தருமம் செய்வதுபோல் தருமத்திரவியத்தைக் கவர்தல், அபகாரம்
செய்து பிறருக்குக் கெடுதி விளைப்பவரோடு கலந்திருத்தல், ஆசார
மில்லாதவனையும், வேதங்கற்காதவனையும், சிராத்தத்தில் பிராமண
னாக வைத்தல், அப்படிப்பிராமணனுக்குக் கொடாதிருத்தல், குல
மாதர்கள் வேசிகளைப்போல் அலங்கரித்துக்கொள்ளல், ஓஷதிகள்
பலத்தைக் கொடாதிருத்தல், மேகங்கள் குறைவாகவருஷித்தல், பால்
நிமித்தமாக பசுவைப் பாலனம்செய்தல், க்ஷேத்திரங்களில் பயிரிடுதல்,
தருமத்திற்கும், மூடர்களுக்கும், சாதுக்களுக்கும், வித்வான்களுக்
கும், பாலர்களுக்கும் அபகாரம் செய்து திரவியம் சம்பாதித்தல்;
டம்பநிமித்தம் பிதிர் எக்கிய முதல் பஞ்ச எக்கியங்களும் சோமாதி
யாகங்களும் செய்து அபாத்திரருக்குத் தானங்கொடுத்தல், சவுசம்,
ஸ்நானம் விதிப்படி செய்யாதிருத்தல், அகாலத்தில் தருமஞ்செய்தல்,
குயுக்தியால் வேதநிந்தனை, விப்பிரநிந்தனை, எதிநிந்தனை, பதிவிரதா நி
ந்தனை, பரமசிவனிடத்தில் பக்தியில்லாமல் காட்டேரி, கருப்பன் முத



லான துர்த்தேவதைகளிடத்தில் பக்தி வைத்தல், தேவர்க் [illegible] செய்
தவரைப் பரிகாசம் செய்தல், இராஜசேவகர்கள் திர[illegible] நிமித்தம்
மனிதர்களை வதைப்படுத்தல், தானம், எக்கியம், ஜெபம் இவைக
ளால் வரும் பலனை விற்றல், சண்டாளனிடத்தில் வாங்கியுண்ணல்,
அத்திரான்னம் புசித்தல், தாசி விதவை இவர்களுடன் புணர்தல்,
மாதர்கள் கணவனை நிந்தித்தல், கடவுளை மறத்தல் முதலான கெடுதி
களுண்டாகும். அன்னமாக இந்தக் கலியுகத்தின் ஆதிகாலத்தில்
வேதவேதாங்க பாரங்கதனும், தர்மசாஸ்திர மர்மத்தை அறிந்தவ
னும், வருணாச்சிரமதருமம் தவறாதவனும், சிவத்தியானத்துடன் சிவ
பூஜாதுரந்தரனும், விபூதிருத்திராக்ஷதாரனும், பாவமில்லாதவனுமான
சுசிகரனென்னும் பிராமணன் இருந்தனன். அன்னவன் சிறுவனா
யிருந்தமடைந்த பின் கலிவாதை அதிகரித்து எந்தவிடங்களிலும்
பரவியிருப்பதைக் கண்டு இந்த யுகதர்மம் நம்மையும்பற்றி
நாசமடையச்செய்யும், ஆதலால் பரமசிவனைச் சரணமடைவோமென
ற்று தன்னிடம் விட்டுத் தீர்த்த யாத்திரை செய்வதாகப் புறப்பட்
டுப்போக, பின்னுக் கலிபுருஷன் கருநிறத்தையுடையவனாய்க் கையி
ற்றடியைப் பிடித்துக்கொண்டு அவனை அதட்டி வருவதைக்கண்டு
பயந்து பஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபித்தனன். [illegible] ஜெபம்
செய்தவுடன் கலிபுருஷன் மறைந்தான். மறைந்தவுடன் இன்னும் அவன்
நம்மைத் தொடர்ந்துவருவானோவென்று ஒரு விருக்ஷத்தினடியிலுட்
கார்ந்து திரும்பிப் பார்த்தான். பார்த்தபொழுது கெடுந்தூரத்தில்
கலிபுருஷன் வருவதைக் கண்டு கீழே விழுந்து மூர்ச்சையடைந்து
தெளிந்து முன் பஞ்சாக்ஷர மந்திரத்தால் மறைந்தவன் இப்பொ
ழுது கண்ணுக்குத் தோன்றுகின்றான். இன்னும் அந்தப் பஞ்சா
க்ஷர மந்திரத்தையே செபிப்போமென்று தியானத்துடன் செபிக்
கக் கலிபுருஷனைக் காணாது சந்தோஷமடைய அப்பொழுது ஆகா
யத்தில் ஓ பிராமணனே! கலிபுருஷனுன்னை எவ்விதத்திலும் பிடிப்
பான் ஆகையால் பஞ்சநத க்ஷேத்திரம் தவிர மற்றெல்லாவிடங்களி
லும் கலிபுருஷன் வியாபித்திருக்கின்றபடியால் நீ சீக்கிரத்தில் பஞ்
சநதத்தை அடைவாயென்று அசரீரியுண்டானது. உடனே பஞ்சா
க்ஷர ஜெபத்துடன் பஞ்சநதத்தையடைந்து - திரிகாலங் காவேரி
ஸ்நானம் செய்து வேதமாதாவாகிய காயத்திரி மந்திரத்தை ஆயிரத்
தெட்டுருச் செபிப்பதோடு பஞ்சாக்ஷர மந்திரமும் செபித்து பிரத
க்ஷண நமஸ்காரத்துடன் பஞ்சநதீசரைத்தெரிசித்து ருத்திரமந்திரத்
துடன் ருத்திராபிஷேகம்செய்து சதா ருத்திர மந்திரத்தாற் றோத்தி

ரம் செய்தனன். செய்யவே பரமசிவன் பிரசன்னமாக சுசிகரன் நமஸ்கரித்தெழுந்து நின்று சுவாமின்! என்னைக் கடையேறுமாறு கடாக்ஷித்தருளவேண்டுமென்ன சிவபெருமான் சுசிகரனே! எமபட்டத்தினுள்ள பயத்தால் கலிபுருஷன இந்த ஸ்தலத்தில் வரமாட்டான், அந்தப் பயமுனக்கில்லை. ஜபபியேசர்பதி, பஞ்சநதீசா, பிரணதார்த்திகரா! என்று நீ செபித்தாற் துற்சொப்பனம், அஷ்டக்கிரகம், பூதப்பிரேதப்பிசாசம், விஷம், அபிசாரம், தாரித்திரம், துன்பங்களிவைகள் நாசமாகும். அர்த்தோதயம் மகோதயம் சூரியசந்திர கிரகணம் இந்த நாட்களில் பஞ்சநத காவேரி ஸ்நானம் செய்பவர்கள் பாதிவ்ரியாபசாரம், இம்சை, பரதாரகமனம் முதலான காயிக பாதகத்தையும், கோட்சொல்லல், மாறுபட்டுப்பேசல், குரூரமாகச் சொல்லல், ஆனவாசிகபாதகத்தையும், பாதிவ்ரியத்தியாகம், பிறருக்கு கஷ்டத்தையெண்ணல், வீணக்கவலைப்படுதல், ஆன மானசிக பாதகத்தையும் போக்கிக் கோடி கோதானம் செய்த பலத்தையடைவார்கள். அன்றியும் காவேரி ஸ்நானம் கங்காநதியிலும் ஆறுபங்கு அதிகப் பலத்தையும் பூமிதான பலத்தையும் கொடுக்கும். பஞ்சநத க்ஷேத்திரத்தில் வஸ்திரம் தானியம், இரணியம், இவை முதலிய தானங்கள் செய்தவர்கள், ஆயுள்விருத்தி தனதானிய சம்பத்து புத்திர பௌத்திர சம்யுக்தராக அநேக சௌக்கியத்தையடைந்து, பரத்திற்சிவலோகசாயுச்சியத்தை அடைவார்கள். அவ்விடத்து வித்தியா தவசு விரதமுள்ள பிராமணன் புண்ணியகாலங்களில் தானபாத்திரனுவான். மகரசங்கிராந்தி முதலாகிய புண்ணிய காலங்களில் காவேரி ஸ்நானம் செய்து, நம்மை தெரிசித்தவர்கள் மோக்ஷமடைவது சத்தியம்; ஆதலால் நீ இந்த ஸ்தலத்தில் வசித்துப் புண்ணிய காலங்களில் காவேரி ஸ்நானம் செய்து, நம்மைத் தெரிசித்தால் மோக்ஷமடைவாயென்று பரமசிவன் சொல்லிமறைந்தருளினார். அவ்வண்ணமே சுசிகரன் மரணபரியந்தம் திருவையாற்றில் வசித்து மோக்ஷமடைந்தான்.

உ௩-வது அத்தியாயம் முற்றிற்று.

## உ௪-வது தருமநாசன் சாரூபபதவியை அடைந்த அத்தியாயம்.

திரேதாயுகத்தில் கோதாவரி தீரத்தில் முற்கலவம்சத்திற் பிறந்த தர்மநாசனென்ற பிராமணன் வருணாச்சிரம தர்மத்தை



விட்டு, விலக்கான காரியங்களைச் செய்து வந்தான். அவனுக்குத் தர்மசீலையாகவோர் புத்திரன் பிறக்க அப்புத்திரனுக்குத் தருமசீலனென்று பெயரிட்டுச் சாதகர்மமுதல் உபநயன பரியந்தம் வேதோக்தப்பிரகாரம் செய்வித்து, விவாகமுஞ் செய்வித்தான். பின் தருமசீலன் புண்ணியதீர்த்தங்களிலாடி ஞானிகளுடன் விவேகியென்றும் பிரசித்தியடைந்தான். அக்காலத்திலவன் தந்தையாகிய தருமநாசன் மிகோதர வியாதியாற் பீடிக்கப்பட்டுத் தனக்கு சீக்கிரத்தில் மரணம் நேருமென்று நிச்சயித்துப், புத்திரனை யழைத்துத் தருமசீலனே! நான் சிறுவயது முதல் வருணாச்சிரம தருமத்தை விட்டுப் பாவச்செய்திகளிற் பிரவேசித்துப் பாவஞ் செய்ததனால்; நரகமடைவேனென்று என் இருதயம் நடுங்குகின்றது. நான் நரகமடையாமற் செய்வதற்கு வழி யென்றனன். அதைக்கேட்ட தருமசீலன் ஐயா! பிதுர்வாக்கியத்தைப் பரிபாலனஞ்செய்யவேண்டியது புத்திரர் கடமையாதலால், நான் செய்யவேண்டியதைச் சொல்லவேண்டுமென்று கேட்க தருமநாசன் புத்திரன் சொல்லியதைக் கேட்டுச் சந்தோஷமடைந்து, தருமசீலனே! நான் மரணமடைந்தபின் என்னுடைய அஸ்தியை இராமசேதுவின் கடலில் போடுவதினால் எனக்குச் சுகம் கிடைக்குமென்றான். தருமசீலன் தகப்பனார் சொல்லியதை அவ்வாறே செய்கிறேனென்றனன். சில காலம் சென்றபின் மிகோதர வியாதியால் தருமநாசன் மரணமடைய அவன் மனைவியும் அநுமரணமடைந்தாள். தருமசீலன் தாய் தந்தையிருவருக்குந் தகனம் பண்ணி, அந்தியேஷ்டி முதல் சபிண்டீகரணம் வரையிலுஞ் செய்ததனிற வருஷாப்திகபரியந்தஞ் செய்யத்தக்க கருமங்களையுஞ் செய்து, இருவர் அஸ்தியையும் ஓர் பெட்டியில் வைத்துச் சேர்த்துக்கொண்டு சேதுவை யுத்தேசித்து, நியமத்துடன் புறப்பட்டு வருங்காலையிற் பஞ்சநதமடைந்து, சங்கற்ப பூர்வமாகக் காவேரிஸ்நானம், க்ஷேத்ரபிரார்த்தனை, தர்ப்பண முதலியவைகளுஞ் செய்து சிவாலயமடைந்து பிரணதார்த்திகரரைத் தெரிசித்துப் பிரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்திரத்துடன் பஞ்சாக்ஷரமந்திரத்தை செபித்து, அன்றையதினமுபவாசமிருந்து; மறுநாட்பாரணை செய்து, தன்னாத்மாவைக் கிருதார்த்தமாகவெண்ணி; ஸ்தலமான்மியத்தையுங் காவேரி மான்மியத்தையும் விசாரித்து அர்வசர்-கௌதமர்-துர்வாசர்-வசிஷ்டர் முதலான அறுகோடி மகரிஷிகளும், அநேகஞ் சந்நியாசிகளும், வானப்பிரஸ்தர்களும், பிரமசரிய ஆச்சிரமத்தார்களும், சோமயாகமுதல் மற்ற யாகங்களையுஞ் செய்துமுடித்த தீக்ஷிதர்களும் இங்கு தவசு செய்வ

கைக்கண்டு, *காமமிக்கத்தலத்திலொருமாதம் வசிப்பேனென்றொரு வீட்டில் அஸ்திப்பெட்டியை வைத்துச் சயம்பாகத்தாலேகவாரம் போசனஞ் செய்து, பஞ்சாக்ஷரசெபத்துடன் வசிக்கின்ற நாட்களில் ஓர் நாள் நித்திரை செய்கையில் சொப்பனத்திற்றன் பிதாவைச் சந்திரார்த்த சேகரனாகவும், சடாதாரியாகவும், முக்கண்ணனாகவும், விபூதிதரித்த சரீரமுள்ளவனாகவுங் கண்டு எழுந்து நமஸ்கரித்து நோக்கி என் ஐயனே! உனக்கிந்த சிவசொரூபம் வந்தகாரணத்தைச் சொல்லவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய தருமசேனன், நானிறந்தபின் எமதூதர்கள் இருப்புப் பாசங்களாற்கட்டி யெண்பத்தாறாயிரம் யோஜனை தூரமுள்ள பயங்கரமான எமமார்க்கத்திற் கொதித்த சேற்றிலும் கொதித்த மணலிலும், கல்லிலுமுள்ளிலும் முசலாயுதத்தாலடித்திழுத்தும், கல் மழையாலும் நெருப்பு மழையாலும் வாதைபடையச் செய்து பத்து நாட்சென்று பதினொராநாற் எமலோகத்திற்கருகே போகையிற் பாவிகளாற் கடக்கக்கூடாத வைதரணியென்று நெருப்பாற்றைக்கண்டேன். அதிலிறங்கென்று எமபடர்கள் சொன்னதைக்கேட்டுப் பயந்தேன்; உடனே எமதூதர்கள் என்னைப்பிடித்துத் தள்ளினார்கள்; நானதிலொருநாள் முழுதும் கிடந்து தத்தளித்தேன். பனிரெண்டாநாள் பசுவொன்று வந்து தருமராசனே! நீ வைதரணி நதியைத் தாண்டவேண்டி யுன் புத்திரனாற் பனிரெண்டாநாள் சவுண்டி காரணத்திற் சற்பிராமணனுக்குத் தானங்கொடுத்த பசு நான்; என்வாலை நீ பிடித்துக்கொண்டு, உன்னைக் கரையேற்றிவிடுவேனென்று சொல்லிற்று. அவ்வாறே நான் வாலைப்பற்றிக்கொண்டேன். உடனேயந்த வைதரணி நதி குளிர்ந்து முழங்காலளவானது. கரையேறினவுடனெமதூதர்களென்னை யெமன் முன்கொண்டுபோய் விட்டார்கள். எமன் என் பாவகர்மத்தைத் தெரிந்து, என்னை நரகத்திற் புதைக்கப் பண்ணிவைக்கும்படி யெமதூதர்களுக் குத்திரவு பண்ணினான். அப்படியே யெமதூதர்கள் நரகத்திலிருத்தினார்கள். நானதிலொருவருஷமிருந்து வாதையடைந்தேன். ஒருவருஷமானபின் நரகம் சுவர்க்கலோகம் போலானதுமன்றி இந்தச் சரீரத்தையும் அடைந்தேன். அடைந்தவுடன் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள் அப்பொழுது எமதூதர்களென்னருகில் வந்து நமஸ்காரஞ் செய்தெழுந்து, உருவிய கத்துடனின்று, பிராமணோத்தமனே! நீ தவசிஷ்டனைப் உன்னை நரகத்தினின்றும் வெளிப்படுத்தி மரியாதையாகத் தன்னிடமழைத்துவரும்படி யெமன் எங்களுக்குத்தரவுகொடுத்தார்; ஆகையால்



வந்தோமென்றார்கள். நானவர்களோடு எமனருகில் வந்தேன். வந்தவுடன் எமன் என்னைக் கண்டெழுந்து அர்க்கிய பாத்தியம் ஆசமன முதலான உபசாரத்துடன் நமஸ்காரஞ்செய்து பிராமணோத்தமனே! உன் புத்திரன் தருமசேனன் உன்னஸ்திகளை யெடுத்துக்கொண்டு சேதுக்குப் போனவன் திருவையாற்றிலொருமாதம் வசித்தான். அந்தவன் வசித்த புண்ணியத்தால் நரகவாதை நீங்கிவிட்டது; இனிச் சிவலோகமடைவாயென்று சொல்லியதோடு, உன் புத்திரனுக்கு நடந்தயாவுஞ் சொல்லவும் வேண்டுமென்றான். அதைக்கேட்டு நானிங்கு வந்தேன். நீ சேதுக்குப் போகவேண்டியதில்லை. யென்னைச் சிவலோகத்துக் கனுப்பும்போது எமன் தன் தூதர்களை யழைத்து, வேறெங்கேயாவது மரித்தவர்கள் தலையிராவது, அஸ்தியது சாம்பலாவது திருவையாற்றில் இரண்டு கடிகையளவு தங்குமாயின் அவர்கள் சிவலோக பதவியை அடைவார்கள்; அவர்களிடத்தில் நீங்கள் போகக்கூடாதென்று உத்தரவுகொடுத்தான். பார்வதி ரூபத்தைப் பெற்றஉன் தாயும் சிவரூபத்தைப்பெற்ற நானும் தேவ விமானத்திலேறிச் சிவலோகம் போகின்றோம். நீ சுகமாயிரு வாழ்வாயென்று ஆசீர்வதித்து மறைந்தான். தருமசேனன் நித்திரை தெளிந்தெழுந் தாச்சரியமடைந்து, காவேரிக்குப் போய் ஸ்நானம் பண்ணி - நித்தியகருமங்களை முடித்துச் சிவாலயமடைந்து, சிவதரிசனஞ்செய்து, அங்கெழுந்தருளியிருக்கின்ற மகரிஷிகளைத் தண்டு நமஸ்கரித்துத் தான் ராத்திரிக்கண்ட சொப்பனத்தைத் தெரிவித்தனன். அதைக்கேட்ட மகரிஷிகள் அச்சரியமடைந்து உடனே அவன் தாய் தந்தையின் அஸ்திவைக்கப்பட்டிருந்த பெட்டியைக் கொண்டுவரச்செய்து திறந்து பார்க்க அஸ்திகளெல்லாம் சிவசொரூபமாகக் காணப்பட்டு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே பெட்டியினின்று நீங்கி பஞ்சநதீசப்பெருமான் அருட்குறியாகிய சிவலிங்கத்தினிடத்தே லீனமாகலும் மகரிஷிகள் ஆச்சரியமடைந்து திருவருளை வியந்துகொண்டாட, தருமசேனனும் பெருமகிழ்வுற்று பஞ்சநதத்திற்றனே வாசஞ்செய்துகொண்டிருந்தனன். ஏ அனவத்தியா! அதிசயத்தைக் கேட்கக் கடவாயென்று நாரதர் சொல்லக்கேட்டு முடிந்ததும் அனவத்தியா தேவியானவள் மின்னரும் அன்னவனை வணங்கி சுவாமீ! ஒருவன் மகாபாபியாயிருப்பினும் அவன் மரணமடைந்தவுடன் அவன் பத்தினி அவளோடுகூடவே அனுமரணஞ் செய்வாளாயின் அன்னவன் பாபத்தினின்று நீங்கி மேலான பதவியைப் பெறுவானென்று சாஸ்திரங்கள் விதித்திருக்க இத்தரும

காசன் மாத்திரம் அவன் பத்தினி அநுமரணஞ் செய்திருந்து சுவர்க்க லோகத்தை அடைந்ததற்குக் காரணமென்ன அதனை முனிவரே கூறி யருளல் வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்ள சூதமா முனிவர் ஏ அனகர்களே! [illegible] கண்மணி! அச்சன் செய்துள்ள பாபத்துக்குப் பரிகாரம் [illegible] காலம் இடந்து வருந்தவேண்டியிருக்க அவன் பத்தினியின் அநுமரணமானது அக்கொடுமையை நீக்கி ஒரு வருஷ காலம் சிவலோகவாசம் புரியுமாறு செய்து சிவலோகத்தைத் தனக்கு மேன்மை பெறச் செய்தது. தெரிய [illegible] கடமையென்று கூறி முடித்தனர். ஏ மகரிஷிகாள் [illegible] கடவீர்களென்று சூதபுராணிகர் அச்சரித்திரத்தை பூர்த்தி செய்து சில மிருகங்கள் உத்தம ஜென்மத்தை அடைந்த சரித்திரத்தைக் கூறலானார்.

உ௰-வது அத்தியாயம் முற்றிற்று.

## உ௧-வது மிருகங்கள் உத்தம ஜென்மம் அடைந்த அத்தியாயம்.

முற்காலத்தில் அத்திரி மகரிஷியானவர் அக்ஷமாதன பர்வதத்தி னின் அடிவாரத்தில் தவஞ்செய்து வருங்கால் [illegible] செந்நெருங் [illegible] கடுவாய், மான், முள்ளம் பன்றி முதலிய நான்கு மிருகங்களும் [illegible] தங்கள் தங்கள் குலமுறை மனிதர் போலவே பேசிக்கொண்டிருக்க மகரிஷி யானவர் அதனைப் பார்த்து இவைகள் மிருகஜென்மமாக மனிதர்கள் போலப் பேசிக்கொண்டிருக்கும் காரணமென்ன வென்று அவைகளை நோக்கி வினவ அம்மிருகம் நான்கும் மகரிஷியின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி சுவாமின்! நாங்கள் பூர்வஜென்மத்தில் பிராமணர்களாகப் பிறந்து சகல சாஸ்திர பாண்டித்தியமுடையா ராயிருந்தும் குருபத்தினியைப் புணர்ந்த பாபத்தால் ஒருவன் கடுவாயாகவும், பிதுரப்பிராமணனுக்கு போஜனத்தியாகம் செய்து வைத்த பாபத்தால் மான் ஜென்மத்தையும், தாய் தந்தையரை அவமதித்து செய்த பாபத்தால், முள்ளம்பன்றி ஜென்மத்தையும், இவ்வாறாக விதித்த பாபத்தால் வருந்த ஜென்மத்தை யடைந்து வரீர புண்ணிய வசத்தால் மனிதருடன் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றோம். ஏ மகாமுநிசிரேஷ்டராகிய மகரிஷி! தேவரீர் அடியேங்கள் தரிசிக்கப் பெற்றமையால் இனியும் இம்மிருக



ஜென்மத்துடன் வருந்தாதிருக்க ஒருவழி காட்டியருளல் வேண்டுமென்று விண்ணப்பித்துநிற்க, அத்திரிமகரிஷியானவர் திருவுளமிரங்கி அவ் வகைகளுடன் கொண்டு திருவையாற்றையடைந்து அவைகளை கோபுர வாயிலின் அருகே இருக்கச்செய்து காவேரிஸ்நானஞ் செய்து செம் பொற்சோதியை வணங்கி தெரிசித்து வந்து தன் கமண்டலத்தில் நிறைந்துள்ள காவேரி தீர்த்தத்தை ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திர பூர்வ மாகப் புரோக்ஷிக்க அந்த மிருகங்களும் திவ்யரூபத்துடன் சுவர்க்க லோகஞ்சென்று வாழ்ந்துகொண்டிருந்தன. மகரிஷிகாள்! மிருகங் களுக்கும் பஞ்சநதக்ஷேத்திரம் சொர்க்கலோக பதவியைக் கொடுத்த தென்னில், மானிடஜென்மமுடையார் இத்தலத்து அடிவாரத்தில் எம்பெரு மானைப் பூஜித்து அக்ஷேத்திரத்தில் வாழ்வார்களாகில் அவர்களடையும் பேறுகளைக் கூறவும் வேண்டுமோ அதைக்கொண்டு யூகிக்கவேண்டுமென்று சூதபுராணிகர் அச்சரித்திரத்தைப் பூர்த்திசெய்து, மகரிஷிகாள்! இப்பஞ்சநதக்ஷேத்திரத்தின் மகத்துவத்தை அளவிட்டு முடிசேஷ னாலும் கணித்துக் கூறமுடியாது. என் அறிவிற்கு இயன்றவாறு இன்னும் சில சரித்திரங்களைக் கூறுவேன் அவைகள் யாவும் செம்பொற் சோதீசுவரப்பெருமான் அடியார்களுக்களித்த அற்புதங்களையும் [illegible] அத்தலமான அம்மையப்பர் [illegible] [illegible] ஜெப்பியேச்சுரமான்மியம் உரைத்த சரித்திரத்தைக் கூறலானார்.

உ௧-வது அத்தியாயம் முற்றிற்று.

## உ௨-வது ஜெப்பியேச்சுர மான்மியம் உரைத்த அத்தியாயம்.

சௌனகாதி மகரிஷிகாள்! கேட்கக்கடவீர்கள் பஞ்சநதக்ஷேத் திரத்திற்கு ஜெப்பியேச்சுரமென்ற பெயர் வந்த காரணம் முன்னமே கூறியிருக்கின்றோம். அவைகளிக்க, அவ்விடத்து அகஸ்தியமகரிஷி யானவர் பாபமொழிக்கும் வகைக்கு தவம் செய்துகொண்டிருக்கையில் எம்பெருமான் அவருக்குக் காக்ஷி தந்தருளி அகஸ்தியா! உனக் குவேண்டும் வரங்களைக் கேட்கக்கடவையென்று திருவாய்மலர்ந் தருள அகஸ்தியரானவர் பாதபத்மங்களில் வீழ்ந்து வணங்கி சுவாமின்! அடியேற்குத் தேவரீருடைய திருவடி தரிசனமன்றி மற்றொன்றும் வேண்டுவதில்லை, ஆனாலும் உயர்ந்தோர் பக்தியுடன் சதாகாலமுள்ள பக்தியையும் அளித்தருளவேண்டுமென்று வேண்

டுக்கொள்ள, சிவபெருமான் அகஸ்தியரே! இந்த சூரிய புஷ்கரணி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வாயேல் அவை கைகூடுமென்று மொழிந்தருளினர். உடனே சிவாக்ஞைப்படி அத்தீர்த்தத்தில் மூழ்கவே தன் கைலாயகிரியத்தில் இருக்கக்கண்டு அத்யந்த சந்தோஷமுடையவராய் சிவசந்நிதானத்தெதிர் ஆடு பரம்பொருளை வணங்கி ஸ்தோத்திரஞ்செய்து நிற்க எம்பெருமான் அவ்வவர்க்கு ஜீவன்முக்தி நிலையைக் கொடுத்தருளினர். அப்பொழுது அகஸ்தியர் தெரிவிக்கவேண்டி அங்கிருந்த தேவர் முதலிய யாவரும் ஆங்கு வந்திருந்தமையால் வடதிசை தாழ்ந்து தென்திசையுயர அதனைப் பரமசிவன் நோக்கியருளி அகஸ்தியரை அழைத்து நீ பூமிசமத்வத்தை அடையத் தென்திசை செல்வாயென மகரிஷியானவர் சிவபெருமானைப் பின்னும் வணங்கி எம்பெருமானே! தென்றிசை தமிழ்ப்பாஷையால் மிகச் சிறப்புடைத்தாயிற்று அதன் இலக்கணம் அறியாத யானே அங்கு எவ்வாறு செல்வேனென்று விண்ணப்பித்து நிற்க சிவபெருமான் இலக்கணத்தை உபதேசித்தருளி பொதிகாசலமென்கிற திருக்கூடாசலமென்னும் இடை கொடுத்ததுமல்லாமல் அதனைப் பெற்றுக்கொண்டு தென்திசையை நோக்கி வரும்போது மார்க்கத்தில் அசேருக்கு இடையூறிருக்கவிந்த பாவத்தைத் பூமியிலழுத்தவொட்டாது இல்வலன், வாதாபி என்ற இருவரைக்கொன்றும், காவிரிநதியை ஈன்ற பெரியவன் நான் பெரியவனென்று விவாதப்பட்டுக்கொண்டிருந்த ஜம்புகாரதிருவரையும் அவர்கள் ஆங்குள்ள பனிக்குடத்தி லையிருந்த தானம் அம்பலப்புரிப் பிடித்துக்கொண்டமாது இதை பாடிச் சிவலிங்கப்பண்ணியும், பின்னர் ஸ்ரீகாகோடு ஆம்மலையைப் பெயர்த்து மறுமாகாரத்தில் சாரதாபீடமாக விளங்குமாறு இதுவியும், திருக்குற்றாலமடைந்து ஆங்கு எழுந்தருளியிருந்த விஷ்ணுமூர்த்தியைத் தெரிசிக்கச்சென்றபோது ஆங்குள்ள வைஷ்ணவர்கள் மகரிஷியின் சிவவேடப்பொலிவைக் கண்டு பொறாது உட்செல்லவொட்டாது தடுக்க வைஷ்ணவ வேஷத்துடன் உட்சென்று விஷ்ணு வடிவை பஞ்சாக்ஷர மந்திரபலத்தால் சிவலிங்கமாக்கி வைஷ்ணவர்களை அவ்வூரைவிட்டு துரத்தச் செய்தும், கடாசியாய் பொதிகாசலமடைந்து மாணாக்கர் பலர்களுக்கும் தமிழிலக்கணத்தைப் போதித்து வீற்றிருந்தருளினர். மகரிஷிகாள் இவை நிற்க, சிவபெருமான் சைலாதிக்கு சாரூபபதவியும் சிவகணாதிபத்தியத்தையும் நந்திகேஸ்வரர் என்ற பெயரையும் கொடுத்தருளிய சரித்திரத்தை முன்னர் கூறியுள்ளோமல்லவா அதன் தொடர்ச்சி கூறுகின்றோம் கேட்கக்கட-



வீர்கள். பரமேஸ்வரன் நந்திகேஸ்வரருடன் கைலயங்கிரிக்குச்சென்றுவுடன் அன்னவர்க்கு விவாகஞ்செய்து வீற்றிருந்தருள சனற்குமார மகரிஷி அதையறிந்தவராய் அங்கு வந்துசேர்ந்து ஈஸ்வரனைப் பன்முறை வழுத்தி எம்பெருமானே! அடியேற்கும் விவாகஞ் செய்வித்தருளவேண்டுமென விண்ணப்பித்து நிற்க பரஞ்சுடர் நந்திகேஸ்வரரால் அன்னவர்க்கு விவாகஞ் செய்வித்து வ சனற்குமாரா! இன்று முதல் நந்திகேஸ்வரரது மாணாக்கன் என்றழைக்கப் பெறுவாய் உன்னிடம் செல்லென ஆக்ஞாபித்தருளி உடனே நந்திகேஸ்வரருக்கு திருக்கல்யாணம் செய்துவைக்கவேண்டுமென்ற திருவுளங்கொண்டவராய் வசிஷ்ட மகரிஷியின் பௌத்திரியாகிய சுயசையை திருமழபாடி என்னும் க்ஷேத்திரத்தில் பங்குனிமாதம், சுக்கிலபக்ஷம், தசமி, புனர்பூசநக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் மணம் புணர்வித்து உலகத்தவர்க்கு கல்யாணமகோத்ஸவம் இன்னும் கொண்டாடுக வேண்டுமெனத் திருவுளம்பற்றி உமையம்மையாரோடுமாய் மணமக்கள் இருவருடனும், சகல வாத்திய கோஷத்துடனும் நந்திபிருங்கி முதலிய சிவகணநாதர்களும், சிவபக்தியில் சிறந்த அடியவர்கூட்டங்கள் சிவநாமசங்கீர்த்தனகோஷத்துடன் பின்தொடர்ந்து வரவும் சோணிகாச்சிரமமாகிய திருப்பழனம், சௌநகமாச்சிரமமாகிய திருச்சோற்றுத்துறை, வியாசாச்சிரமமாகிய திருவேதிகுடி, பச்சிமத்திருச்சந்நிதியையுடைய திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் ஆகிய ஆறு திவ்ய க்ஷேத்திரங்களின் வழியாய் முறையே, ஆப்தசகாயேஸ்வரர், ஓதவனேஸ்வரர், வேதநாயகேஸ்வரர், வீரட்டேஸ்வரர், புஷ்பவனேஸ்வரர், திருநெத்தானேஸ்வரர், ஆகிய அறுவரும் எதிர்கொண்டழைத்து வழிவிட இவர்த்தி மத்தாப்பு வாணவேடிக்கை முதலிய வைபவங்களுடன் உலாப்போந்து பஞ்சநதக்ஷேத்திரத்தில், எழுந்தருளினவராய் வீற்றிருந்தருளினர். மகரிஷிகாள்! இம்மகோத்ஸவத்தில் காவேரி ஸ்நானம் செய்து நியமம் உடையாராய் எம்பெருமானைத் தேவார திருவாசக பாராயணம் செய்துகொண்டு பிரதக்ஷிணமாக வருவோர் இகத்தே புத்திரப்பேறு முதலிய சம்பத்துக்களையடைந்து மறுமையில் எம்பெருமான் சரணநிழலில் வாழும் பெரும் பேற்றினைப்பெறுவர் இது வேத சம்மதமாகும் அறிந்துகொள்ளக்கடவீர்கள். இது நிற்க நியமேசர் என்ற ஓர் யோகீஸ்வரர் சிவாலயத் திருப்பணி செய்துகொண்டு காவேரி நதியின் தென்கரையில் வசித்துக்கொண்டிருந்து சிலகாலஞ் சென்றபின் யோகத்திலமர்ந்து அளவிறந்த காலம் நிஷ்-

டை கலையாது நின்றவிடமே அன்னவர் வீற்றிருக்க பஞ்சநதி
[illegible] பிரமனைப்பார்த்து [illegible] கொண்டது.
அவ்வாறாக அப்பொழுது அதை [illegible] அதிசயப்
பென்னும் சோழராஜனை [illegible]
[illegible] வரும்போது அங்கிடம் [illegible] செல்லாது
தடைபட ஆச்சரியமடைந்தவனும் மிக [illegible] அம்மேட்டை வெட்
டிப்பிசோதிக்கையில் யோகிகளைக் கண்டு [illegible] சாஷ்டாங்க
மாய் விழுந்து பணிந்து நிற்க யோகிகள் அன்னவனை [illegible]
[illegible] செல்கிறாய் [illegible]
மென்று ஆசீர்வதித்து அனுப்பிவிட்டுப் பின்னரும் [illegible]
[illegible] பஞ்சநதீசப்பெருமான் திருவருளால் [illegible] திருப்
[illegible] திருப்பஞ்சாக்ஷரம், [illegible]
[illegible] திருப்பணியைச்செய்து [illegible]
[illegible] பெருமானை [illegible] திருப்பணி செய்து
[illegible]
[illegible] அடுத்துகொண்டு [illegible]
[illegible] பஞ்சநதமான்மியத்தைப் [illegible]
[illegible]
[illegible]
[illegible] பஞ்சாக்ஷர [illegible]
[illegible] அத்தலத்திலேயே வசித்து சிவசாயுச்
சியத்தைப் பெற்று வாழ்ந்தனர்.

## பிரயோஜனம்.

[illegible]

இத்தப்புதிருமகும் பஞ்சநதக்ஷேத்திரத்தில் வசித்து காவேரிஸ்
நானஞ் செய்து அறம்வளர்த்த நாயகியார் சமேதராய் வெழுந்த
ருளியிருக்கும் செம்பொற்சோதீசுவரப் பெருமான் பாதசேவைக்கு
உரியவர் மேலான மோக்ஷவீட்டை அடைவர்.

பஞ்சநதமான்மியம் முற்றிற்று.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.

## திருவையாறு - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கலையார்மதியோடுரநீருந், நிலையார்சடையாரிடமாகும்
மலையாரமுமாமணிசந்தோ, டலையார்புனல்சேருமையாறே. (க)

மதியொன்றியகொன்றைவடத்தன், மதியொன்றவுதைத்தவர்வாழ்வு
மதியின்னொடுசேர்கொடிமாடம், மதியம்பயில்கின்றவையாறே. [உ

கொக்கின்னிறகின்னொடுவன்னி, புக்கசடையார்க்கிடமாகும்
திக்கின்னிசைதேவர்வணங்கும், அக்கின்னரையாரதையாறே. (௩)

சிறைகொண்டபுரம்மவைசிந்தக், கறைகொண்டவர்காதல்செய்கோயில்
மறைகொண்டநல்வானவர்தம்மில், லறையும்மொலிசேருமையாறே. [௪

உமையாளொருபாகமதாகச், சமைவாரவர்சார்விடமாகும்
அமையாருடல்சோர்தரமுத்தம், அமையாவருமந்தணையாறே. (௫)

தலையின்றொடைமாலையணிந்து, கலைகொண்டதோர்கையினர்சேர்வாம்
நிலைகொண்டமனத்தவர்நித்தம், மலர்கொண்டுவணங்குமையாறே. ( )

வரமொன்றியமாமலரோன்றன், சிரமொன்றையறுத்தவர்சேர்வாம்
வரையின்னிழிவார்தருபொன்னி, யரவங்கொடுசேருமையாறே. (௭)

வரையொன்றதெடுத்தவரக்கன், சிரமங்கநெரித்தவர்சேர்வாம்
விரையின்மலர்மேதகுபொன்னித், திரைதன்னொடுசேருமையாறே ( )

சங்கக்கயனுமறியாமைப், பொங்குஞ்சுடரானவர்கோயில்
கொங்கிற்பொலியும்புனல்கொண்டு, அங்கிக்கெதிர்காட்டுமையாறே.

துவராடையர்தோலுடையார்கள், கவர்வாய்மொழிகாதல்செய்யாதே
தவராசர்கடாமரையானோ, டவர்தாமணையந்தணையாறே. (௰)

கலியார்கலிக்காழியர்மன்னவன், காவலன் திருஞானசம்பந்தன்
வலியார்புனல்சூழையாற்றைச், செ[illegible]மாலைவல்லார் துயர்விடே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - செம்பொற்சோதீஸ்வரர், தேவியார் - அறம்வளர்த்தநாயகியார்.

---

## திருவையாறு திருவிராகம் - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பணிந்தவ ரருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் றோலொடு நூறுதை மார்பினிற்
பிணிந்தவ னரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநகரந் தணையாறே. (க)

கீர்த்திமிக் கவனகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியத ளரவரை
யார்த்தவன் வளநகரந் தணையாறே. (உ)

வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநக
ரெரிந்தற வெய்தவ னெழில்திகழ் மலர்மே
லிருந்தவன் சிரமது விமையவர் குறைகொள
வரிந்தவன் வளநகரந் தணையாறே. (௩)

வாய்ந்தவல் லவுணர்தம் வளநக ரெரியிடை
மாய்ந்தற வெய்தவன் வளர்பிறை விரிபுன
றோய்ந்தெழு சடையினன் றொன்மறை யாறங்க
மாய்ந்தவன் வளநகரந் தணையாறே. (ச)

வானமர் மதிபுல்கு சடையிடை யரவொடு
தேனமர் கொன்றைய னிகழ்தரு மார்பினன்
மானன மென்விழி மங்கையோர் பாகமு
மானவன் வளநகரந் தணையாறே. (ரு)

முன்பனை முனிவரோ டமரர்கள் தொழுதெழு
மின்பனை யிணையிலி யிறைவனை யெழில்திக
ழென்பொனை யேதமில் வேதியர் தாந்தொழு
மன்பன்றன் வளநகரந் தணையாறே. (சா)



நன்றிலவுணர்தம் வளநக ரெரியிடை
வெந்தற வெய்தவன் விளங்கிய மார்பினிற்
பந்தமர் மெல்விரற் பாகம தாகிய
னந்தமில் வளநகரந் தணையாறே. (எ)

விடைத்தவல் லரக்கனல் வெற்பினை யெடுத்தலு
மடித்தலத் தாலிறை யூன்றிமற் றவனை
முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
யடர்த்தவன் வளநகரந் தணையாறே. (அ)

விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோனொ
டெண்ணிலி தேவர்க ளிந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனுங் காண்பரி தாகிய
வண்ணறன் வளநகரந் தணையாறே. (கூ)

மருளுடை மனத்துவன் சமணர்கண் மாசரு
விருளுடை யிணைத்துவர்ப் போர்வையி னார்களுந்
தெருளுடை மனத்தவர் தேறுமின் றிண்ணமா
வருளுடை யடிகடம் மந்தணை யாறே. (ய)

நலமலி ஞானசம் பந்தன தின்றமிழ்
புலமலி புனன்மல்கு மந்தணை யாற்றினைக்
கலமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - பண் - மேகராகக் குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைம்மேலுந்தி
யலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே. (க)

விடலேறு படநாக மரைக்கசைத்து வெற்பரையன் பாவையோடு
மடலேறொன் றதுவேறி யஞ்சொலீர் பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங் கீன்றலைக்குந் திருவையாறே. (உ)

கங்காளர்கயிலாயமலையாளர்கானப்பேராளர்மங்கை
பங்காளர்திரிசூலப்படையாளர்விடையாளர்பயிலுங்கோயில்
கொங்காளப்பொழினுழைந்துகூர்வாயாலிறகுலர்த்திக்கூதனீங்கிச்
செங்கால்வெண்குருகுபைங்கானலிரைதேருந்திருவையாறே. (௩)

ஊன்பாயுமுடைதலைகொண்டூரூரின்பலிக்குழல்வாருமையாள்பங்கர்
தான்பாயும்விடையேறுஞ்சங்கரனார்தழலுருவர்தங்குங்கோயில்
மான்பாயவயலருகேமரமேறிமந்திபாய்மடுக்கடோறுந்
தேன்பாயமீன்பாயச்செழுங்கமலமொட்டலருந்திருவையாறே. (௪)

நீரோடுகூவிளமுமதியமும்வெள்ளெருக்குநிறைத்தகொன்றைத்
தாரோடுதண்கரந்தைசடைக்கணிந்ததத்துவனார்தங்குங்கோயில்
காரோடிவிசும்பளந்துகடிநாறும்பொழிலணைந்தகமழ்தார்வீதித்
தேரோடுமரங்கேறிச்சேயிழையார்நடம்பயிலுந்திருவையாறே. (௫)

வேந்தாகிவிண்ணவர்க்குமண்ணவர்க்குநெறிகாட்டும்விகிர்தனாகிப்
பூந்தாமநறுங்கொன்றைச்சடைக்கணிந்தபுண்ணியனார்நண்ணுங்கோ
காந்தாரமிசையமைத்துக்காரிகையாரிசைபாடக்கவினார்வீதித் [யில்
தேந்தாமென்றரங்கேறிச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (௬)

நின்றுலாநெடுவிசும்பினெருக்கிவருபுரமூன்றுநீள்வாயம்பு
சென்றுலாம்படிதொட்டசிலையாளிமலையாளிசேருங்கோயில்
குன்றெலாங்குயில்கூவக்கொழும்பிரசமலர்பாய்ந்துவாசமல்கு
தென்றலாரடிவருடச்செழுங்கரும்புகண்வளருந்திருவையாறே. (௭)

அஞ்சாதேகயிலாயமலையெடுத்தவரக்கர்கோன்றலைகள்பத்து
மஞ்சாடுதோணெரியவடர்த்தவனுக்கருள்புரிந்தமைந்தர்கோயில்
இஞ்சாயலிளந்தெங்கின்பழம்வீழவிளமேதியிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக்கதிருழக்கிச்செழுங்கமலவயல்படியுந்திருவையாறே. (௮)

மேலோடிவிசும்பணவிவியனிலத்தைமிகவகழ்ந்துமிக்குநாடும்
மாலோடுநான்முகனுமறியாதவகைநின்றான்மன்னுங்கோயில்
கோலோடக்கோல்வளையார்கூத்தாடக்குவிமுலையார்முகத்தினின்று
சேலோடச்சிலையாடச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (௯)

குண்டாடுங்குற்றுடுக்கைச்சமணரொடுசாக்கியருங்குணமொன்றில்லா
மிண்டாடுமிண்டருரைகேளாதேயாளாமின்மேவித்தொண்டீர்
எண்டோளர்முக்கண்ணரெம்மீசரிறைவரினிதமருங்கோயில் [றே.
செண்டாடுபுனல்பொன்னிச்செழுமணிகள்வந்தலைக்குந்திருவையா



அன்னமலிபொழில்புடைசூழையாற்றெம்பெருமானையந்தண்காழி
மன்னியசீர்மறைநாவன்வளர்ஞானசம்பந்தன்மருவுபாட
லின்னிசையாலிவைபத்துமிசையுங்காலீசனடியேத்துவார்க
டன்னிசையோடமருலகிற்றவநெறிசென்றெய்துவார்தாழாதன்றே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோடல்கோங்கங்குளிர்கூவிளமாலைகுலாயசீ
ரோடுகங்கையொளிவெண்பிறைசூடுமொருவனார்
பாடல்வீணைமுழவங்குழன்மொந்தைபண்ணாகவே
யாடுமாறுவல்லானுமையாறுடையையனே. (௧)

தன்மையாருமறிவாரில்லைதாம்பிறரெள்கவே
பின்னுமுன்னுஞ்சிலபேய்க்கணஞ்சூழத்திரிதருந்
துன்னவாடையுடுப்பர்சுடலைப்பொடிபூசுவ
ரன்னமாலுந்துறையானுமையாறுடையையனே. (௨)

கூறுபெண்ணுடைகோவணமுண்பதும்வெண்டலை
மாறிலாருங்கொள்வாரில்லைமார்பிலணிகல
மேறுமேறித்திரிவரிமையோர்தொழுதேத்தவே
யாறுநான்குஞ்சொன்னானுமையாறுடையையனே. (௩)

பண்ணினல்லமொழியார்பவளத்துவர்வாயினா
ரெண்ணினல்லகுணத்தாரிணைவேல்வென்றகண்ணினார்
வண்ணம்பாடிவைப்பாடித்தம்வாய்மொழிபாடவே
யண்ணல்கேட்டுகந்தானுமையாறுடையையனே. (௪)

வேனலானைவெருவவுரிபோர்த்துமையஞ்சவே
வானையூடறுக்கும்மதிசூடியமைந்தனார்
தேனெய்பாறயிர்தெங்கிளநீர்கரும்பின்றெளி
யானஞ்சாடுமுடியானுமையாறுடையையனே. (௫)

எங்குமாகிநின்றானுமியல்பறியப்படா
மங்கைபாகங்கொண்டானுமதிசூடுமைந்தனும்
பங்கமில்பதினெட்டொடுநான்குக்குணர்வுமா
யங்கமாறுஞ்சொன்னானுமையாறுடையையனே. (௬)

ஓதியாருமறிவாரிலையோதியுலகெலாஞ்
சோதியாய்நிறைந்தான்சுடர்ச்சோதியுட்சோதியான்
வேதியாகிவிண்ணாகிமண்ணோடெரிகாற்றுமா
யாதியாகிநின்றானுமையாறுடையையனே. (௬)

குரவநாண்மலர்கொண்டடியார்வழிபாடுசெய்
விரவுநீறணிவார்சிலதொண்டர்வியப்பவே
பரவநாடொறும்பாடநம்பாவம்பறைதலா
லரவமார்த்துகந்தானுமையாறுடையையனே (௭)

உரைசெய்தொல்வழிசெய்தவிபாவிலங்கைக்குமன்
வரைசெய்தோளடர்த்துமதிசூடியமைந்தனுர்
கரைசெய்காவிரியின்வடபாலதுகாதலா
னுரைசெய்மேகலையானுமையாறுடையையனே (௮)

மாலுஞ்சோதிமலரானுமறிகிலாவாய்மையான்
காலங்காம்புவயிரங்கடைகையன்பொற்கழல்
கோலமாய்க்கொழுந்தின்றுபவளந்திரண்டதோ
ராலநீழலானுமையாறுடையையனே. (௯)

கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையான்
மெய்யைப்போர்த்துழல்வாருமுரைப்பனமெய்யல
மைகொள்கண்டத்தெண்டோண்முக்கணான்கழல்வாழ்த்தவே
வையந்தேர்ந்தளிப்பானுமையாறுடையையனே. (௰)

பலிதிரிந்துழல்பண்டங்கன்மேயவையாற்றினைக்
கலிகடந்தகையான்கடற்காழியர்காவல
னொலிகொள்சம்பந்தனொண்டமிழ்பத்தும்வல்லார்கள்போய்
மலிகொள்விண்ணிடைமன்னியசீர்பெறுவார்களே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு திருவிராகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்திகழ்மலைச்சிறுமியோடுமிகுதேச
ருருத்திகழெழிற்கயிலைவெற்பிலுறைதற்கே
விருப்புடையவற்புதரிருக்குமிடமேரார்
மருத்திகழ்பொழிற்குலவுவண்டிருவையாறே. (௧)



கந்தமரவுந்துபுகையுந்தலில்விளக்கே
ரிந்திரனுணர்ந்துபணியெந்தையிடமெங்குஞ்
சந்தமலியுந்தருமிடைந்தபொழில்சார
வந்தவளிநந்தணவுவண்டிருவையாறே. (௨)

கட்டுவடமெட்டுமுறுவட்டமுழவத்திற்
கொட்டுகரமிட்டவொலிதட்டும்வகைசந்திச்
சிட்டமிகைகட்டமவைவிட்டவிடஞ்சீர்
வட்டமதிலுட்டிகழும்வண்டிருவையாறே. (௩)

நண்ணியோர்வடத்தினிழனால்வர்முனிவர்க்கன்
றெண்ணிலிமறைப்பொருள்விரித்தவரிடஞ்சீர்த்
தண்ணின்மலிசந்தகிலொடுந்திவருபொன்னி
மண்ணின்மிசைவந்தணவுவண்டிருவையாறே. (௪)

வென்றிமிகுதாருகனதாருயிர்மடங்கக்
கன்றிவருகோபமிகுகாளிகதமோவ
நின்றுநடமாடியிடநீடுமலர்மேலால்
மன்றன்மலியும்பொழில்கொள்வண்டிருவையாறே.

பூதமொடுபேய்கள்பலபாடநடமாடிப்
பாதமுதல்பையரவுகொண்டணிபெருக்கிக்
கோதையசிம்பலிகொளும்பர[illegible]
மாதவிமணங்கமழும்வண்டிருவையாறே. (௬)

அன்னமுழுமங்கையுமைமங்கை[illegible]
பின்னெருநஞ்செய்துழல்பின்[illegible]
பென்னகதிபன்றுரைசெய்கணன்[illegible]
மன்னுகொடையாளர்பயில்வண்டிருவை[illegible] (௭)

இரக்கமில்குணத்தொடுலகெங்குநலிவெம்பா
ரரக்கன்முடியத்தலையத்தெடுத்தடக்கத்
தரக்கவிரலிற்றிமைனவைத்தவரிடஞ்சீர்
வரக்கருணையாளர்பயில்வண்டிருவையாறே. (௮)

பருத்துருவதாகிவிண்ணடைந்தவனொர்பன்றிப்
பெருத்துருவதாயுலகிடந்தவனுமென்றுங்
கருத்துருவொணாவகைகிளர்ந்தவனிடங்கார்
வருத்துவகைநீர்கொள்பொழில்வண்டிருவையாறே. (௯)

பாக்கியமொன்றுமிலிச்சமண்பதகர்புத்தர்
சாக்கியர்களென்றுடல்பெருத்துத்திரிவார்கள்
நோக்கரியதத்துவனிடம்படியின்மேலால்
மாக்கமுறநீடுபொழில்வண்டிருவையாறே. (௰)

வாசமலியும்பொழில்கொள்வண்டிருவையாற்றை
ஈசனையெழிற்புகலிமன்னவன்மெய்ஞ்ஞானப்
பூசுரனுரைத்ததமிழ்பத்துமிவைவல்லார்
நேசமலிபத்தரவர்நின்மலனடிக்கே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்.

---

## திருவையாறு-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானைமலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப்புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாமலையாறடைகின்றபோது
காதன்மடப்பிடியோடுங்களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௧)

போழிளங்கண்ணியினானைப்பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்திவட்டமிட்டாடாவருவே
னாழிவலவனின்றேத்துமையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக்குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௨)

எரிப்பிறைக்கண்ணியினானையேந்திழையாளொடும்பாடி
முரித்தவிலயங்களிட்டுமுகமலர்ந்தாடாவருவே
னரித்தொழுகும்வெள்ளருவியையாறடைகின்றபோது
வரிக்குயிற்பேடையொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௩)



பிறையிளங்கண்ணியினானைப்பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித்தோளைக்குளிரத்தொழுவே
னறையிளம்பூங்குயிலாலுமையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச்சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௪)

ஏடுமதிக்கண்ணியானையேந்திழையாளொடும்பாடிக்
காடொடுநாடுமலையுங்கைதொழுதாடாவருவே
னாடலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
பேடைமயிலொடுங்கூடிப்பிணைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௫)

தண்மதிக்கண்ணியினானைத்தையனல்லாளொடும்பாடி
உண்மெலிசிந்தையனாகியுணராவுருகாவருவே
னண்ணலமர்ந்துறைகின்றவையாறடைகின்றபோது
வண்ணப்பகன்றிலொடாடிவைகிவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௬)

கடிமதிக்கண்ணியினானைக்காரிகையாளொடும்பாடி
வடிவொடுவண்ணமிரண்டும்வாய்வேண்டுவசொல்லிவாழ்வே
னடியிணையார்க்குங்கழலானையாறடைகின்றபோது
இடிகுரலன்னதோரேனமிசைந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௭)

விரும்புமதிக்கண்ணியானைமெல்லியலாளொடும்பாடிப்
பெரும்புலர்காலையெழுந்துபெறுமலர்கொய்யாவருவே
னருங்கலம்பொன்மணியுந்துமையாறடைகின்றபோது
கருங்கலைப்பேடையொடாடிக்கலந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௮)

முற்பிறைக்கண்ணியினானைமொய்குழலாளொடும்பாடிப்
பற்றிக்கயிறறுக்கில்லேன்பாடியுமாடவருவே
னற்றருள்பெற்றுநின்றாரோடையாறடைகின்றபோது
நற்றுணைப்பேடையொடாடிநாரைவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்கண்டறியாதனகண்டேன். (௯)

திங்கண்மதிக்கண்ணியானைத்தேமொழியாளொடும்பாடி
யெங்கருணல்குங்கொலெந்தையெனக்கினியென்னாவருவே

னங்கண் மங்கைபாகமையாறடைகின்றபோது
பைங்கிளி பெடையோடாடிப் பறந்துவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங்கண்டறியாதன கண்டேன். (௰)

வளர்மதிக்கண்ணியினானை வார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங்காண்பான் கடைக்கணிக்கின்றேன்
அளவுபடாததோரன்போடையா றடைகின்றபோது
இளமணநாகுதழுவியேறுவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதங்கண்டறியாதன கண்டேன். (௰௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

கங்கையைச்சடையுள்வைத்தார்கதிர்ப்பொறியரவும்வைத்தார்
திங்களைத்திகழவைத்தார்திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப்பாகம்வைத்தார்மான்மறிமழுவும்வைத்தா
ரங்கையுளனலும்வைத்தாரையனையாறனாரே. (௧)

பொடிதனைப்பூசவைத்தார்பொங்குவெண்ணூலும்வைத்தார்
கடியதோர்நாகம்வைத்தார்காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னைமார்பிலோர்பாகம்வைத்தா
ரடியிணைதொழவும்வைத்தாரையனையாறனாரே. (௨)

உடைதருகீளும்வைத்தாருலகங்களனைத்தும்வைத்தார்
படைதருமழுவும்வைத்தார்பாய்புலித்தோலும்வைத்தார்
விடைதருகொடியும்வைத்தார்வெண்புரிநூலும்வைத்தா
ரடைதரவருளும்வைத்தாரையனையாறனாரே. (௩)

தொண்டர்கள்தொழவும்வைத்தார்தூமதிசடையில்வைத்தா
ரெண்டிசைத்திகழவைத்தாரெமக்கென்றுமின்பம்வைத்தார்
வண்டுசேர்குழலினாளைமருவியோர்பாகம்வைத்தா
ரண்டவானவர்களேத்துமையனையாறனாரே. (௪)

வானவர்வணங்கவைத்தார்வல்வினைமாயவைத்தார்
கானிடைநடமும்வைத்தார்காமனைக்கனலாவைத்தா
ரானிடையைந்தும்வைத்தாராட்டுவார்க்கருளும்வைத்தா
ரானையினுரிவைவைத்தாரையனையாறனாரே. (௫)



சங்கணிகுழையும்வைத்தார்சாம்பல்மெய்ப்பூசவைத்தா
வெங்கதிரெரியவைத்தார்விரிபொழிலனைத்தும்வைத்தா
கங்குலும்பகலும்வைத்தார்கடுவினைகளையவைத்தா
ரங்கமேதோதவைத்தாரையனையாறனாரே.

பத்தர்கட்கருளும்வைத்தார்பாய்விடையேறவைத்தார்
சித்தத்தையொன்றவைத்தார்சிவமதேநினையவைத்தார்
முத்தியைமுற்றவைத்தார்முறைமுறைநெறிகள்வைத்தா
ரத்தியினுரிவைவைத்தாரையனையாறனாரே.

ஏறுகந்தேறவைத்தாரிடைமருதிடமும்வைத்தா
நாறுபூங்கொன்றைவைத்தார்நாகமுமரையில்வைத்தார்
கூறுமைபாகம்வைத்தார்கொல்புலித்தோலும்வைத்தா
ராறுமோர்சடையில்வைத்தாரையனையாறனாரே.

பூதங்கள்பலவும்வைத்தார்பொங்குவெண்ணீறும்வைத்த
கீதங்கள்பாடவைத்தார்கின்னரந்தன்னைவைத்தார்
பாதங்கள்பரவவைத்தார்பத்தர்கள்பணியவைத்தா
ராதியுமந்தம்வைத்தாரையனையாறனாரே.

இரப்பவர்க்கீயவைத்தாரீபவர்க்கருளும்வைத்தார்
கரப்பவர்தங்கட்கெல்லாங்கடுநரகங்கள்வைத்தார்
பரப்புநீர்க்கங்கைதன்னைப்படர்சடைப்பாகம்வைத்தா
ரரக்கனுக்கருளும்வைத்தாரையனையாறனாரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு-பண்-திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

குண்டனாய்ச்சமணரோடேகூடிநான்கொண்டமாலைத்
துண்டனேசுடர்கொள்சோதிதூநெறியாகிநின்ற
அண்டனேயமரரேறேதிருவையாறமர்ந்ததேனே
தொண்டனேனெழுதான்பாதஞ்சொல்லிநான்றிரிகின்றே

பீலிகையிடுக்கிநாளும்பெரியதோர்தவமென்றெண்ணி
வாலியதறிகணேபோலமதியிலார்பட்டதென்னே
வாலியார்வணங்கியேத்துந்திருவையாறமர்ந்ததேனே
டாலியாவிழுந்தவென்றாயழுந்தாமெழுந்தவாறே.

தட்டிடுஞ் சமணரோடே தருக்கிநான் றவமென் றெண்ணி
யொட்டிடு மனத்தினீரே யும்மையான் செய்வதென்னே
மொட்டிடு கமலப்பொய்கைத் திருவையா றமர்ந்த தேனை
விட்டிடு முள்ளத்தீரே யும்மைநா னுகந்திட்டேனே. (௩)

பாசிப்பன் மாசுமெய்யர் பலமிலாச் சமணரோடு
நேசத்தா லிருந்த நெஞ்சை நீக்குமா றறியமாட்டேன்
தேசத்தார் பரவியேத்துந் திருவையா றமர்ந்த தேனை
வாசத்தால் வணங்கவல்லார் வல்வினை மாயுமன்றே. (௪)

கடிப்பொடி யட்டிமெய்யிற் கருதியே தவமென் றெண்ணி
வடிக்களோ டிசைந்த நெஞ்சே மதியிலி பட்டதென்னே
மடிக்களில் வாளைபாயுந் திருவையா றமர்ந்த தேனை
யடித்துநின் றன்னு நெஞ்சே யருந்தவஞ் செய்தவாறே. (௫)

துறவியென் றவமேகொண்டு சொல்லிய செலவு செய்து
உறவிலாச் சமணரோடே யுணாவிலே யுணாவொன் றின்றி
நறவமார் பொழில்கள் சூழ்ந்த திருவையா றமர்ந்த தேனை
மறவலா நெஞ்சமே மகனை மதியுணக் கடைந்தவாறே. (௬)

பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாஞ்
சொல்லிய செலவு செய்தேன் சோர்வனான் நினைந்தபோது
மல்லிகை மலருஞ்சோலைத் திருவையா றமர்ந்த தேனை
யெல்லியும் பகலுமெல்லா நினைந்தபோ தினியவாறே. (௭)

மண்ணுளார் விண்ணுளாரும் வணங்குளார் பாவம்போக
எண்ணிலாச் சமணரோடே யிசைந்தனே யேழை நெஞ்சே
தெண்ணிலா வெறிக்குஞ் சென்னித் திருவையா றமர்ந்த தேனைக்
கண்ணினாற் காணப்பெற்றுக் கருதிற்றே முடிந்தவாறே. (௮)

குருந்தமொசித்த மாலுங் குலமலர் மேவினானுந்
திருந்துநற் பாதத்தோடு திருமுடி காணமாட்டா
ரருந்தவ முனிவரேத்துந் திருவையா றமர்ந்த தேனைப்
பொருந்திநின் றன்னு நெஞ்சே பொய்வினை மாயுமன்றே. (௯)

அறிவிலா வரக்க னோடி யருவரை யெடுக்க லுற்று
முறுகினான் முறுகக்கண்டு மூதறி வாளனோக்கி
நிறுவினான் விரலதொன்றா லூன்றலுந் நெரிந்துபோய் வீழ்ந்து
வழிபடுவாரன்பு செய்தான் திருவையா றமர்ந்த தேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.



## திருவையாறு - பண் - திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

தானலா துலகமில்லைச் சகமலா தடிமையில்லைக்
கானலா தாடலில்லைக் கருதுவார் தங்களுக்கு
வானலா தருளுமில்லை வார்குழன் மங்கையோடு
மானலா தூர்வதில்லை யையனை யாறனார்க்கே. (௧)

ஆலலா லிருக்கையில்லை யருந்தவ முனிவர்க்கன்று
நூலலா னொடிவதில்லை நுண்பொருளாய்ந்து கொண்டு
மாலுநான் முகனுங்கூடி மலரடி வணங்கவேண்டிப்
பாலலா லமுதமில்லை யையனை யாறனார்க்கே. (௨)

கரியுரி கடலே தன்னிடமலா னவிற்றவில்லைச்
சுரிபுரி குழலியோடுந் துணைபலா விருக்கையில்லைத்
தெரிபுரிச் சிந்தையார்க்குத் தெளிவலா லருளுமில்லை
வரிபுரி மலர்கொண்டேத்து மையனை யாறனார்க்கே. (௩)

தொண்டலாற் றுணையுமில்லைத் தோலலா துடையுமில்லைக்
கண்டலாற் கருளுமில்லைக் கலந்தபின் பிரிவதில்லைப்
பண்டைநான் மறைகள் காணாப் பரிசின னென்றெண்ணி
யண்டவா னவர்களேத்து மையனை யாறனார்க்கே. (௪)

எரியலா லுருவமில்லை யேறலா லேறலில்லைக்
கரியலாற் போர்வையில்லைக் காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேத்து
மரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே. (௫)

என்பலாற் கலனுமில்லை யெருதலா லூர்வதில்லைப்
புன்புலா றுகாட்டிற் பொடியலாற் சாந்துமில்லைத்
துன்பிலாத் தொண்டர்கூடித் தொழுதழு தாடிப்பாடு
மன்பலாற் பொருளுமில்லை யையனை யாறனார்க்கே. (௬)

கீளலா லுடையுமில்லைக் கிளர்பொறி யரவம்பைம்பூண்
டோளலாற் றுணையுமில்லைத் தொத்தலர் கின்றவேணி
வேளலாற் காயப்பட்ட வீருடை யில்லைமீளா
வாளலாற் கைம்மாறில்லை யையனை யாறனார்க்கே. (௭)

சகமலா தடிமையில்லை தானலாற் றுணையுமில்லை
நகமெலாந் தேயக்கையா னான்மலர் தொழுதாளி
முகமெலாங் கண்ணீர்மல்க முன்பணிந் தேத்துந் தொண்ட
ரகமலாற் கோயிலில்லை யையனையா றனார்க்கே. (அ)

உமைபலா தருவமில்லை யுலகெலா முடையதில்லை
நமையெலா முடையராவர் நன்மையே தீமையில்லைக்
கமையெலா முடையராகிக் கழலடி பரவுந் தொண்டர்க்
கமைவிலா வருள்கொடுப்பா ரையனையா றனார்க்கே. (கூ)

மலையலா விருக்கையில்லை மதித்திடா வரக்கன் றன்னைத்
தலையலா னெரித்ததில்லை தடவரைக் கீழடர்த்து
நிலையிலார் புரங்கள்வேவ நெருப்பலால் விரித்ததில்லை
யலையினார் பொன்னிமன்னு மையனையா றனார்க்கே. (ய)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

குறுவித்தவா குற்றநோய்வினை காட்டிக் குறுவித்தநோ
யுறுவித்தவா வுற்றநோய்வினை தீர்ப்பானுகந் தருளி
யறிவித்தவா றடியேனையை யாறனடிமைக் களே
செறிவித்தவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (க)

கூர்வித்தவா குற்றநோய்வினை காட்டியுங் கூர்வித்தநோ
யூர்வித்தவா வுற்றநோய்வினை தீர்ப்பானுகந் தருளி
யார்வித்தவா றடியேனையை யாறனடிமைக் களே
சேர்வித்தவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (உ)

தாக்கினவா சலமேவினை காட்டியுந் தண்டித்தநோய்
நீக்கினவா நெடுநீரினின் றேறநினைந் தருளி
யாக்கினவா றடியேனையை யாறனடிமைக் களே
நோக்கினவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (௩)

தருக்கினகான் றக்கின் றிடுமோட்டச் சலமதனை
னெருக்கினவா நெடுநீரினின் றேறநினைந் தருளி
யுருக்கினவா றடியேனையை யாறனடிமைக் களே
பெருக்கினவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (௪)



இழிவித்தவா றிட்டநோய்வினை காட்டியிடர்ப்படுத்து
கழிவித்தவா கட்டநோய்வினை தீர்ப்பானுகந் தருளி
யழிவித்தவா றடியேனையை யாறனடிமைக் களே
தொழுவித்தவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (௫)

இடைவித்தவா றிட்டநோய்வினை காட்டியிடர்ப்படுத்து
முடைவித்தவா றுற்றநோய்வினை தீர்ப்பானுகந் தருளி
யடைவித்தவா றடியேனையை யாறனடிமைக் களே
தொடர்வித்தவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (௬)

படக்கினவா படவின்றன் னொடும்படக்கினநோ
யடக்கினவா றதுவன்றியுந் தீவினையாவெய்ய
மடக்கினவா றடியேனையை யாறனடிமைக் களே
துடக்கினவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (௭)

மறப்பித்தவா வல்லிநோய்வினை காட்டி மறப்பித்தநோய்
துறப்பித்தவா துக்கநோய்வினை தீர்ப்பானுகந் தருளி
யறப்பித்தவா றடியேனையை யாறனடிமைக் களே
சிறப்பித்தவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (அ)

துயக்கினவா துக்கநோய்வினை காட்டித் துயக்கினநோ
வியக்கினவா விட்டநோய்வினை தீர்ப்பானுகந் தருளி
பயக்கினவா றடியேனையை யாறனடிமைக் களே
மயக்கினவா தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. (கூ)

கறுத்துவிட்டார் கண்டங் கங்கைசடைமேற் கரந்தருளி
யிறுத்துவிட்டா ரிலங்கைக்கிறை தன்னைவிருப் பதன்மேல்
லறுத்துவிட்டா ரடியேனையை யாறனடிமைக் களே
பொறுத்துவிட்டார் தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழெனையே. ()

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விடகிலேனடி நாயேன் வேண்டியக்கால் யாதொன்று
மிடகிலேன் அமணர்கள் தமதுரைகேட் டமைந்தேன்
றொடுட்கின்றேன் அவன் றுண்ணடி தூமலர்ச்சேவடி காண்பா
னடைகின்றேனையா றற்காளாய்ப் பாறுய்ந்தேனே. (க)

செம்பவளத் திருவுருவர் திகழ்நீறாடிக் குழைக்காதர்
கொம்பமருங் கொடிமருங்கிற் கோல்வளையா ளொருபாகர்
வம்பவிழு மலர்க்கொன்றைச் சடைமேல்வைத் துகந்த
அம்பவளனை யையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

நணியானைச் சேயானைக் கம்பானைச் செம்பொன்னின்
துணியானைத் தோலானைக் கண்ணானை வெண்ணீற்றானை
மணியானை வானவர்க்கு மருந்தானைப் பிணிதீர்க்கும்
அணியானை யையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

வழித்தீயாய் நின்றுபுள் ளுவாருள்ளத் தாய்
வாழித்தீயாய் நின்றுபவர் முத்தவர் வாயானை
பாழித்தீயாய் நின்றுப்படர் சடைமேற் பனிமதிய
மாழித்தீயை யாறற் காளாய்நா னுய்ந்தேனே.

சடையானைச் சடையிடையே தவழுங்கம் பதியானை
விடையானை விடையேறிப் புரமெரித்த நின்மலனை
உடையானை யுடைதலைகொண் டூரிற் பலிக்குழலு
நடையானை யையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

நீரானைத் தீயானை நெய்யானைக் கனியானை
பாரானைப் புலத்தானை யுடலானை யுயிரானை
பேரானைப் பிறைசூடிப் பிணிதீர்க்கும் பெருமானென்
றாரானை யையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

கண்ணானை மணியானைக் கருத்தானை யருத்தனை
பெண்ணானைப் பெருத்தானைப் பெருந்திறலைக் கொடியவ்பானை
விண்ணானை விண்ணிடையே புரமெரித்த வேதியனை
பண்ணானை யையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

மின்னானை யுருமானை வேதத்தின் பொருளானைப்
பொன்னானை மணியானைப் பொருகடல்வாய் முத்தானை
நின்றானை யிருவர்க்குங் காண்பரிய பேரொளியை
மன்னானை யையாறற் காளாய்நா னுய்ந்தேனே.

முத்திசையும் புனற்பொன்னி மொய்பவளங் கொழித்தலைப்பப்
பத்தர்பலர் நீர்மூழ்கிப் பலகாலும் பணிந்தேத்த
வெத்திசையும் வானவர்கள் பெருமானே யெனவிறைஞ்சும்
அத்திசையா மையாறற் காளாய்நா னுய்ந்தேனே.



கருவரைசூழ் கடலிலங்கைக் கோமானைக் கருத்தழியத்
திருவிரலா லடர்த்தானைத் தென்குன்றாய்
பெருவளருங் கொழுமலர்வைத் தாரைப் பேய்க்கடியன் பெற்றாள்
மருவலாருள் மையாறற் காளாய்நா னுய்ந்தேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
யந்திப் பிறையணிந் தாடுமை யாறன் அடித்தலமே. (௧)

இழித்தன வேழேழ் பிறப்பும் அறுத்தன வென்மனத்தே
பொழித்தன போரெழிற் கூற்றை யுதைத்தன போற்றவர்க்காய்க்
கிழித்தன தக்கன் கிளரொளி வேள்வியைக் கீழ்முன்சென்று
அழித்தன வாறங்க மானவை யாறன் அடித்தலமே. (௨)

மணிநிற மொப்பன பொன்னிற மன்னின பின்னிலைப்பக்
கணிநிற மன்ன கயிலைப் பொருப்பன காதல்செய்யத்
துணிமணி சேர்த்தார்க் கொண்டார்த் தொண்டர்
பணிபவர் செய்யன தேவர்க்கை யாறன் அடித்தலமே. (௩)

இருடரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருடரு கண்ணிழந் துண்பொருள் நாடும் புகலிலிகள்
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருடரு கைகொடுத் தேற்றுமை யாறன் அடித்தலமே. (௪)

எழுவாய் இறுவாய் இலாதன வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவ மாவன மாநர கக்குழிவாய்
விழுவார் தம்மை மீட்பன பட்டணிக் கவண்போ
டுழுவார் கழுத்தகன் காண்கை யாறன் அடித்தலமே. (௫)

துன்பக் கடலிடைத் தோணித் தொழில்பூண்ட தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந் திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி செய்யுமப் பொய்யிலிமேல்
அன்பர்க் கணியன காண்கை யாறன் அடித்தலமே. (௬)

கனிந்தக்கவர்க்கோர் காதற்கசிவொடு விரிவாய்க்
குனித்தாற்றொழுதுமுன் னின்றபத்தர்க்குக் கோலச்செந்தேன்
தெளித்தச் சுவையமு தூட்டியமரர்கள் சூழிருப்ப
வளித்துப் பெருஞ்செல்வமாக்குமையா றனடித்தலமே. (எ)

திருத்திக் கருத்தினைச் செவ்வே நிறுத்திச் செறுத்துடலை
வருத்திக் கடிமலர் வாளெடுத் தோச்சி மருங்குசென்று
விருத்திக் குழக்கவல் லோர்கட்கு விண்பட் டிகையிடுமா
லருத்தித் தருந்தவர்க் காரமு தையா றனடித்தலமே. (அ)

பாடும்பறண்டையு மாந்தையு மார்ப்பப் பரந்துபல்பேய்
கூடிமுழவக் குவிகவிழ் கொட்டக் குறுநரிசே
ணீடெக்குழல்செய்ய வையகெளிய பிணைப்பிணைக்கொட்
டாடுந்திருவடி காண்கவையா றனடித்தலமே. (௯)

செவ்வேப்பாலமரர்கள் நின்முடி சாய்த்துயிர்த்துருத்த
பைம்போதுழக்கிப் பவளந்தழைப்பன பாங்கறியா
வெம்போர்வினைப் பதித்திட்ட வல்லியுமைதையும்பல்லா
மம்போதென்னக் கொள்ளுமையையா றனடித்தலமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மலையார் மடந்தை மனத்தன வானோர் மகுடமன்னி
நிலையா யிருப்பன நின்றோர் மதிப்பன நீணிலத்துப்
புலையாடு புன்மை தவிர்ப்பன பொன்னுல கம்மளிக்கும்
அலையார் புனற்பொன்னி சூழ்ந்தவையா றனடித்தலமே. (௧)

பொலம்புண் டரிகப் புதுமலர் போல்வன போற்றியென்பார்
புலம்பும் பொழுதும் புணர்துணை யாவன பொன்னனைய
சிலம்புஞ் செறிபா டகமுஞ் செழுங்கிண் கிணித்திரளு
மலம்புந் திருவடி காண்கவையா றனடித்தலமே. (௨)

உற்றா ரிலாதார்க் குறுதுணை யாவன வோதிநன்னூல்
கற்றார் பரவப் பெருமை யுடையன காதல்செய்ய
கிற்பார் தமக்குக் கிளரொளி வானகந் தான்கொடுக்கு
மற்றார்க் கரும்பொருள் காண்கவையா றனடித்தலமே. (௩)



வானைக் கடந்தண்டத் தப்பால் மதிப்பன மந்திரிப்பா
ருனைக் கழித்துய்யக் கொண்டருள் செய்வன வுத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன நங்கையஞ்ச
வானை யுரித்தன காண்கவையா றனடித்தலமே. (௪)

மாதர மானில மாவன வானவர் மாமுகட்டின்
மீதன மென்கழல் வெங்கச்சு வீக்கின வெந்நமனார்
தூதரை யோடத் துரப்பன துன்பறத் தொண்டுபட்டார்க்
காதர மாவன காண்கவையா றனடித்தலமே. (௫)

பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்கருளா
லேணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை யோர்முடிமேன்
மாணிக்க மொத்து மரகதம் போன்று வயிரமன்னி
யாணிக் கனகமு மொக்குமையா றனடித்தலமே. (௬)

ஓதிய ஞானமு ஞானப் பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணு மண்ணுஞ்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோ
டாதியு மந்தமு மானவையா றனடித்தலமே. (எ)

சுணங்குமுகத்துத் துணைமுலைப் பாவை சுரும்பொடுவண்
டணங்குங் குழலி யணியார் வளைக்கரங் கூப்பிநின்று
வணங்கும் பொழுதும் வருடும் பொழுதும் வண்காந்தளொண்போ
தணக்குமணிக்க மொக்குமையா றனடித்தலமே. (அ)

கழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னு
நிழலா வனவென்று நீங்காப் பிறவி நிலைகெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ காலவ னங்கள்தந்த
அழலா ரொளியன காண்கவையா றனடித்தலமே. (௯)

வலியான் றலைபத்தும் வாய்விட் டலறவரை யடர்த்து
மெலியா வலியுடைக் கூற்றையு மோதித் துவின்றோர்கண் முன்னே
பலிசேர் படுகடைப் பார்த்துப்பன நூறும் பலிகழு
வலியா கிமிற்றுமையையா றனடித்தலமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருவையாறு - திருவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அந்திவட்டத்திங்கட்கண்ணியனையாறமர்ந்தவெந்தன்
புந்திவட்டத்திடைப்புக்குநின்றானையும்பொய்யென்பனோ
சிந்திவட்டச்சடைக்கற்றையலம்பச்சிறிதலர்ந்த
நந்திவட்டத்தொடுகொன்றைவளாவியநம்பனையே. (௧)

பாடகக்கால்கழற்கால்பருதிக்கதிர்க்கவர்தி
நாடகக்கானகைமுன்செக்கணேனத்தின்பின்னடந்த
காடகக்கால்கணக்கைதொழுங்காலெங்கணுயின்றகா
வாடகக்காலவிமானநேர்வலவையாற்றனையே. (௨)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவாய்தலுளான்வந்துசீரியன்
பொந்துவார்புலால்வெண்டலைக்கையினன்
முந்திவாயதோர்மூவிலைவேல்பிடித்
தந்திவாயதோர்பாம்பரையாறரே. (௧)

பாகமாலைமகிழ்ந்தனர்பான்மதி
போகவானையினுரிபோர்த்தவர்
தோகமாலைகுலாயதோர்கொன்றையு
மாகவாவெனயந்தாடுமையாறரே. (௨)

நெஞ்சமென்பதோர்நீள்கயந்தன்னுளே
வஞ்சமென்பதோர்வான்சுழிப்பட்டுநான்
துஞ்சும்போழ்துநின்னாமத்திருவெழுத்
தஞ்சுந்தோன்றவருளுமையாறரே. (௩)

நினைக்குநெஞ்சினுள்ளார்கெடுமாதிரம்
அனைத்துமொள்ளழல்வாயெரியூட்டினார்
பனைக்கைவேழத்துரியுட்போர்த்தவ
னனைத்துவாயதுளானுமையாறரே. (௪)



பரியர்நுண்ணியர்பார்த்தற்கரியவர்
அரியபாடலராடலராயினும்
கரியகண்டத்தர்காட்சிபிறர்க்கெலாம்
அரியர்தொண்டர்க்கெளியரையாறரே. (௫)

புலரும்போதுமிலர்பட்டபோதன்கட்
மலரும்போதுகளாற்பணிபவர்க்கிலை
இலரும்போதுமிலாதனுமன்றியும்
அலரும்போதுமணியுமையாறரே. (௬)

பங்கமாலைக்குழலியோர்பாலினன்
கங்கைமாலையாக்காதன்மைசெய்தவர்
பங்கமாலைமதியமுங்கண்ணியும்
அங்கமாலையுஞ்சூடுமையாறரே. (௭)

முன்னையாறுமுயன்றெழுவீரெலாம்
பின்னையாறுபிரியெனும்பேதைகாள்
மன்னையாறுமருவியமாதவன்
றன்னையாறுதொழத்தவமாகுமே. (௮)

ஆனையாறெனவாடுமின்றன்முடி
வானையாறுவளாயதுகாதலித்தேறு
தானையாறுபுக்கேத்தவல்லார்க்கருள்
தேனையாறுதிறக்கவல்லார்க்குமே. (௯)

அரக்கின்மேனியனந்தளிர்மேனியன்
அரக்கின்சேவடியாளஞ்சப்பஞ்சவென்
றரக்கனீரைந்துவாயுமலறவே
யரக்கினானடியாறமையாறனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைவண்ணத்தராய்த்திறம்பாவணம்
முந்திவண்ணத்தராய்முழுநீறணி
சந்திவண்ணத்தராய்த்தழல்போல்வதோர்
அந்திவண்ணத்தரையாறரே. (௧)

மூலவண்ணத்தராய்முதலாகிடு
கோலவண்ணத்தராகிக்கொழுஞ்சுடர்
நீலவண்ணத்தராகிநெடும்பளிங்
காலவண்ணத்தராய்மையாறரே.

சிக்கைதவண்ணமுந்திபதார்வண்ணமும்
அத்திப்போதழகாகியவண்ணமும்
பத்திக்காலனைப்பாய்ந்தோர்வண்ணமும்
அத்திவண்ணமுமாமையாறரே. (௩)

இருளின்வண்ணமுமேழிசைவண்ணமுங்
கருளின்வண்ணமுஞ்சோதியின்வண்ணமு
மருளுநான்முகன்மாலொடுவண்ணமும்
அருளும்வண்ணமுமாமையாறரே. (௪)

இடிமின்வண்ணங்களாகியவெவ்வழல்
குழைக்கும்வண்ணங்களாகியுங்கூடியு
மழைக்கண்மாமுகிலாயவண்ணமும்
அழைக்கும்வண்ணமுமாமையாறரே. (௫)

இண்டைவண்ணமுமேழிசைவண்ணமுந்
தொண்டர்வண்ணமுஞ்சோதியின்வண்ணமுங்
கண்டவண்ணங்களாய்க்கனல்மாமணி
பண்டைவண்ணமுமாமையாறரே. (௬)

விரும்பும்வண்ணமும்வேதத்தின்வண்ணமுங்
கரும்பின்மென்மொழிக்காரிகைவண்ணமும்
விரும்புவார்வினைதீர்த்திடும்வண்ணமும்
அரும்பின்வண்ணமுமாமையாறரே. (௭)

ஊழிவண்ணமுமொண்சுடர்வண்ணமும்
வேழவீருரிபோர்த்தோர்வண்ணமும்
வாழித்தீயுருவாகியவண்ணமும்
ஆழிவண்ணமுமாமையாறரே. (௮)

செய்தவன்திருநீறணிவண்ணமும்
எய்தநோக்கரிதாகியவண்ணமுங்
கைதுகாட்டெரியேந்தார்வண்ணமும்
ஐதுவண்ணமுமாமையாறரே.



எடுத்தவாளரக்கன்றிறல்வண்ணமும்
இடர்கள்பேறுபெரிதாகியவண்ணமுங்
கடுத்தகைக்கரம்பாவிசைவண்ணமு
மடுத்தவண்ணமுமாமையாறரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரார்திரிபுரங்கணீறாநோக்குமனலாடியாரமுதேயென்றேனானே, கூரார்மழுவாட்படையென்றேந்திக் குறட்பூதப்பல்படையாயென் றேனானே, பேராயிரமுடையாயென்றேனானே பிறைதங்கும்பிஞ்ஞக னேயென்றேனானே, யாராவமுதேயென்னையாறனேயென்றென்றே நானரற்றிநைகின்றேனே. (௧)

நீராயின்முப்புரங்கணீறாநோக்குந்தீத்தபுராணனேயென்றே னானே, மூவாமதிசூடியென்றேனானே முதல்வாமுக்கணனேயென் றேனானே, யேவார்சிலையானேயென்றேனானே யிடும்பைக்கடலின் மு ழுகாவண்ணம், யாவாவென்றருள்புரியுமையாற்றேயென்றென்றேநான ரற்றிநைகின்றேனே. (௨)

அருந்தவன்னவண்ணனேயென்றேனானேயடியார்கட்காரமுதேயெ ன்றேனானே, கருசணிகண்டனேயென்றேனானே நாவலர்கண்மறை யேயென்றேனானே, விரைசுசுமைவன்புக்கிருந்தபோதணிந்தயுமழுத மேயென்றேனானே, ஐயாசெய்யாள்வண்ணனையையாறனேயென்றென் றேநானரற்றிநைகின்றேனே. (௩)

தொல்லைத்தொடுகடலேயென்றேனானே துலங்குமிளம்பிறையா யென்றேனானே, மெல்லியிறைதந்தானேயென்றேனானே வேழ்நரம்பி னின்னிசையாயென்றேனானே, யல்லற்கடல்புக்கழுந்துவேனைவாங்கி யருள்செய்தாயென்றேனானே, யெல்லையாமையாறனேயென்றேனானே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௪)

இண்டைச்சடைமுடியாயென்றேனானே யிருசுடர்வானத்தாயெ ன்றேனானே, தொண்டாற்றிருப்பவனாயென்றேனானே துருத்தியிலே யிருந்தாயென்றேனானே, கண்டங்கறுத்தானேயென்றேனானே கனலாடுங்கண்ணுதலேயென்றேனானே, பண்டைத்துறைப்பாலையையா றனேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௫)

பற்றார்புரமெரித்தாயென்றேனானே பசுபதீ பண்டரங்காவென்றேனானே, கற்றார்கனுரைக்குங்கனியென்றேனானே கடுவிடையொன்றூர்தியென்றேனானே, பற்றாளியென்றேனானே பார்த்தற்கருள்செய்தாயென்றேனானே, பற்றாயருள்செய்யுமையாறனேயென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௬)

மின்னேர்தனுவுடையாயென்றேனானே விண்ணருளின்மைபாயென்றேனானே, பொன்னுருவமேனியனேயென்றேனானே கேசம்பமேயானேயென்றேனானே, பன்னார்மறைபாடியென்றேனானே பசுபதியாலீற்றவென்றேனானே, பண்ணுமையாறனேயென்றேனானேயென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (எ)

அவ்வென்றுநாதனென்னையந்தாதேவியல்லைநாப்பாளையென்றேனானே, இவனென்றுநாதுனனையெல்லாஞ்சொல்லச்செல்வக்கருணையேனயென்றேனானே, பவனுமியென்னுள்ளத்துள்ளேயின்றுயன்னையின்னிறப்பாயென்றேனானே, யவனென்றேயாதியேயையாறனேயென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (அ)

அச்சியேகம்பனேயென்றேனானே கயிலாயாகாரோகணவென்றேனானே, நிச்சனமன்றோமெயென்றேனானேயிமைப்பார்மனத்துளாயென்றேனானே, யுச்சம்போதேநீயென்றேனானேயுள்ளுவாருள்ளத்தாயென்றேனானே, யச்சம்பிணிதீர்க்குமையாறனேயென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௯)

வில்லாடிவேடனேயென்றேனானே வெண்ணீறுமெய்க்கணிந்தாயென்றேனானே, சொல்லாயசூழலாயென்றேனானே சுலாவாயதொன்னெறியேயென்றேனானே, எல்லாமாயென்னுயிரேயென்றேனானே யிலங்கையர்கோன்றோளிறுத்தாயென்றேனானே, யல்லாவினைதீர்க்குமையாறனேயென்றென்றேநானரற்றி நைகின்றேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

---

## திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலாமானாய்நீயே யுலகுக்கொருவனாய்நின்றாய்நீயே வாசமலரெலாமானாய்நீயே மலையான்மருகனாய்நின்றாய்நீயே பேசப்பெரிதுமினியாய்நீயே பிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே தேசவிளக்கெலாமானாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ.



நோக்கரியதிருமேனியுடையாய்நீயே நோவாமேநோக்கருளவல்லாய்நீயே, காப்பரியவைம்புலனுங்காத்தாய்நீயே காமனையுங்கண்ணழலாற்காய்ந்தாய்நீயே, யார்ப்பரியமாநாகமார்த்தாய்நீயே யடியான்றன்மேல்வைத்தாய்நீயே, தீர்ப்பரியவல்வினைநோய்தீர்ப்பாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௨)

கனத்தகத்துக்கடுஞ்சுடராய்நின்றாய்நீயே கடல்வரைவானாகாயமானாய்நீயே, தனத்தகத்துத்தலைகலனாக்கொண்டாய்நீயே சார்ந்தாரைத்தகைந்தாளவல்லாய்நீயே, மனத்திருந்தகருத்தறிந்துமுடிப்பாய்நீயே மலர்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, சினத்திருந்ததிருநீலகண்டன்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௩)

வானுற்றமாமலைகளானாய்நீயே வடகயிலைமன்னியிருந்தாய்நீயே, யூனுற்றவொளிமழுவாட்படையாய்நீயே யொளிமதியோடரவுபுனல்வைத்தாய்நீயே, யானுற்றவைந்துமமர்ந்தாய்நீயே யடியானென்றடியென்மேல்வைத்தாய்நீயே, தேனுற்றசொன்மடவாள்பங்கன்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௪)

பெண்ணாண்பிறப்பிலியாய்நின்றாய்நீயே பெரியார்கட்கெல்லாம்பெரியாய்நீயே, புண்ணாவருநஞ்சமுண்டாய்நீயே யூழிமுதல்வனாய்நின்றாய்நீயே, கண்ணாவுலகெலாங்காத்தாய்நீயே கழற்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, திண்ணார்மழுவாட்படையாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௫)

உற்றிருந்தவுணர்வெலாமானாய்நீயே யுற்றவர்க்கோர்சுற்றமாய்நின்றாய்நீயே, கற்றிருந்தகலைஞானமானாய்நீயே கற்றவர்க்கோர்கற்பகமாய்நின்றாய்நீயே, பெற்றிருந்ததாயவளினல்லாய்நீயே பிரானாயடியென்மேல்வைத்தாய்நீயே, செற்றிருந்ததிருநீலகண்டன்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ. (௬)

எல்லாவுலகமுமானாய்நீயே யேகம்பமேவியிருந்தாய்நீயே, நல்லாரைநன்மையறிவாய்நீயே ஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே, பொல்லாவினைகளறுப்பாய்நீயே புகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே, செல்வாயசெல்வந்தருவாய்நீயே திருவையாறகலாதசெம்பொற்சோதீ.

[illegible] தாயநீயே [illegible] புலித்தோல் [illegible] நின்றாய்நீயே [illegible] தாய் நீயே, [illegible] நின்றாய்நீயே [illegible] வைத்தாய்நீயே, [illegible] திருவையாறகலாதசெம்பொற்சோதீ.

எண்டிசைக்கும் ஒண்சுடராய் நின்றாய் நீயே யெவ்வுயிர்க்கும் உயிராய் நின்றாய் நீயே, வெண்மதியைத் தாங்குசடையாய் நீயே வானவர்க்கும் அரியாய் நீயே, என்றுமடியார்க்கு இனியாய் நீயே, இன்னிசையும் உரைசெய்தாய் நீயே, தின்றிலைக்கோர் சரணடைந்தார்க்கு அரணாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (௯)

விண்டார்புரமூன்று எரித்தாய் நீயே விண்ணவர்க்கும் மேலாகிநின்றாய் நீயே, கண்டாரைக் கொல்லுநஞ்சுண்டாய் நீயே காலனைக் காலாலுதைத்தாய் நீயே, தொண்டாயடியேனை யாண்டாய் நீயே தூமலர்ச்சேவடியென் மேல்வைத்தாய் நீயே, இண்டைநல்லிட்டேரியாட வல்லாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ. (௰)

அருமையிலெளிமையாய் நின்றாய் நீயே அரவாலல்லாய் நீயே, பெரும்பெரியவிலங்கை வேந்தன் பெரியமுடிபத்திறுத்தாய் நீயே, புரமூன்றுமட்டாய் நீயே பொன்மலையாளுமையாளுக்கிடத்தாய், திருவடியென்மேல் வைத்தாய் நீயே திருவையாறகலாத செம்பொற்சோதீ.

திருச்சிற்றம்பலம்.

---

௨.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

## திருவையாறு - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான் பண்டேயுமைப்பயிலாதேன்
இரவும்பகலும்நினைந்தாலும் எய்தநினையமாட்டேனான்
கரவில்அருவிகமுகுண்ணத் தெங்கங்குலைக்கீழ்க்கருப்பாலை
அரவந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௧)

எங்கேபோவேனாயிடினும் அங்கேவந்தென்மனத்தீராய்
சங்கையொன்றுமின்றியே தலைநாள்கடைநாளொக்கவே
கங்கைசடைமேற்கரந்தானே கலைமான்மறியுங்கனல்மழுவுந்
தங்குந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௨)

மருவிப்பிரியமாட்டேனான் வழிநின்றொழிந்தேனொழிகிலேன்
பருவிவிச்சிமலைச்சாரற் பட்டைகொண்டுபகடாடிக்
குருவியோப்பிக்கிளிகடிவார் குழல்மேன்மாலைகொண்டோட்டந்
தருவித்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௩)



பழகாநின்றுபணிசெய்வார் பெற்றபயனொன்றறிகிலேன்
இழுதாநமக்காட்பட்டோர்க்கு ஒருவகைபடாமோன்றனைசாத்தி
குழகாவாழைக்குலைதெங்கு கொணர்ந்துகரைமேலெறியவே
அழகார்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௪)

பிழைத்தபிழையொன்றறியேனான் பிழையைத்தீரப்பணியாயே
மழைக்கண்நல்லார்குடைந்தாட மலையுநிலனுங்கொள்ளாமைக்
கழைக்கொள்பிரசங்கலந்தெங்குங் கழனிமண்டிக்கையேறி
அழைக்குந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௫)

கார்க்கொள்கொன்றைச்சடைமேலொன் றுடையாய்விடையாய்கையினால்
ஆர்க்கப்புரமூன்றெரிசெய்தாய் முன்னீபின்னீமுதல்வனீ
வார்க்கொளருவிபலவாரி மணியுமுத்தும்பொன்னுங்கொண்
டார்க்குந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௬)

மலைக்கண்மடவாளொருபாலாய்ப் பற்றியுலகம்பலிதேர்வாய்
சிலைக்கொள்கணையாலெயிலெய்தாய் செங்கண்விடையாய்தீர்த்தனே
மலைக்கொளருவிபலவாரி மணியுமுத்தும்பொன்னுங்கொண்
டலைக்குந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௭)

போழும்மதியும்புனக்கொன்றைப் புனல்சேர்சென்னிப்புண்ணியா
சூழுமரவச்சுடர்ச்சோதியுன்னைத்தொழுவாரவர்போக
வாழுமவர்களங்கங்கே வைத்தசிந்தையுய்ந்தாட்ட
வாழுந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௮)

கதிர்க்கொள்பசியேயொத்தே நான்கண்டேனும்மைக்காணாதே
எதிர்த்துநீந்தமாட்டேனான் எம்மானெம்மானெம்மானே
விதிர்த்துமேகமழைபொழிய வெள்ளம்பரந்துநுரைசிதறி
அதிர்க்குந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௯)

கூடியடியாரிருந்தாலுங் குணமொன்றில்லீர்குறிப்பில்லீர்
ஊடியிருந்துமுணர்கிலேன் உம்மைத்தொண்டனூரனேன்
தேசமெங்குந்தெளித்தாடத் தெண்ணீரருவிகொணர்ந்தெங்கும்
வாசந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௰)

கூடியடியாரிருந்தாலுங் குணமொன்றில்லீர்குறிப்பில்லீர்
ஊடியிருந்துமுணர்கிலேன் உம்மைத்தொண்டனூரனேன்
தேடியெங்குங்காண்கிலேன் திருவாரூரேசிந்திப்ப
ஆடுந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

419

023.38.21193.TA

NO7

58706